பக்கங்கள்: இருபத்து நான்கு

# வலம்புரி Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 கார்த்திகை 24 வெள்ளிக்கிழமை (09.12.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 356

WESTERN UNION MONEY TRANSFER உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Wastern Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும் தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளவும்

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம் 303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். T.P. No :-021222 5392

### சட்டவிரோத பௌத்த மயமாக்கலை எதிர்க்கும்

# வடக்கின் தீர்மானம் குப்பைத் தொட்டிக்குள்

## வீசியெறிந்தார் நீதியமைச்சர் விஜயதாஸ



(கொழும்பு)

வட பகுதியில் புத்தர் சிலைகள் மற்றும் விகாரை நிறுவுவதை தடுக்க வேண்டுமென மாகாண சபையில் தீர்மானம் நிறைவேற்றுவதற்கு வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு அதிகாரம் வழங்கியது யார் எனக் கேள்வி எழுப்பிய நீதி மற்றும் பௌத்த சாசன அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, பௌத்த விகாரைகளையும் புத்தர் சிலைகளையும் அமைக்க வேண்டாம் என்று பிரேரணை நிறைவேற்றுவதற்கு வட மாகாணத்திற்கு எந்த அதிகாரமும் இல்லை என குறிப்பிட்டு நிறைவேற்றப்பட்ட வடக்கு சபையின் தீர்மானத்தை குப்பைத் தொட்டிக்குள் எறிவதாகவும் தெரிவித்துள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க....

## எதிர்க் கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டும்

### நிர்ப்பந்திக்கிறது ஜாதிக ஹெல உறுமய



(கொழும்பு)

தமிழ் மக்களுக்கு எதிராக சிங்களவர்கள் மேற்கொண்ட அடாவடித்தனங்களுக்கு சிங்கள தலைவர்கள் பகிரங்கமாக மன்னிப்புக்கோரியதைப் போல் தமிழர் தரப்பினாலும் ஆயுதக் குழுக்களினாலும் மேற்கொள்ளப்பட்ட அராஜகங்களுக்கு

23ஆம் பக்கம் பார்க்க....



### போலியான முகநூலை பயன்படுத்தி

## மைத்திரி, ரணில், சம்பந்தனுக்கு அச்சுறுத்தல்; இளைஞனுக்கு மறியல்

(கொழும்பு)

ஜனாதிபதி, பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித்தலைவர் ஆகியோரை, போலியான முகநூலொன்றை பயன்படுத்தி அச்சுறுததினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்ட இளைஞனை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. குறித்த இளைஞனை எதிர்வரும் 15ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

விசாரணைகள் நிறைவடையும் வரை சந்தேக நபருக்கு பிணை வழங்க எதிர்ப்பு தெரிவிப்பதாக, இரகசியப் பொலிஸார் நீதிமன்றத்தில்

23ஆம் பக்கம் பார்க்க....

### சமஷ்டி கோரிக்கையை கைவிட்டு

## ஒன்றையாட்சிக்குள் தீர்வு காண தமிழ்த் தலைவர்கள் தயார்!

### ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கருத்து

(கொழும்பு)

தேசியப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான சமஷ்டி கோரிக்கையை கைவிட்டு, ஒற்றையாட்சிககுள் தீர்வுகாண்பதற்கு தமிழ்த் தலைவர்கள் உடன்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர, ஒற்

24ஆம் பக்கம் பார்க்க....

## முஸ்லிம்கள் ஆயுதம் ஏந்தும் ஆபத்தான நிலை ஏற்படும்

### அமைச்சர் ஹிஸ்புல்லா எச்சரிக்கை

(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கம் இனவாத செயற்பாடுகளை தடுக்காவிட்டால் முஸ்லிம் இளைஞர்கள் ஆயுதம் ஏந்துவதை தவிர்க்க முடியாது போகும் என புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா நாடாளுமன்றத்தில் நேற்று தெரிவித்தார்.

முஸ்லிம் சமய அலுவல்கள் மற்றும் தபால் சேவைகள் அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீதான விவாதம் நேற்று நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே

23ஆம் பக்கம் பார்க்க....

## புலியிடமா ரணில் மன்னிப்பு கேட்டார் கம்மன்பில கேள்வி

(கொழும்பு)

யாழ்.நூலகத்தை புலிகளே எரித்தனர். புலிகள் எரித்ததன் பின்னரே, தெற்கு குண்டர்களை பயன்படுத்தி, நூலகத்துக்கு எரியூட்டப்பட்டது என்று தெரிவித்த ஒன்றிணைந்த எதிர்க் கட்சியின் நாடாளுமன்ற

04ஆம் பக்கம் பார்க்க....

### யாழ்.பல்கலை மாணவர்கள்

## மோதல், கலவர வழக்கு வாபஸ்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் கண்டிய நடனத்தினால் தமிழ், சிங்கள மாணவர்களுக்கு இடையில் இடம்பெற்ற மோதல், கலவரம் தொடர்பான வழக்கு விசாரணையில் தமிழ், சிங்கள இரு தரப்பு மாணவர்களும்

23ஆம் பக்கம் பார்க்க....

## வடக்கில் முளைக்கும் விகாரைகள்

### ஜே.வி.பியின் கருத்துக்கு சிறிதரன் எம்.பி பதில்



(கொழும்பு)

வடக்கில் புதிதாக பௌத்த விகாரைகள் அமைக்கப்படவில்லை என்ற ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத்தின் கருத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் நிராகரித்துள்ளார்.

நேற்று நாடாளுமன்றில் இடம்பெற்ற அடுத்த வருடத்திற்கான வரவு செலவுத் திட்டத்தின், நீதி மற்றும் பௌத்த சாசன அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பிலான குழுநிலை விவாதத்தில் கலந்து

23ஆம் பக்கம் பார்க்க....




நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி. வழங்குனர்களை பதிவு செய்தல் - 2017

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையானது 2017 ம் ஆண்டுக்கான கீழ் குறிப்பிடப்பட்ட பொருட்கள், வேலைகள். சேவைகள் வழங்குவதற்கு தம்மை பதிவு செய்து கொள்ள விரும்பும் வழங்குனர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோருகின்றது.

தொகுதி "A" பொருட்கள் வழங்குதல் (பொது)
தொகுதி "B" சேவைகள் / வேலை
தொகுதி "C" வாகனதிருத்தமும் சுத்திகரிப்பு செய்தலும்
தொகுதி "D" ஒப்பந்த வேலைகள்

| தொகுதி A | பொருட்கள் வழங்குதல் (பொது) |
|---|---|
| A-01 | காகிதாதிகள் எழுதுபொருட்கள் உபகரணங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்கள் |
| A-02 | நூலகங்களுக்கான நூல்கள் |
| A-03 | தளபாடங்களும், அலுவலக உபகரணங்கள் |
| A-04 | கணனிகள்,கணனியுடன் தொடர்புடைய ஏனைய உபகரணங்கள், நிழல்பிரதியாக்கல் இயந்திரம், தொலைநகல் இயந்திரம்,இவற்றுடன் தொடர்புடைய ரோனர்கள்,ரிபன்கள் மற்றும் ஏனைய அலுவலக மின் உபகரணங்கள் |
| A-05 | திரைச்சீலைகள்,சீருடை மற்றும் துணிவகைகள் |
| A-06 | குளியலறை பொருத்திகள் மாபிள்கல் வகைகள், நீர் வழங்கலுக்கான பொருட்கள் மற்றும் அதனோடிணைந்த பொருட்கள் |
| A-07 | கட்டட இரும்புப்பொருட்கள்,பெயின்ற் வாணிஸ் மற்றும் காடவெயார் பொருட்கள் |
| A-08 | மின்சாரப் பொருட்கள் அதன் உதிரிப்பாகங்கள், மின்னிணைப்புக்கான பொருட்கள்,மின் மோட்டார்கள், மின்சார பல்ப்புக்கள், மின்விசிறிகள் மற்றும் அதனோடிணைந்த பொருட்கள |
| A-09 | தும்புத்தடி,விளக்குமாறு,கால்துடைப்பம், மொப்பர் மற்றும் ஏனைய பொருட்கள் |
| A-10 | சுத்திகரிப்புப்பொருட்கள் மற்றும்கிருமிநாசினிகள் |
| A-11 | வாகன உதிரிப்பாகங்கள், துணைப்பொருட்கள், ரயர், ரீயுப் மற்றும் ஏனையவை |
| A-12 | தோல் உற்பத்திப் பொருட்கள், கம்பூஸ்க்கள் |
| A-13 | இலத்ரனியல் சாதனங்கள், துணைபொருட்கள் |
| A-14 | எரிபொருட்கள், உராய்வு நீக்கிகள் |
| A-15 | கற்கள்,மண் வகைகள் |
| A-16 | தீராந்திகள்,பலகைகள் |
| A-17 | அலங்காரப் பொருட்கள் |
| A-18 | பனைமரங்ககள்,சலாகைகள் |

| தொகுதி B | சேவைகள் / வேலை |
|---|---|
| B-01 | மரத் தளபாடங்கள், உருக்கு தளபாடங்கள் திருத்தம் |
| B-02 | மின்சாரப் பொருட்கள் அதன் உதிரிப்பாகங்கள், மின் மோட்டார்கள், மின்விசிறிகள் மற்றும் அதனோடிணைந்த பொருட்கள் நிழல்பிரதியாக்கல் இயந்திரம், தொலைநகல் இயந்திரம்,கணனி விரல் அடையாளத்தை பதிவு செய்யும் இயந்திரம் திருத்தம் |
| B-03 | இலத்ரனியல் சாதனங்கள், துணைபொருட்கள் திருத்தம் |
| B-04 | இறப்பர் முத்திரை வகைகளை தயாரித்து வழங்கல் |
| B-05 | கோலவுடை தைத்தல் |
| B-06 | சுத்திகரிப்பு சேவையும் பாதுகாப்பு சேவையும |
| B-07 | கணனி,பிறின்ரர் அதனுடன் இணைந்த பொருட்கள் திருத்தமும், பராமரிப்பு செய்தலும் |
| B-08 | அச்சிடல், புத்தகங்கள் கட்டுதல் |
| B-09 | ஏற்றியிறக்கும் சேவை (தார் முதலான வீதி மூலப் பொருட்கள் மற்றும் கட்டிட மூலப் பொருட்கள்) |

| தொகுதி "C" | வாகனதிருத்தமும் சுத்திகரிப்பு செய்தலும் |
|---|---|
| C-01 | சகல விதமான வாகன சுத்திகரிப்பு / உராய்வு நீக்கிகள் |
| C-02 | வாகனங்களுக்குரிய ரியுப் ஒட்டுதல், உலோக வேலைகள் |
| C-03 | உழவு இயந்திர, உழவு இயந்திரப்பெட்டி திருத்தம் |
| C-04 | சகல விதமான வாகன திருத்தம் |
| C-05 | நீர் இறைக்கும் இயந்திர திருத்தம் |
| C-06 | மோட்டார் சயிக்கில் திருத்தம் |

| தொகுதி D | ஒப்பந்த வேலைகள் |
|---|---|
| D-01 | கட்டட நிர்மாணமும், திருத்தம் |
| D-02 | வீதி நிர்மாணமும், திருத்தம் |
| D-03 | கிணறு அமைத்தல் |

## நிபந்தனைகள

- வழங்கல்கள் / சேவைகள் 2017 ம் ஆண்டிற்கு மட்டும் செல்லுபடியானதாகும்.
- ஒவ்வொரு தொகுதியினதும் தொடர் இலக்கம் ஒவ்வொன்றுக்கும் தனித்தனி விணைப்பபடிவங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
- விண்ணப்பபடிவங்களை ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் எமது தலைமை அலுவலகத்தில் ரூபா.1000.00 (VAT,NBT நீங்கலாக) செலுத்தி தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
- விண்ணப்பபடிவங்கள் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வழங்கல்கள் / சேவைகள்2017 எனக்குறிப்பிட்டு செயலாளர், வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி. எனும் முகவரிக்கு 30.12.2016ந் திகதிக்கு முன்னர் பதிவுத்தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
- திருப்திகரமற்ற வழங்கல்கள் / சேவைகளை நிராகரிக்கும் உரிமை செயலாளருக்கு உண்டு.
- பதிவிற்காகப் பெறப்பட்ட விண்ணப்பங்களை எதுவித காரணங்களும் தெரிவிக்காமல் நிராகரிக்கும் உரிமை செயலாளருக்கு உண்டு.
- மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்

திரு.அருணகிரி வினோராஜ்
செயலாளர்,
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை,
கரவெட்டி.

(C-6623)

# வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை பொது அறிவித்தல் - 2017

**01. படவரைஞராகப் பதிவுசெய்தல்**

2017 படவரைஞராகப் பதிவு செய்வதற்கு புதிதாக விண்ணப்பிப்பவர்களும் ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்தவர்களும் 2017ஆம் ஆண்டு மார்ச் 31 ம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளைச் செய்து கொள்ளவும் மேலதிக விபரங்களுக்கு எமது தலைமை அலுவலகத் திட்டமிடல் பகுதியுடன் தொடர்பு கொள்ளவும்.

**02. வியாபார உரிம அனுமதிப்பத்திரம் - 2017**

இப்பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர், பொருட்களை விநியோகிப்போர் 2017 ம் ஆண்டிற்கான அனுமதிப்பத்திரத்தினைப் பெறுவதற்கான விண்ணப்பப்பத்திரத்தினை தமது பிரிவுக்கு உட்பட்ட உப அலுவலகங்களில் நேரடியாகச் சென்று பெற்று அதனை பூரணப்படுத்தி நெல்லியடி, உடுப்பிட்டி, கட்டைவேலி உப அலுவலகங்களில் சமர்ப்பிக்குமாறும் உரிய கட்டணங்களை 31.03.2017 ம் திகதிக்குள் செலுத்தி உரிமத்தைப் பெற்றுக்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கிறேன். 01.04.2017 ம் திகதி முதல் வியாபார உரிமம் அற்ற நிலையங்கள், வியாபார நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**03. வீடமைப்பு நகர சீர்திருத்த கட்டளைச்சட்டம் பிரிவு 268 இன் பிரகாரம் அறிவித்தல்**

3.1 வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபையின் அனுமதியின்றி சபை எல்லைக்குள் அரச மற்றும் தனியார் கட்டடங்கள், மதில், மலசலகூடங்கள், கிணறுகள், குழாய்கிணறுகள் என்பவற்றை அமைத்தல், புதுப்பித்தல், மேலதிக வேலைகளைச் செய்தல் போன்றன பிரதேச சபைச் சட்டத்தின் படி தண்டனைக்குரிய குற்றம் என்பதை அறியத்தருகிறேன்.

3.2 ஏற்கனவே அனுமதி பெற்றவர்கள் கட்டடம் கட்டி முடிக்கப்படாத பட்சத்தில் அனுமதியை மீளப் புதுப்பித்தல்வேண்டும்.

3.3 சபையின் அனுமதி பெற்று கட்டடம் கட்டி முடித்தவர்கள் கட்டி முடிக்கப்பட்டமை தொடர்பாக அலுவலகத்திற்கு அறியத்தந்து உரிய அமைவுச் சான்றிதழை பெற்றுக்கொள்ள வேண்டும்.

**04. விளம்பரங்களை அமைத்தல் / காட்சிப்படுத்தல்**

இப்பிரதேசசபையின் நிர்வாகப்பிரிவில் உள்ள பொதுவீதிகளின் இருமருங்கிலும் அத்துடன் வர்த்தக நிலையங்களின் முகப்புக்களிலும் பொருத்தப்பட்டு காட்சிப்படுத்தப்படும் விளம்பரங்களை 31.03.2017 ம் திகதிக்கு முன்னர் உரிய கட்டணத்தைச் செலுத்தி சபையின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள வர்த்தகர்கள் தமது வர்த்தக நிலையங்களின் விளம்பரங்கள் இல்லாத பெயர்ப் பலகை ஒன்றுமட்டும் இலவசமாகக் காட்சிப்படுத்த முடியும். விளம்பரங்களுடனான பெயர்ப் பலகை மற்றும் மேலதிகமாக உள்ள பெயர்ப்பலகைகளுக்கு பிரதேச சபையின் அனுமதி பெறப்படல்வேண்டும். அவ்வாறு அனுமதி பெறப்படாத பெயர்ப்பலகைகள் பிரதேசசபையால் முன்னறிவித்தல் இன்றி அகற்றப்படும்.

**05. பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகளுக்கு அண்மித்த பகுதியில் வைத்து கடலுணவு, மரக்கறிகள், இறைச்சி, உயிர்க்கோழிகள் விற்பனையைத் தடைசெய்தல்**

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபையின் பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள் அமைந்துள்ள பகுதிகளில் **1 Km** வரையான சுற்றாடலில் கடலுணவு, மரக்கறிகள், இறைச்சி என்பன வர்த்தக நிலையங்களிலோ வீதியோரங்களிலோ விற்பனை செய்தல் முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது. இதனை மீறுபவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை அறியத்தருகிறேன்.

**06. பொது இடங்களில் கழிவுகள் போடுதல்**

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் கழிவுப் பொருட்களை அனுமதியின்றி கொண்டுசெல்லல். கொட்டுதல் ஆகியன பொதுச் சுகாதாரத்தை கருத்தில் கொண்டு தடைசெய்யப்பட்டுள்ளது.

தவறின் பிரதேசசபைச்சட்டம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புச்சட்டம் போன்றவற்றின் பிரகாரம் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.

**07. பொது இடங்களிலும் வர்த்தக நிலையங்களிலும் வீதியோரங்களிலும் கழிவுப் பொருட்களை போடுதல் தடைசெய்யப்பட்டுள்ளது.**

பொதுமக்களின் சமையலறைக் கழிவுகள் மட்டுமே இலவசமாக அகற்றப்படும், வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் உரிய கொள்கலனில் கழிவுப்பொருட்களை சேகரித்து அதனை அகற்றுவதற்கு எமது சபையின் உப அலுவலகத்தில் உரிய கட்டணத்தைச் செலுத்தி பற்றுச்சீட்டை பெற்று கழிவுகளை எம் ஊழியர்கள் மூலம் அகற்றி சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கு ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**08. பொதுச்சுகாதாரம் பேணுதல்**

சபை எல்லைக்குள் அபிவிருத்தி செய்யப்படாமலும் பற்றைகள் வளர்ந்தும் பொதுச்சுகாதாரத்திற்கு இடையூறாகவுள்ள காணி உரிமையாளர்கள் பற்றைக்களைத் துப்புரவு செய்து சுகாதாரத்தை பேணுவதற்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும் தவறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**09. துவிச்சக்கரவண்டி மற்றும் வளர்ப்பு நாய்களுக்கான உரிமம் பெறல் - 2017**

2017 ம் ஆண்டிற்கான துவிச்சக்கரவண்டி மற்றும் வளர்ப்பு நாய்களுக்கான உரிமத்தை பங்குனி 31ஆம் திகதிக்கு முன்னர் பெற்று சபையுடன் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**10. சூழல் பாதுகாப்பு உரிமம் (EPL) 2017**

இப்பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் சிறிய மற்றும் நடுத்தர வியாபார / தொழில் முயற்சிகளில் ஈடுபடும் சகலரும் எம்முடன் தொடர்பு கொண்டு சூழல் பாதுகாப்பு உரிமத்தை 31.03.2017 க்கு முன்னர் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறு சூழல் பாதுகாப்பு உரிமத்தை பெறத்தவறுபவர்கள் 2017 ம் ஆண்டு மேற்குறிப்பிட்ட வியாபார / தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதிக்கப்படமாட்டார்கள் என்பதையும் அறியத்தருகிறேன்.

**11. தரகர் முறை நீக்கல்**

எமது பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சந்தைகளில் தரகர் மூலமான நடைமுறை முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது அவற்றை அனுசரித்து சந்தைக் குத்தகையாளர் வேண்டப்படுகின்றனர்.

திரு.அ.வினோராஜ்
செயலாளர்,
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை,
கரவெட்டி

(C-6621)

# போர்க்குற்றங்களுக்கு பொறுப்புக்கூற இலங்கையின் புதிய அரசும் தவறிவிட்டது

## சித்திரவதைகளுக்கு எதிரான ஐ.நா.குழு குற்றச்சாட்டு

(கொழும்பு) **உள்நாட்டுப் போரில் போர்க் குற்றங்களை இழைத்தவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு இலங்கையின் புதிய அரசாங்கமும தவறியுள்ளதாக சித்திரவதை களுக்கு எதிரான ஐ.நா. குழு குற் றம்சாட்டியுள்ளது.**



ஒரு மாதமாக ஜெனிவா வில் நடந்து வந்த சித்திர வதைகளுக்கு எதிரான ஐ.நா. குழுவின் கூட்டத் தொடரின் முடிவில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பிலேயே, நிபுணர் குழுவின் உறுப்பினரான பெலிஸ் காயர் இந்தக் குற்றச் சாட்டை முன்வைத்தார்.

'உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுக்கள் அமைக்கப்படும் என்று வாக் குறுதிகளை இலங்கை அர சாங்கம் கொடுத்திருந்தது.

ஆனால், பொறுப்புக்கூறல விவகாரங்களை நோக்கி இலங்கை அரசாங்கம் முன் னகர்வதற்கான எந்த சான்று களையும் எம்மால் காண முடியவில்லை" என்றும் அவர் குற்றஞ்சாட்டினார். (இ-10)

## சிசிர மெண்டிஸ்க்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்படல் வேண்டும்

### ஐ.நா.நிபுணர் குழு வலியுறுத்து



(ஜெனிவா)

சித்திரவதைகளுக்கு எதி ரான ஐ.நா. குழுவின் கூட்டத் தொடருக்கான இலங்கைப் பிரதிநிதிகள் குழுவில் குற்றப் புலனாய்வுப் பிரிவின் முன் னாள் பொறுப்பதிகாரியான பிரதி பொலிஸ்மா அதிபர் சிசிர மெண்டிஸ் உள்ளடக்கப் பட்டிருந்தமை குறித்து ஐ.நா. நிபுணர் குழு அதிர்ச்சியை வெளியிட்டுள்ளது.

ஜெனிவாவில் கடந்த ஒரு மாதமாக நடந்து வந்த சித் திரவதைகளுக்கு எதிரான ஐ.நா. குழுவின் கூட்டத் தொடர் நேற்று முன்தினம் முடிவுக்கு வந்தது. இதை யடுத்து விரிவான அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது.

இந்தக் கூட்டத்தொடரில் இலங்கை குறித்த மீளாய்வு இடம்பெற்ற போது, இலங் கைத் தரப்பில் சட்டமா அதி பர் தலைமையிலான குழு பங்கேற்றது. அந்தக் குழு வில், பிரதிப் பொலிஸ்மா அதிபர் சிசிர மெண்டிஸ்ும் உள்ளடக்கப்பட்டிருந்தார்.

முன்னைய அரசாங்கத் தின் காலத்தில் குற்றப்புல னாய்வுப் பிரிவுக்கு சிசிர மெண்டிஸ் தலைவராக இருந்த போது, குற்றப் புலனாய்வுப் பிரிவினால் சித்திரவதைகள் மேற்கொள்ளப்பட்டதாக ஐ.நா. விசாரணைக் குழு வன் அறிக்கையில் கூறப்பட்டி ருந்தது.

அவ்வாறு குற்றஞ்சாட்டப் பட்டிருந்த பிரிவுக்குத் தலை மைதாங்கிய குற்றச்சாட்டுக ளுக்குப் பதிலளிக்க வேண்டி யவர் இலங்கை பிரதிநிதி கள் குழுவில் இடம்பெற்றி ருந்தமை அதிர்ச்சியை ஏற் படுத்தியதாக, ஐ.நா. நிபுணர் குழு தமது இறுதி அறிக்கை யில் கூறியுள்ளது.

குற்றப் புலனாய்வுப் பிரிவி னால் சித்திரவதைகள் மேற் கொள்ளப்பட்டதாக குற்றஞ் சாட்டப்பட்ட காலத்தில், பிரதி பொலிஸ்மா அதிபர் சிசிர மெண்டிஸின் பங்கு தொடர் பான விரிவான தகவல் களை வழங்க வேண்டும் என்றும் இலங்கையிடம் ஐ.நா.குழு கோரியுள்ளது.

அத்துடன் சிசிர மெண்டி ஸ்க்கு எதிரான குற்றச்சாட்டு கள் குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும் என் றும், சித்திரவதைகளுக்கு எதிரான ஐ.நா. குழு கேட்டுக் கொண்டுள்ளது. (இ-10)

## இலங்கையர்கள் முட்டாள்கள் என கடவுள்கள் எள்ளி நகைப்பார்கள்

### நீதியமைச்சர் விஜயதாஸ கூறுகிறார்

(கொழும்பு)

இலங்கையர்கள் அடி முட்டாள்கள் என கடவுளர் எள்ளி நகையாடுவர் என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜ பக்ஷ தெரிவித்துள்ளார்.

பௌத்த விஹாரைகளில் புத்தர் சிலைகளுக்கு மேல திகமாக சிவபெருமான், விநாயகர், முருகன் போன்ற கடவுளரின் சிலைகள் வைக் கப்பட்டுள்ளதாகவும் இந்த சிலைகளை வணங்கி வழி பாடு செய்யும் மக்கள் வீதியில் இறங்கி மோதிக் கொள்வ தாகவும் இதைப் பார்க்கும் கடவுளர் இலங்கையர்கள் அடி முட்டாள்கள் என கருது வார்கள் எனவும் அவர் சுட் டிக் காட்டியுள்ளார்.

நல்லூர், கோணேஸ்வரம் மற்றும் கதிர்காமம் போன்ற வழிபாட்டுத் தலங்களுக்கு அதிகளவில் பௌத்தர்கள் செல்கின்றார்கள் எனவும் நாகதீபத்தில் தமிழர்கள் அதிகளவில் வழிபாடுகளில் ஈடுபட்டு வருவதாகவும் தெரி வித்துள்ளார்.

இலங்கையில் அடிமட்ட மக்களிடையே இணக்கப் பாடு காணப்படுகின்றது என்ற போதிலும் உயர்மட்ட அரசி யல் வாதிகள் கடும்போக்கு வாதத்தை விதைத்து அரசி யல் இலாபமீட்ட முயற்சிப்ப தாகவும் அவர் தெரிவித் துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன் றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் மேற்கண்டவாறு தெரி வித்தார். (இ-10)

## ஜனாதிபதி 15 ஆம் திகதி மலேசியா பயணம் 6 உடன்படிக்கைகள் கைச்சாத்திட தீர்மானம்

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு எதிர்வரும் 15 ஆம் திகதி மலே சியாவுக்கு செல்லவுள்ளார்.

இரண்டு நாட்கள் அந்த நாட்டில் தங்கியிருக்கும் ஜனா திபதி, மலேஷியாவின் அரச தலைவர்களை சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தவுள்ளார்.

இதன்போது சுற்றுலாத் துறை, அரச நிர்வாகத்துறை உட்பட துறைசார்ந்த அபிவி ருத்தி நடவடிக்கைகளுக் கான 6 உடன்படிக்கைகள் மலேசிய அரசாங்கத்துடன் கைச்சாத்திடப்படவுள்ளதாக வும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த 6 அம்ச உடன்படிக்கை கள் தொடர்பிலான யோசனை கள், அமைச்சரவையில் பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹர்ஷ டி சில்வாவினால் முன்வைக் கப்பட்டு அதற்கான அனுமதி பெறப் பட்டுள்ளதாகவும் குறிப் பிடப் படுகின்றது. (இ-10)

## விடுதலைப்புலிகளுக்கும் ராணுவத்திற்கும் ஒரே நேரத்தில் பயிற்சியளித்தது 'மொசாட்'

### ஜே.வி.பி. எம்.பி. விஜித ஹேரத் தகவல்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலி களுக்கு இஸ்ரேலிய உளவு நிறுவனமான மொசாட் (Mossad) பயிற்சியளித்ததாக மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

வரவு - செலவுத்திட்டத் தின் கிறிஸ்தவ சமய அலு வல்கள் அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பிலான குழு நிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இந்த விட யத்தை தெரிவித்தார்.

இஸ்ரேல் உளவு நிறு வனத்தில் பணியாற்றிய விக்டர் ஒஸ்ட்ரோஸ்கி (Victor Ostrovsky) மொசாட்டின், இரகசிய செயற்பாடுகளைப் பற்றிய நூல் ஒன்றை எழுதி யுள்ளதாகவும், அந்த நூலுக்கு அமைய விடுதலைப் புலிக ளுக்கும், இலங்கை இராணு வத்திற்கும் இஸ்ரேல் ஒரே இடத்தில் வைத்தே பயிற்சி யளித்ததாகவும் அது வெளிப் படையானதாகும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விவகாரத்தை இஸ் ரேல் அரசாங்கமோ, இலங்கை அரசாங்கமோ அல்லது பயிற்சியளித்த மொசாக் அமைப்போ இதுவரை அந்த விடயத்தை மறுதலிக்க வில்லை எனவும் தெரிவித் தார்.

இஸ்ரேல் உளவு நிறு வனத்தில் பணியாற்றி, அதி லிருந்து வெளியேறிய விக்டர் ஒஸ்ட்ரோஸ்கி (Victor Ostrovsky) மொசாட் இரகசிய செயற் பாடுகளைப் பற்றிய நூல் ஒன்றை எழுதியுள்ளார்.

1990ஆம் ஆண்டு வெளி யான "பை வே ஒப் டிசப்சன் (By way of deception) என்ற அந்த நூலில் "மொசாட்" ஒரே நேரத்தில் சிங்கள இராணு வத்திற்கும் தமிழ் கொரில்லா குழுவுக்கும் பயிற்சிகளை அளித்ததாக தெரிவித்துள் ளார்.

எனினும் இந்த கொரில்லா அமைப்பு விடுதலைப் புலி களே கடந்த காலங்களிலும் கருத்துக்கள் வெளியாகியி ருந்த நிலையில் விஜித ஹேரத் தும் இந்த கருத்தை வெளி யிட்டுள்ளமை குறிப்பிடத்தக் கது. (இ-10)

## நாமலுக்கு எதிராக மற்றுமொரு வழக்கு



45 மில்லியன் ரூபா கறுப்பு பணத்தை வெள்ளையாக மாற்றிய சம்பவம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ உட்பட 8 பேருக்கு எதிராக சட்டமா அதிபர் திணைக்களம் துரித மாக வழக்கு தாக்கல் செய்யும என பொலிஸ் நிதி மோசடி விசா ரணைப் பிரிவினர் நேற்று நீதிமன்றத்தில் அறிவித்துள்ள னர்.

கவர்ஸ் கோப்பரேஷன் மற்றும் என்.ஆர்.கன்சல்டே ஷன் ஆகிய நிறுவனங்களு டன் செய்த கொடுக்கல் வாங்கல களில் கறுப்பு பணம் வெள்ளை யாக்கப்பட்டுள்ளதாக சந் தேகிக்கப்படுகிறது. விசாரணை அறிக்கை சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள தாகவும் நிதி மோசடி விசா ரணைப் பிரிவு நீதிமன்றத் திற்கு அறிவித்துள்ளது. இதனை யடுத்து கொழும்பு நீதவான் நதிமன்றம் வழக்கு விசாரணை களை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 9ஆம் திகதிக்கு ஒத்தி வைத்துள்ளது. (இ-10)

## புலியிடமா ரணில்...

உறுப்பினரான உதய கம்மன்பில, அப்படியானால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இந்தச் சபையில், புலிகளிடமா மன்னிப்புக் கேட்டார்? என்று கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பாதுகாப்பு அமைச்சின் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர், யாழ். நூலகத்தை ஐக்கிய தேசியக் கட்சியின் குண்டர்களே எரித்ததாகவும் அதற்காக, தான் மன்னிப்புக் கோருவதாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, தமிழ் மக்களிடம் இந்தச் சபையிலிருந்து அண்மையில் மன்னிப்புக் கேட்டார்.

எனினும், யாழ்ப்பாணத்தில் கடமையிலிருந்த முன்னாள் பொலிஸ பொறுப்பதிகாரி எழுதிய புத்தகமொன்றில், யாழ்.நூலகத்தை புலிகளே எரித்தனர். அதற்கு பின்னரே தெற்கிலிருந்து சென்ற ஐக்கிய தேசியக் கட்சியின் குண்டர்கள் எரியூட்டினர் என்றும் தெரிவித்தார்.

அப்படியானால், ரணில் விக்கிரமசிங்க இந்த சபையில் இருந்து கொண்டு புலிகளிடமா பகிரங்கமாக மன்னிப்புக் கேட்டார். இந்த விவகாரம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்கு, ஜனாதிபதி ஆணைக்குழுவை நியமிக்க வேண்டும் என்றும் கோரி நின்றார். (செ-11)

## வடக்கில் முளை...

மாறு கூற யாருக்கும் உரிமையில்லை. குறிப்பாக வட மாகாண சபைக்கு உரிமையில்லை என்றார்.

இந்த சந்தர்ப்பத்தில் குறுக்கிட்டு பதிலளித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், கிளிநொச்சியில் புதிதாக விகாரைகள் அமைக்கப்படவில்லை என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும், தவறான கருத்தை பதிவுசெய்ய வேண்டாமெனவும் குறிப்பிட்டார்.

எனினும் மீண்டும் குறுக்கிட்ட விஜித ஹேரத் நேற்றுமுன்தினம் அல்லது இந்த இரண்டு மாதங்களுக்குள் ஏதாவது விகாரைகள் அமைக்கப்பட்டுள்ளனவா? எனக் கேள்வி எழுப்பினார்.

அதற்கு பதிலளித்த சிறிதரன், நேற்று முன்தினம் என்பது முக்கியமல்ல கடந்த 2009ஆம் ஆண்டுக்கு முன்னதாக கிளிநொச்சி மாவட்டத்தில் ஒரேயொரு விகாரை மாத்திரமே காணப்பட்டதாக சுட்டிக்காட்டினார்.

இரணைமடு கனகாம்பிகை அம்மன் ஆலயத்துக்கு சொந்தமான காணி இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்டு தொடர்ந்தும் விடுவிக்கப்படாது உள்ள நிலையில், இராணுவத்தினரின் வழிபாட்டுக்காக புத்தர் சிலையை வைத்திருந்த இராணுவம், தற்போது அங்கு நிரந்தரமான பௌத்த விகாரையொன்றை அமைத்து வருகின்றது.

இதற்காக ஆலயத்தின் நான்கரை ஏக்கர் காணியை மூடி நிரந்தர மதில் அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுவருவதுடன் அங்கு விகாரைக்கான தூபியொன்றை அமைக்கும் பணிகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இரணைமடு - கனகாம்பிகை அம்மன் ஆலயத்திலிருந்து நூறுமீற்றர் தூரத்துக்குள் இந்த விகாரை அமைக்கப்பட்டு வருகின்றது.

இதற்கென அம்மன் ஆலயத்தின் மூன்றாவது வீதி அமைந்துள்ள காணியில் இராணுவத்தினரால் கொங்கிறீட் தூண்கள் நிறுவப்பட்டு முட்கம்பிவேலிகள் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது என்றார். (செ-11)

## செக்ஸ் தேடலில் இலங்கை முதலிடம்

இணையத்தளத்தில் செக்ஸ் (SEX) என்ற வார்த்தையை அதிகமாக தேடும் நாடுகளில் இலங்கை முதலிடத்தில் உள்ளதாக கூகுள் தெரிவித்துள்ளது.

இதன்படி 2011, 2012, 2013 மற்றும் 2014ஆம் 2015 மற்றும் 2016 ஆண்டுகளில் கூகுள் இணையத்தளத்தில் (SEX) சொல்லை அதிகமான தேடிய நாடு இலங்கையாகும்.

இலங்கையின் மேல் மாகாணத்தில் ஹோமாகம நகரத்தில் இருந்தே இந்த சொல் அதிகளவில் தேடப்பட்டுள்ளது.

அதிலும், பாடசாலை விடுமுறை காலங்களான ஓகஸ்ட் மற்றும் டிசம்பர் மாதங்களிலேயே SEX என்ற வார்த்தை அதிகளவில் தேடப்பட்டுள்ளது.

## இடியுடன் கூடிய மழைக்கு வாய்ப்பு



நாட்டின் பல்வேறு பகுதியில் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் சில இடங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடிய சாத்தியக்கூறு உள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

இதேவேளை, காங்கேசன்துறையில் இருந்து மன்னார், காலி மற்றும் அம்பாந்தோட்டை ஊடாக மட்டக்களப்பு வரையிலான கடல் பகுதிகளில் காற்றின் வேகம் அதிகமாக காணப்படும் என குறிப்பிடப்படுகின்றது.

அதற்கமைய மணிக்கு 55 முதல் 60 கிலோ மீற்றர் வேகத்தில் கடல் பிரதேசங்களில் காற்று வீசக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (செ-11)


### வீடு வாடகைக்கு

காக்கா கடைச்சந்தி, A9 வீதி, கிளிநொச்சியில் 4 படுக்கை அறை, 2 நவீன குளியலறைகளுடன் இணைந்த வீடு வாடகைக்குண்டு.

(6619)

**T.P - 077 128 3563**

(நிறுவனங்கள் விரும்பத்தக்கது)


### வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி

### வரவு செலவுத் திட்டம் - 2017

1987ஆம் ஆண்டு 15ம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்திற்கு அமைவாக 2017ம் ஆண்டுக்குரிய வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் வரவு செலவுத் திட்டம் 09.12.2016ம் திகதியிலிருந்து 19.12.2016ம் திகதிவரை பொதுமக்கள் பார்வைக்காக எமது தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றேன்.

**அ.வினோராஜ்**
**செயலாளர்,**
**வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை,**
**கரவெட்டி.**

(C-6617)

### கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 1999 06 - 15



தோற்றம் 2001 07 - 14

மறைவு: 07.12.2016

அமரர்களான

**செல்வி கவிப்பிரியா திருமதி நிதர்சினி**

எமது மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தில் வசித்து கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் கல்வி கற்று கல்வியிலும், கலை நிகழ்வுகளிலும் விளையாட்டு வீராங்கனையாகவும் மிகவும் அக்கறையுடனும் அர்ப்பணிப்புடனும் ஈடுபட்டு நல்லொழுக்கமுள்ள மாணவியாக இல்லக் குழந்தைகள் ஏனையோருக்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்த எம் இல்லக் குழந்தை அமரர் செல்வி கவிப்பிரியா மற்றும் அவர் தம் சகோதரி நிதர்சினி ஆகியோரின் இவ்வுலக திடீர் மறைவானது எம்மையும் எமது இல்லக் குழந்தைகளான அவர் தம் சகோதர, சகோதரிகளையும் ஈடிணையற்ற துன்பத்துக்குள் இட்டுச் சென்றுள்ளது.

*வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்*
*வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்*
*மண்ணுலகை விட்டுப் பிரிந்தாலும்*
*காலங்கள் பலகடந்து சென்றாலும்*
*கொண்ட கோலங்கள் நிலைமாறிப் போனாலும்*
*காலத்தால் அழியாதது உங்கள் ஞாபகங்கள்*
*பிறப்போடு இறப்பு இணைந்தது*
*எனினும் உங்கள் இழப்பை நெஞ்சம் ஏற்பதில்லை*

(C-6630)

அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தாருக்கும் உற்றார், உறவினர்கள், நண்பர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**தலைவர் - தி. இராசநாயகம், பணிப்பாளர்கள், பணியாளர்கள், இல்லக் குழந்தைகள்**
**மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம், ஜெயந்தி நகர், கிளிநொச்சி.**

### அறிவித்தல்

**முதலமைச்சரின் அமைச்சு, வட மாகாணம்**

**வட மாகாண சபை அமைச்சரவை அமைச்சர்களுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை விசாரிக்கவென நியமிக்கப் பட்டுள்ள விசாரணைக் குழுவிற்கு முறைப்பாடுகளை செய்வதற்கான அறிவித்தல்**

இப்பத்திரிகையில் 05.11.2016ம் திகதி பிரசுரமான விளம்பரத்தில் அறிவித்தலில் வட மாகாண சபை அமைச்சரவை அமைச்சர்களுக்கு எதிரான முறைப்பாடுகளை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி 06.12.2016ம் திகதியிலிருந்து 20.12.2016 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

கௌரவ முதலமைச்சரின் பணிப்பிற்கமைவாக விசாரணைக்குழுவின் இசைவுடன் இவ்வறிவித்தல் விடுக்கப்படுகிறது.

திருமதி வி. கேதீஸ்வரன்
முதலமைச்சரின் செயலாளர்,
முதலமைச்சரின் அமைச்சு,
வட மாகாணம்
08.12.2016

(C-6622)

### Notice

**Chief Minister's Ministry - Northern Province**

**Notification for submission of complaints leveled against the Ministers of the Northern Provincial Council**

This refers to the advertisement published in this news paper on 05.11.2016. The last date for acceptance of complaints against the Ministers of Board of Ministers of the Northern Provincial Council has been extended from 06.12.2016 to 20.12.2016.

This notification is published as per the directive of Hon' Chief Minister with the concurrence of the members of the Inquiring Committee.

Mrs. V.Ketheeswaran
Secretary to the Chief Minister
Chief Minister's Secretariat
Northern Province

(C-6622)

## விற்பனையாளர் தேவை

யாழ்.நகரில் உள்ள புடைவை விற்பனை நிலையத்திற்கு அனுபவமுள்ள பழகவிரும்பும் ஆண், பெண் விற்பனையாளர் உடன் தேவை. (அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)

குறிப்பு: யாழ். நகரை அண்டிய பிரதேசத்தில் வசிப்பவர்களாக இருக்க வேண்டும்.

தொடர்பு: 0 77 915 7883
077 293 5095

(சி-6616)


# கிறிஸ்மஸ் மர நிர்மாணப் பணிகள் நிறுத்தம்; கண்ணீர்மல்க வடிவமைப்பாளர் அறிவிப்பு



கின்னஸ் சாதனைக்காக காலி முகத்திடலில் அமைக்கப்பட்டு கொண்டிருந்த 325 அடி உயரமான கிறிஸ்மஸ் மரத்தின் நிர்மாணப் பணிகள் நேற்றுடன் நிறுத்தப்பட்டுள்ளதாக குறித்த கிறிஸ்மஸ் மரத்தின் வடிவமைப்பாளர் ஊடகவியலாளர் சந்திப்பில் கணணீர மல்க கருத்து வெளியிட்டார்.

கடந்த ஒகஸ்ட் மாதம் 18 ஆம் திகதி துறைமுகங்கள் மற்றும் கப்பல் துறைகள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்கவின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட குறித்த கிறிஸ்மஸ் மரத்தின் நிர்மாணப் பணிகள் பூர்த்தியடைந்து எதிர்வரும் 20 ஆம் திகதி மக்கள் பார்வைக்காக திறந்து வைக்க தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையிலேயே இந்த கிறிஸ்மஸ் மரத்தின் நிர்மாணப் பணிகள் இடை நடுவில் நிறுத்தப்படுவ தாக அறிவிக்கப்பட்டுள்ளது.(இ-10)


## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை
## மானிப்பாய் கிராம உப அலுவலகம்
## ஆனைக்கோட்டை
## ஆதன பெயர் மாற்ற அறிவித்தல்

வட்டாரம்:-15 ஆதன இல:-34/02
வீதி:-யாழ். காரைநகர் றோட்
கிராம சேவையாளர் பிரிவு:-J/143 சண்டிலிப்பாய்

வட்டாரம் 15,யாழ். காரைநகர் றோட்,ஆதன இல. 34/02 இல் அமைந்துள்ளது. உறுதிப்படி வடமாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் தென்மேற்கு பகுதி மானிப்பாய் கோவிற்பற்று சண்டிலிப்பாய் இறை '' கலட்டி வளவு'' என்னும் பெயருள்ள நிலப்பரப்பு குளி 15.75 கொண்ட இவ்வாதனம் சண்டிலிப்பாயைச் சேர்ந்த செல்லத்துரை விஜயகுமாரன் பெண் அன்னபாக்கியம் ஆகிய இவர்களால் 7ஆம் கட்டை,சண்டிலிப்பாயைச் சேர்ந்த இராசையா புஷ்பராசா அவர்களுக்கு அறுதி உறுதி மூலம் பிரசித்த நொத்தாரிஸ் திரு.இ.வசந்தசேனன் அவர்கள் முகதாவில் நிறைவேறிய 8129ஆம் இலக்க 09.03.2011ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதன பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளனர்.நில அளவையாளர் திரு.S.சிவராஜா அவர்களால் வரையப்பட்ட 481ம் இலக்க 25.11.2016 ஆம் திகதிய நில அளவைப்படத்தின் பிரகாரம் இவ்வாதனமானது''கலட்டிவளவு'' நிலப்பரப்பு குளி 15.75 கொண்ட குறித்த ஆதனத்தின் பெயர்மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் பிரசுரத் திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது இராசையா புஷ்பராசா என்பவர் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை அறியத்தருகின்றேன். (6875)

செயலாளர், வலி.தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.


## கும்பாபிஷேகம்

வேலணை, சரவணை மேம்பால் பதியுறையும் ஸ்ரீ அருள் வரதகாளி அம்பாள் ஆலய புனராவர்த்தன திருப்பணிக்கான பாலஸ்தாபன கும்பாபிஷேக விஞ்ஞாபனம் இன்று வெள்ளிக்கிழமை ஆலய பிரதம குரு சிவாச்சார்ய குருமணி சிவஸ்ரீ நா. யோகீஸ்வரக் குருக்கள் தலைமையில் இடம்பெறும்.

இதனை முன்னிட்டு, வேண்டுவோர்க்கு வேண்டுவதை அருளும் கருணைக் கடலாம் ஸ்ரீ அருள் வரதகாளி அம்பாளுக்கும் ஏனைய மூர்த்திகளுக்கும் பாலஸ்தாபன கும்பாபிஷேகத்திற்கான பூர்வாங்கக் கிரியைகள் இடம் பெற்று காலை 9 மணியளவில் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நடைபெறும். (இ-10)


## ஆறாத்துயருடன் 1ம் ஆண்டு

### அமரர் வில்வராஜா சுதாகர்

(யாழ்.இந்துக்கல்லூரி பழைய மாணவனும் நரேஷா எஞ்ஜினியர் உரிமையாளரும்)

தோற்றம் 12.06.1974 மறைவு 21.11.2015



நினைவுகளாய் எம்முன்னே
தோன்றும் உண்மைப் பொருளே
கனவுகளாகிவிடாதா என்று
தினம் தினம் ஏங்குகின்றோம்
உம்முடன் பழகிய
அந்த நாட்களை எண்ணுகையில்
கண்களில் நீர் பெருகுதே!
அன்பில் தந்தையாய்
அருகிருந்து நண்பனாய்
எமக்கொன்று வரும் போது
ஓடி வரும் அண்ணனே
நீ இல்லைதான் எங்களுடன்
உம் நினைவுகள் எப்போதும்
எம்மை விட்டகலாது.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
கச்சேரிக் கடை நண்பர்கள்.

(6869)



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

### திசைமுகப்படுத்தும் நிகழ்வு-2016
### Orientation Programme-2016
### கலைமாணி பகுதி -II

மேற்படி கலைமாணி -II பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளின் நன்மை கருதி 18.12.2016 (ஞாயிற்றுக்கிழமை) தொடக்கம் 29.01.2017 (ஞாயிற்றுக்கிழமை) வரை ஒவ்வொரு சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 3.30 மணி வரை திசைமுகப்படுத்தும் வகுப்புகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சை மண்டபத்தில் (E-Hall) நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.இவ்வகுப்புகளில் தவறாது கலந்து கொண்டு பயன்பெறுமாறு அழைக்கப்படுகின் றீர்கள்.

மேற்படி திசைமுகப்படுத்தும் வகுப்புக்கள் தொடர்பான நேர அட்டவணைகளை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத் துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம். மேலதிக விபரங்களுக்கு 021-222-3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர்
06.12.2016 (சி-6605)


# இராசி பலன்

09.12.2016
(கார்த்திகை 24, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.10 மணிக்கு
தசமி மாலை 5.57 மணிவரை
ரேவதி பின்னிரவு 4.52 மணிவரை
சுபநேரம் 6.18-7.48 மணிவரை
இராகுகாலம் 10.48-12.18 மணிவரை
சுபமுகூர்த்த நாள்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| சந் | | | |
| கேது செவ் | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>அத்தம்<br>இரவு 4.31 மணிக்கு<br>மேட-சந் | | |
| சுக் | | | ராகு |
| புத | சனி சூரி | | குரு |

**மேடம்:** தொழில் ரீதியான பயணங்கள் அனுகூலம் தரும், கொடுக்கல்-வாங்கல்களில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள்.

**இடபம்:** பிரபலமானவர்களின் அறிமுகம் கிடைக்கும், வீட்டை அலங்கரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் ஆச்சரியமான தகவல்கள் வந்து சேரலாம்.

**மிதுனம்:** வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**கடகம்:** தடைப்பட்ட வருமானங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், உடல் நலன் சீராகும்.

**சிம்மம்:** நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள், எடுத்த காரியங்களை பாதியில் விட்டுவிடுவீர்கள், மருத்துவச் செலவுகள் ஏற்படலாம்.

**கன்னி:** பெண்களின் சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் ஏற்படும், தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள், பயணத்தால் பலன் கிடைக்கும்.

**துலாம்:** போட்டிகளைச் சமாளித்து வெற்றி காண்பீர்கள், தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், தெய்வ சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்:** இல்லத்திற்கு தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், பிள்ளைகளால் பெருமை வந்து சேரலாம், கல்யாணக் கனவுகள் நனவாகலாம்.

**தனுசு:** பெற்றோர் வழியில் பிரியம் கூடும், தொழிலில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள்.

**மகரம்:** சகோதர வழியில் சந்தோசம் தரும் செய்திகள் வந்து சேரலாம், நட்பு வட்டம் விரிவடையும், விடாமுயற்சிக்கு வெற்றி கிடைக்கும்.

**கும்பம்:** விரதங்களில் நம்பிக்கை கூடும், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம்.

**மீனம்:** நீங்கள் எதிர்பார்த்த காரியமொன்று நடைபெறுவதில் தாமதம் ஏற்படலாம், வரவு வந்தாலும் அதற்கேற்ப செலவுகள் ஏற்படலாம்.

# வடமாகாண மீன்பிடி அபிவிருத்திக்கான இணை முகாமைத்துவ அங்குரார்ப்பணம்

## யாழில் நேற்று இடம்பெற்றது






(யாழ்ப்பாணம்)

வடமாகாண மீன்பிடி அபிவிருத்திக்கான இணை முகாமைத்துவ செயற்பாட்டின் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்றைய தினம் யாழ். ரில்கோ விருந்தினர் விடுதியில் நடைபெற்றது.

வடமாகாண மீன்பிடி அமைச்சு, வடமாகாண கடற்றொழிலாளர் இணையம், தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில்,

இந்திய இழுவைப்படகுகளின் வருகையால் வட புல மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், தென்னிலங்கை மீனவர் ஆக்கிரமிப்பு, உள்ளூர் சட்டவிரோத மீனபிடிப் பிரச்சினைகள், மீனவர்களின் காணி விடுவிப்பு போன்ற விடயங்களை உள்ளடக்கி அதில் மீனவ சங்கங்களின் பிரதிநிதிகளின் பங்களிப்புக்கள், பொறுபபுக்கள் தொடர்பாக தயாரிக்கப்பட்ட கையேடு ஒன்று வெளியிடப்பட்டிருந்தது.

அத்துடன் மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பாக மீனவ சங்கத் தலைவர்கள், சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகளின் கருத்துரைகள் இடம்பெற்றன. அதனை தொடர்ந்து வடமாகாண மீன்பிடி அபிவிருத்திக்கான இணை முகாமைத்துவ செயற்பாட்டின் பயிற்சி நெறி ஆரம்பிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் மதகுருமார்கள், வடமாகாண மீன்பிடி அமைச்சர் பா.டெனீஸ்வரன், வடமாகாண சபை உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன், தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் பிரதிநிதிகள், மீனவ சங்கங்களின் தலைவர்கள் உறுப்பினர்கள், பொது அமைப்பின் பிரதிநிதிகள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (இ-9)




# ஸ்ரீமத் பகவத்கீதை ஜயந்தி தினம்

யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் சின்மய ஞானவேல் ஆச்சிரமத்தில் நாளை சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு ஸ்ரீமத் பகவத்கீதை ஜயந்தி தினம் மற்றும் சுவாமி தபோவன் மகராஜ் ஜயந்தி தினம் என்பன அனுஷ்டிக்கப் படவுள்ளன.

இந்நிகழ்வில் பூஜை,பகவத்கீதை பாராயணம்,சத்சங்கம் என்பன வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா தலைமையில் இடம்பெற உள்ளன. (இ-10)

# கலைஞர்களுக்கு விருது வழங்கல்



கத்தோலிக்க கலை இலக்கிய வட்டத்தின் 30 ஆவது ஆண்டு நிறைவையொட்டி கலைஞர்களுக்கான விருது வழங்கும் நிகழ்வு யாழ். மனித முன்னேற்றநடுநிலையமண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

நிகழ்வில் மூத்த இளைய கலைஞர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன. அதில் சினிமாத்துறை சார்ந்த இளைய கலைஞர்களுக்கு கலைச்சுடர் எனும் சிறப்பு விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

ஈழத்தின் சினிமாத்துறை சார்ந்த சாளினி (இயக்குநர்), ஜே.ம.ஜோஷப் மேரி (இயக்குநர்),ஜெறாட் (நடிகர்), விமல்ராஜ் (இயக்குநர்) ஆகியோருக்கு கலைச்சுடர் விருது வழங்கப்பட்டன. (இ

# 'ஓம் நமசிவாய' என்ற கையேடுகளை சமுத்திரத்தில் சேர்ப்பிப்பதற்கு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

மீனவ மக்களின் வாழ்வு உயர்வடைய வேண்டி பெறப்பட்ட "ஓம் நமசிவாய" என்ற கையேடுகளை சமுத்திரத்தில் சேர்ப்பிப்பதற்கு ஏற்பாடு செய்துதருமாறு வடமாகாண மீன்பிடி அமைச்சரிடம் வீணாகான குருபீட தலைவர் வாசுதேவ குருக்கள் கோரிக்கை விடுத்துள்ளார்.

வடமாகாண மீன்பிடி அபிவிருத்திக்கான இணை முகாமைத்துவ செயற்பாட்டின் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்றைய தினம்யாழ் ரில்கோ விருந்தினர் விடுதியில் நடைபெற்றது.

அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

கடந்த காலத்தில் கடற்றொழிலாளர்கள் தமிழ் மக்களின் வாழ்க்கையின் உயர்வுக்காக செய்த பங்களிப்பு அளப்பரியது. ஆயுதப் போராட்டம் ஆரம்பித்த காலத்தில் இருந்து உன்னதமான உதவிகளையும் நிதி தொடர்பான உதவிகளையும் செய்தவர்கள் கடற்றொழிலாளர்கள் தான்.

அதுமட்டுமல்லாமல் கடந்த காலத்தில் போராட்ட இயக்கங்கள் ஆரம்பித்து இந்தியாவின் ஆதரவு இருந்த போது கடல்மார்க்கமான பயணங்களுக்கெல்லாம் ஒத்துழைத்தவர்கள் இந்த கடற்றொழிலாளர்கள் தமது உயிரை துச்சமென எண்ணிதமிழ்இனத்தின விடிவுக்காக தமது வாழ்வை போராட்டத்தில் இணைத்துக் கொண்டவர்கள். அவர்களுக்கு தமிழ் மக்கள் என்றென்றும் துணையாகவும் பக்கபலமாகவும் இருக்க வேண்டும்.

தொடர்ந்து அன்றும் இன்றும் துன்பத்தை அனுபவித்து கொண்டுள்ளார்கள். தமது வாழ்கைத்தரத்தை உயர்த்துவதற்காக போராடிக்கொண்டுள்ளார்கள். நிச்சயமாக அவர்களுடைய வாழ்வுஉயர்வடைய வேண்டும். அதற்கு தமிழ் மக்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

எமது கடற்றொழிலாளர்கள், இந்திய மீனவர்கள், அயல் மாவட்ட மீனவர்கள், உள்ளூர் மீனவர்களால் துன்பப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். அவற்றில் இருந்து விடுதலை பெற்று முன்னேற வேண்டும். குருமார்களின் ஒத்துழைப்பு எப்போதும் அவர்களுக்கு இருக்கும்.

கடந்த காலத்தில் பல பிரார்த்தனை நிகழ்வுகளை செய்துள்ளோம். அதில் கோடிக் கணக்கான "ஓம் நமசிவாய" என்ற கையேடுகள் எழுதியுள்ளோம்.அதில்ஒரு பிரார்த்தனையாக மீனவ மக்களின் வாழ்வு உயர்வடைய வேண்டும் எனவும் இலங்கை இந்திய மீனவ பிரச்சினை தீரவேண்டும் எனவும் வேண்டியுள்ளோம்.

அந்த ஏடுகளை சமுத்திரத்தில் சேர்க்க வேண்டும் என்பது எமது சமய அனுஷ்டானம்.

எனவே ஒரு பொருத்தமான நாளில் அந்த ஏடுகளை சமுத்திரத்தில் சேர்ப்பதற்கு அதை வைபவ ரீதியான சடங்காக மேற்கொள்ள வடமாகாண மீன்பிடி அமைச்சர் ஏற்பாடு செய்து தர வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# வடக்கு சுதேச மருத்துவ திணைக்கள நியதிச் சட்ட

## ஒழுங்கு விதிகள், பிரமாணங்களை மீறினால் குற்றப்பணமும் சிறைத்தண்டனையும் விதிப்பு

வடக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள நியதிச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்கு விதிகள், பிரமாணங்களை மீறும் ஒருவர் நீதிமன்றம் ஒன்றினால் குற்றவாளியாக காணப்பட்டால் இரண்டு இலட்சம் ரூபாவிற்கு மேற்படாத குற்றப் பணத்திற்கு அல்லது பன்னிரண்டு மாதங்களுக்கு மேற்படாத சிறைத் தண்டனை அல்லது குற்றப்பணம் சிறைத் தண்டனை ஆகிய இரண்டுக்கும் உட்படுத்தப்படல் வேண்டும் என குறிப்பிடப் பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் 67 ஆவது அமர்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன்போது வடக்குமாகாண சுதேச மருத்துவ திணைக்கள நியதிச்சட்டம் மூன்றாம் வாசிப்புக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது குறித்த நியதிச் சட்டம் விவாவத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு சபையின் அனுமதி வழங்கப்பட்டது.

இந்த நியதிச்சட்டத்திலேயே மேற்படி விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. பதிவு செய்யப்படாமல் சுதேச வைத்திய நிறுவனத்தை நடத்தும் ஆளொருவர் நீதவான் முன்னிலையில் நடத்தப்படும் சுருக்கமானவழக்குவிசாரணையில் குற்றவாளியாக காணப்பட்டால் ஐம்பதாயிரத்துக்கும் மேற்படாத தண்டப்பணம் அல்லது இருபத்து நான்கு மாதங்களுக்கு மேற்படாத சிறைத்தண்டனை அல்லது குறித்த இரண்டுக்குமே உட்படுத்தப்பட வேண்டும்.

பதிவு செய்யப்படாமல் சுதேச வைத்திய சேவையில் ஈடுபட்டுள்ள ஆளொருவர் நீதவான் முன்னிலையில் நடத்தப்படும் சுருக்கமான வழக்கு விசாரணையில் குற்றவாளியாக காணப்பட்டால் ரூபா இருபதாயிரத்துக்கு மேற்படாத குற்றப்பணம் அல்லது ஆறு மாதத்திற்கு மேற்படாத சிறைத்தண்டனை அல்லது குறித்த இரண்டு தண்டனைகளுக்கும் உட்படுத்தப்படவேண்டும்.

நியதிச் சட்டத்தில் கூறப்படும் விடயங்களில் ஈடுபடும் உத்தியோகத்தர்களுடைய கடைமைகளுக்கு இடையூறு விளைவிக்கும் அல்லது நியதி சட்டத்தில் குறிப்பிடப்படும் ஏற்பாடுகளை மீறுகின்ற ஏதேனும் ஆளொருவர் நீதவானொருவருக்கு முன்னிலையில் நடத்தப்படும் சுருக்கமான வழக்கு விசாரணையில் குற்றவாளியாக காணப்பட்டால் ரூபாய் ஐயாயிரத்துக்கு குறையாததும் ரூபா இருபத்தி ஐயாயிரத்துக்கும் மேற்படாததும் குற்றப்பணம்,

அல்லது ஆறு மாதங்களுக்கு மேற்படாத சிறைத் தண்டனை அல்லது கூறப்பட்ட குற்றப்பணம் சிறைத்தண்டனை ஆகிய இரண்டுக்கும் உட்படுத்த வேண்டும். இந்த நியதிச் சட்டத்தின் கீழ் ஆக்கப்படும் ஒழுங்கு விதிகள், பரமாணங்கள் ஆகியவற்றை மீறுகின்ற எந்த ஆளொருவரால் குற்றம் செய்யப்படுமாயினநீதவான் ஒருவர் முன்னிலையில் நடத்தப்படும் சுருக்கமான வழக்கு விசாரணையில் குற்றவாளியாக காணப்பட்டால் இரண்டு இலட்சம் ரூபாவிற்கு மேற்படாத குற்றப் பணத்திற்கு அல்லது பன்னிரண்டு மாதங்களுக்கு மேற்படாத சிறைத்தண்டனை செய்தலுக்கு அல்லது குற்றப்பணம், சிறைத்தண்டனை ஆகிய இரண்டுக்கும் உட்படுத்தப்படல் வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-4)

# ஆன்மீக அருளுரை

(யாழ்ப்பாணம்)

யாழ்.சின்மயா மிஷன் வதிவிட ஆச்சார்யார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யாவால் நல்லூர் கந்தசுவாமி ஆலய வடக்கு வீதியில் அமைந்துள்ள மகேஸ்வரன் மணி மண்டபத்தில் பிரதி வெள்ளிக்கிழமைகளில் மாலை 6.30 மணி முதல் 7.30 மணி வரை ஆன்மீக அருளுரை நடத்தப்பட்டு வருகின்றது.

இதில் இன்று 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முருகப் பெருமானின் அருள் என்னும் தலைப்பில் அருளுரை நிகழ்த்தப்படவுள்ளது. ஆர்வலர்கள் அனைவரும் கலந்து பலன் பெறலாம். (இ

# முன்னெச்சரிக்கை விழிப்புணர்வும் ஒத்திகையும்

ஊர்காவற்றுறை பிரதேச செயலக பிரிவில் உள்ள கிராம சேவையாளர் பிரிவில் (J/152,J/150 மாதகல் மேற்கு/மாதகல் கிழக்கு) 09.12.2016 ஆம் திகதி இன்று வெள்ளிக் கிழமை மு.ப 10.30 மணிக்கு அனர்த்த முகாமைத்துவ பிரி வினரால் முன்னெச்சரிக்கை விழிப்புணர்வுச் செயற்பாடு கள் மேற்கொள்ளப்படும். இது தொடர்பில்பொதுமக்கள்அமைதி யாக இருக்குமாறும் இது ஒரு ஒத்திகைச் செயற்பாடு என்பதால் எவரும் குழப்பமடையத் தேவையில்லை என யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் பா.செந்தில்நந்தனன் அறிவித்துள்ளார். (இ

# விண்ணப்ப இறுதித் திகதி நீடிப்பு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைக் கல்வி அலகினால் புதிய கல்வி ஆண்டுக்கான வியாபார முகாமைத்துவ மாணி (இணையவழி) மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்ப இறுதித் திகதி 19.12.2016 நீடிக்கப்பட்டுள்ளது என திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையத்தின் பணிப்பாளர் பேராசிரியர் பா. நிமலதாசன் அறிவித்துள்ளார். (இ

# பள்ளிவாசல்களுக்கு கண்காணிப்பு கமராக்கள் பொருத்த வேண்டும்

## றிசாத் அவசர கோரிக்கை



நாட்டிலுள்ள அனைத்து பள்ளிவாசல்களுக்கும் கண்காணிப்புக் கமராக்களை பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தபால் தொலைத்தொடர்பு முஸ்லிம் கலாசார அமைச்சர் ஹலீம் இஷாக்கிடம் மக்கள் காங்கிரசின் தலைவரும் அமைச்சருமான றிசாத் பதியுதீன் அவசர கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

பள்ளிவாசல்கள் மீது ஆங்காங்கே அடிக்கடி மேற்கொள்ளப்பட்டு வரும் தாக்குதல்களின் மூலகர்த்தாக்களை அடையாளம் காண்பதற்கு கண்காணிப்பு கமராக்கள் உதவும் எனவும், இதன் மூலம் சட்டத்தையும் ஒழுங்கையும் நடைமுறைப்படுத்துவதற்கு நம்மாலும் உதவ முடியும்.

இரவு வேளைகளிலேயே இந்த சம்பவங்கள் இடம்பெறுவதனால் கண்காணிப்புக் கமராக்களில் நடந்த உண்மைச் சம்பவங்களை அறிந்து கொள்வதற்கு பொலிஸாருக்கும் இது உதவும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

முஸ்லிம்களையும் சகோதர சிங்கள மக்களையும் முட்டி மோதவைத்து அதன் மூலம் ஆதாயம் பெற சில சக்திகள் தற்போது முயற்சித்து வருவதாகவும் இது தொடர்பில் முஸ்லிம்கள் அவதானமாக செயற்பட வேண்டியதன் அவசியத்தையும் உலமாக்கள் மூலம் வலியுறுத்துவதற்கு முஸ்லிம் சமய விவகார அமைச்சு சில செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் அவர் அமைச்சர் ஹலீமிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.(இ-10)

# சர்வதேச தரத்திலான பௌத்த திரைப்படம்

## இலங்கையில் தயாரிப்பு



இலங்கையில் ஐக்கிய நாடுகளின் சர்வதேச வெசாக் தின வைபவம் இடம்பெறுவதை முன்னிட்டு சர்வதேச தரத்திலான பௌத்த திரைப்படம் தயாரிக்கப்படவுள்ளது.

இந்தத் திரைப்படத்திற்கு புத்தரின் பயணங்கள் அல்லது Horizons of Buddhism என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளதாக எல்லாவெல மேதானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

கௌதம புத்தரின் நாக தீபம், மஹியங்கனை, களனி விஜயம் தொடர்பான சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு திரைப்படம் தயாரிக்கப்படவுள்ளதாக கூறினார்.

இலங்கையைச் சேர்ந்த நடிகர், நடிகைகளின் பங்களிப்புடன் உருவாகும் இத்திரைப்படத்தை சனத் அபயசேகர இயக்கவுள்ளதாகவும் எல்லாவெல மேதானந்த தேரர் தெரிவித்தார்.

திரைப்படத்தின் படப்பிடிப்பு இலங்கையிலும் இந்தியாவிலும் சீனாவிலும் இடம்பெறவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

பன்முக ஆளுமை கொண்ட,
அல்வாயூர்க் கவிஞர் மு.செல்லையா அவர்களின்
110 ஆவது ஆண்டு ஜனன தினமும்
50 ஆவது ஆண்டு சிரார்த்த தினமும்



கவிஞர் மு.செல்லையா
(தலைமை ஆசிரியர்- யா/ தேவரையாளி இந்துக் கல்லூரி, யா/ ஸ்ரீலங்கா வித்தியாசாலை)

அல்வாயூரில் அவதரித்து
அவனி போற்ற வாழ்ந்திருந்து
பல்துறையிலும் சேவையாற்றிய
பல் கலையின் வேந்தரே பண்பாளரே
நிறுவனங்கள் பலவற்றை
உருவாக்கிய உத்தமரே
நீண்டகவி பாடி பதக்கங்களும் பெற்றவரே
இறவாப் புகழ் பெற்று வாழும்
எங்கள் குடும்பத்தின் குலவிளக்கே
ஆண்டுகள் பல சென்றிடினும்
எம் நெஞ்சமதில் வாழ்ந்திருப்பீர்...

"பாரதி பவனம்"
கவிஞர் செல்லையா வீதி,
அல்வாய்.

குடும்பத்தினர்.

(6879)

# 2017 ஆம் ஆண்டு வரவு-செலவுத்திட்டம்

## பெண்களுக்கான நிதி தொடர்பில் மகளிர் அமைப்பு கடும் அதிருப்தி

நல்லாட்சி அரசாங்கத்தினால் 2017ஆம் ஆண்டிற்காக முன்வைக்கப்பட்டுள்ள வரவு- செலவுத் திட்டத்தில் பெண்களுக்கான ஏற்றுக் கொள்ளக்கூடிய அளவிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்று இலங்கை இள மங்கையர் கிறிஸ்தவ சங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

அரசாங்கத்தின் பல்வேறு குறைபாடுகளை சுட்டிக் காட்டியும், மகளிருக்கான நிதியத்தை ஏற்படுத்தும் தொனிப் பொருளிலும் கொழும்பில் மாபெரும் பேரணி ஒன்றை நடத்தவும் அந்தச் சங்கம் தீர்மானித்துள்ளது.

இலங்கை இள மங்கையர் கிறிஸ்தவ சங்கம் ஏற்பாடு செய்துள்ள விழிப்புணர்வுப் பேரணி நாளை 10 ஆம் திகதி கொழும்பு மகளிர் சங்க மத்திய நிலையத்திலிருந்து ஆரம்பமாகி கொழும்பு சுதந்திர சதுக்கம் வரை செல்லவுள்ளது.

இதன்போது மகளிர் உரிமைகளுக்காக பாடுபட்டவர்களை நினைவுகூரும் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இந்தப் பேரணி தொடர்பாக விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பு - கொள்ளுப்பிட்டியிலுள்ள இலங்கை இள மங்கையர் கிறிஸ்தவ சங்க மத்திய நிலையத்தில் நேற்று முற்பகல் நடைபெற்றது.

இதன்போது உரையாற்றிய நிகழ்ச்சி இணைப்பாளர் எழினி கோகுலமணி, குறித்த பேரணி தொடர்பில் முழுமையான விளக்கமொன்றை வழங்கினார்.

இதேவேளை இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய இலங்கை இள மங்கையர் கிறிஸ்தவ சங்கத்தின் தேசிய அமைப்பாளர் சுபாசினி பெரேரா, நல்லாட்சி அரசாங்கத்தின் புதிய வரவு- செலவுத் திட்டத்தில் மகளிருக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பாக தமது அதிருப்தியினை வெளியிட்டார்.

"அரசாங்கத்தின் அடுத்த வருடத்திற்கான வரவு- செலவுத் திட்டத்தில் குறிப்பாக பெண்களுக்கு சரியான வகையில் நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

எனவே அது குறித்து அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கும் முகமாக இந்த பேரணியை நடத்துகின்றோம். அதேவேளை நடைமுறையிலிருக்கின்ற தேர்தல் முறையே பெண்களின் அரசியல் பங்கேற்பு வீதம் குறைவடைவதற்கான காரணமாகும். இதுகுறித்து அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும்.

பெண்களுக்கு பாலியல் பற்றிய பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக வேலைத்திட்டம் ஒளிவழி என்ற பெயரில் தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றோம். குறிப்பாக இலங்கையில் பாடசாலை பாடவிதானங்களில் பாலியல் கல்வி தொடர்பாக உள்ளடக்கப்படவில்லை.

ஆகவே இது சம்பந்தமாக பெண்களை விழிப்புணர்வூட்டும் பணியை நாங்கள் முன்னெடுக்கின்றோம். அதேபோல எமது அமைப்பின் ஊடாக சிறுவயது திருமணத்தை தடுக்கும் அழுத்தங்களையும் மேற்கொண்டு வருகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-10)

கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்:உத்தரட்டாதி<br>கி.பா:81 சூரிசெவ் 1 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:O/L/சாரதி<br>தொ.இ: B/6587 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:Diploma, QS<br>எதிர்பார்ப்பு:விவாகரத்து பெற்றவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/6600 |
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 30 செவ் 4 இல்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்:B.COM அரச தொழில<br>தொ.இ: B/6588 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 14.25 செவ் 2 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:BSc/அரசதொழில்<br>தொ.இ: G/2041 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:A/L/சவுதி<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: B/6589 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 85 செவ் 8 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:BSc லண்டன் NOT PR<br>தொ.இ: G/447 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 28<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:HND/ஆசிரியர்<br>தொ.இ: B/6590 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா:108 செவ் 7 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/512 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai. jaffna@gmail.com
குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00-5.00 மணிவரை திறக்கப்படும்.
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.

# வவுனியாவில் இம்முறை மழைவீழ்ச்சி குறைவு நெற்செய்கை விளைச்சல் பாரிய பின்னடைவு

## வவு. விவசாயத் திணைக்கள பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் அலுவலக பாடவிதான உத்தியோகத்தர் தெரிவிப்பு

(வவுனியா)

**வவுனியா மாவட்டத்திற்கு வருடாவருடம் ஐப்பசி மாதம் தொடக்கம் மார்கழி மாதம் வரை அதிகளவு மழைவீழ்ச்சி கிடைக்கப்பெறுகின்ற நிலையில் இவ்வருடம் அவ்வா றான மழை வீழ்ச்சி கிடைக்கப்பெறவில்லை.இதனால் பெரிய மற்றும் சிறிய குளங்களின் நீர் மட்டங்கள் குறைவாக காணப்படுவதால் பயிருக்கு நீர்ப்பாசனம் செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது.**

இதனால் வருடாந்தம் செய்யப்படும் நெற்செய்கையின் அளவு குறைவடைவதுடன் ஏற்கனவே செய்கை பண்ணப்பட்ட நெற்செய்கையும் தொடர்ந்து நீர்த்தட்டுப்பாடு காரணமாக உரிய விளைச்சலைப் பெற முடியாத நிலை காணப்படுகின்றது.

வவுனியா மாவட்டத்தில் விவசாயத்தை நம்பி வாழும் 32 ஆயிரம் குடும்பங்களும் பாதிக்கப்பட்டுள்ளதாக வவுனியா விவசாயத் திணைக்கள பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் (விரிவாக்கம்) அலுவலக பாடவிடய உத்தியோகத்தர் (நெல்) க.மதனராஜ் குலாஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

வவுனியா மாவட்டத்தில் வருடாந்தம் காலபோகத்தில் 19810 ஹெக்டேயர் நிலப்பரப்பில் நெற்செய்கையும் 5 ஆயிரம் ஹெக்டேயர் நிலப்பரப்பில் உழுந்து செய்கையும் சிறுபோகத்தில் 7 ஆயிரத்து 695 ஹெக்டேயர் நிரப்பரப்பிலும் நெற்செய்கை மேற்கொள்ளப்படுவதுடன் ஏனைய மேட்டுநிலப் பயிர்கள் மற்றும் மரக்கறிப்பயிர்களும் பரவலாக செய்கை பண்ணப்படுகின்றன.

வவுனியா மாவட்டத்தின் நெற்செய்கையில் வருடாந்தம் ஏறத்தாழ 25 சதவீதமான செய்கை புழுதிச் செய்கையாகவும் மிகுதி 75 சதவீதமானவை சேற்று விதைப்பாகவும் செய்கை பண்ணப்படுகின்றன. இப் புழுதிச் செய்கையானது வருடாந்தம் ஐப்பசி மாதத்தின் ஆரம்பத்தில் கிடைக்கப் பெறும் மழையுடன் மேற்கொள்ளப்படுவதாகும். மிகுதியான சேற்றுச் செய்கையானது ஐப்பசி மாதத்தின் பிற்பகுதியிலும் கார்த்திகை மாதத்தின் ஆரம்பத்திலும் கிடைக்கப்பெறும் மழைவீழ்ச்சியுடன் வருடாந்தம் செய்கை மேற் கொள்ளப்பட்டு சராசரியாக மார்கழி மாதத்தின் ஆரம்ப பகுதியுடன் வவுனியா மாவட்டத்தின் முழுமை யான நெற்செய்கையும் பூர்த்திசெய் யப்படும்.

இங்கு வருடாந்தம் காலபோகத்தில் ஏறத்தாழ 80 சதவீதமான மழை வீழ்ச்சியானது ஐப்பசி.கார்த்திகை ஆகிய மாதங்களில் கிடைக்கப்பெறுகின்றது. ஆனால் இவ்வருடமானது வழமைக்கு மாறாக ஐப்பசி மாதம் தொடக்கம் மார்கழி மாதத்தின் இற்றைவரையிலான காலப் பகுதியில் வவுனியா மாவட்டத்திற்கு கிடைக்கப் பெற்ற மழை வீழ்ச்சியை சென்ற வருடத்தின் மழைவீழ்ச்சியுடன் ஒப்பிட்டு நோக்கும் போது வருடாந்தம் கிடைக்கப்பெறும் மழைவீழ்ச்சியின் 40 சதவீதமே இற்றைவரை கிடைக்கப் பெற்றுள்ளது. இக் காலநிலை மாற்றமானது நெற்செய்கையிலும் ஏனைய பயிர்ச் செய்கையிலும் பாரிய தாக்கத்தை விளைவிக்கின்றது.

100 சதவீதம் பயிர்ச்செய்கை செய்து முடிக்கப்படவேண்டிய நெற்செய்கை யானது தற்போது வரை ஏறத்தாழ 59 சதவீதமே பயிர்ச் செய்கை செய்து முடிக்கப்பட்டுள்ளது. இது ஒரு பாரிய பின்னடைவாகும். மேலும் இன்றையதினம் வரை பயிர்ச் செய்கை செய்து முடிக்கப் பட்ட நெற்செய்கையும் குளங்களில் நீர் இன்மையினால் நீர்ப்பாசன வசதியின்றி அழிவடையும் நிலையில் காணப்படுகின்றமையை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. அத்துடன் செய்கை மேற்கொள்ளப் பட்டுள்ள நெற்செய்கையிலும் நீர்த் தட்டுப்பாடு காரணமாக உரிய காலத்தில் களைக்கட்டுப்பாட்டிற்காக விசிறப்பட வேண்டிய களைநாசினிகளையும் விசிற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இச் செயற்பாடானது நெற்செய்கையில் ஒரு பாரிய பின்னடைவை ஏற்படுத்தும்.

மேலும் வருடாந்தம் இக்காலப் பகுதியில்வவுனியா மாவட்டத்தில் காணப்படும் குளங்களின் நீர் கொள்ளளவானது முற்றாக நிரம்பிக் காணப்படவேண்டிய வேளையில் இராசேந்திரன்குளம், பாவற்குளம் போன்ற பெரிய நீர்ப்பாசனக்குளங்கள் உட்பட மாவட்டத்தின் பெரும்பாலான குளங்களின் நீர் மட்டமும் மிகவும் குறைவான நிலையிலேயே காணப்படுகின்றமையை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. அத்துடன் தற்போது நிலவுகின்ற காலநிலையும் மழை பெய்வதற்கு சாதகமான விதத்தில் தோன்றாமையையும் ஒரு கவலையளிக்கும் விடயமாக காணப்படுவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (2)




# மறைந்த தமிழக முதலமைச்சருக்கு வர்த்தகர்கள் சுடரேற்றி மலரஞ்சலி



வவுனியா உள்ளூர் விளைபொருள் விற்பனையாளர் சங்கத்தின் ஏற்பாட்டில், வவுனியா தினச்சந்தையில் மறைந்த தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவுக்கு அச் சங்கத்தின் வர்த்தகர்கள் இணைந்து சுடரேற்றி. மலர் அஞ்சலி செலுத்தியுள்ளார்கள்.

உள்ளூர் விளை பொருள் விற்பனையாளர் சங்கத் தலைவரின் தலைமையில் மௌன அஞ்சலி நடைபெற்றது. வடமாகாண சபை உறுப்பினர் செ.மயூரன், வவுனியா வர்த்தகர் சங்கத் தலைவர் ரீ.கே. இராஜலிங்கம், தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் எஸ்.சுந்திரகுமார், செயலாளர் மாணிக்கம் ஜெகன், உள்ளூர் விளைபொருள் விற்பனையாளர் சங்கச் செயலாளர், உறுப்பினர்கள், பொதுமக்கள் என பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர். (2-9)

# மாதிரிக் கிராமத்தில் வாழ முடியாது மாற்றுக் காணிகளை ஏற்க மாட்டோம்

## கேப்பாபுலவு மக்கள் உறுதிபட தெரிவிப்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு கேப்பாபுலவில் இராணுவத்தினரால் கையகப் படுததப்பட்டுள்ள அரைவாசி குடும்பங்களின் காணிகளுக்கு பதிலாக வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள மாற்றுக்காணிகளை ஏற்றுக் கொள்ளப்போவது இல்லையென மக்கள் தெரிவித்துள்ளனர்.

கையகப்படுத்தியுள்ள அரைவாசி குடும்பங்களின் காணிகள் விடுவிக்கப்படவுள்ளதாக தெரிவித்துள்ள இராணுவம் ஏனைய அரைவாசி குடும்பங்களுக்கான காணிகள் விடுவிக்கப்படப்போவது இல்லையெனவும் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் கேப்பாபுலவில் இராணுவத்தினர் வசமுள்ள காணி உரிமையாளர்களை சந்தித்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராசா கலந்துரையாடினார்.

இறுதி யுத்தம் நிறைவடைந்த நிலையில் கேப்பாபுலவு மக்களின் காணிகளை இராணுவம் கையகப் படுத்தி தொடரந்தும் நிலைகொண்டுள்ளது. எனினும் மாதிரிக்கிராமங்கள் அமைக்கப்பட்டு மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டனர்.

இந்த நிலையில் தமது காணிகளை விடுவிக்குமாறு மக்கள் தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுத்திருந்தனர்.

இந்த நிலையில் காணி விவகாரம் தொடர்பில் இராணுவத்தினர் பெண்களை தமது இராணுவ முகாமிற்குள் அழைத்து கலந்துரையாடுவதை அனுமதிக்க முடியாது. இராணுவ முகாமிற்குள் பெண்கள் சென்றதனை வன்மையாக கண்டிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மாதிரிக்கிராமத்தில் தொடர்ச்சியாக வசிக்க முடியாது என தெரிவிக்கும் மக்கள் தமது காணிகளையும் இராணுவத்தினர் விடுவிக்க வேண்டும் என தெரிவித்துள்ளனர்.

கடற்றொழிலை மேற்கொள்வதற்கான பகுதியை விடுவிப்பதனூடாக பொருளாதாரத்தை மேம்படுத்த முடியும் எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை மாற்றுக்காணியை தாங்கள் பெற்றுக்கொள்ளப் போவதில்லை என தெரிவிக்கும் மக்கள், தமது சொந்த நிலத்தில் குடியேற அனுமதிக்க வேண்டும் எனவும் பாடசாலை உள்ளிட்ட முக்கிய பொது இடங்கள் அனைத்தும் விடுவிக்கப்படாது என அறிவிக்கப்படும் பிரதேசத்துக்குள்ளேயே உள்ளதாக அவர்கள் மேலும் சுட்டிக் காட்டுகின்றனர். (2-281)

# மூன்றாம் விதி குறும்பட வெளியீடு

(வவுனியா)

ஜி.வசந்தசீலனின் மூன்றாம் விதி குறும்பட வெளியீடு நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வவுனியா பொதுசன நூலக கேட்போர் கூடத்தில் தமிழ்மாமன்ற வெளியீடாக இடம்பெறுகின்றது.

எஸ்.திருபானந்தகுமாரன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா வளாக முதல்வர் த.மங்களேஸ்வரன் கலந்து கொள்வார்.

குறும்பட விமர்சனத்தை தமிழருவி த.சிவகுமாரன் நிகழ்த்துவார். "ஈழத்துச் சினிமா" எனும் பொருளில் குறும்பட இயக்குநர் மதிசுதாவும் சிறுவர் நலம் எனும் பொருளில் மனநல மருத்துவர் எஸ். சிவதாஸும் உரையாற்றுவார்கள். ஜி.வசந்தசீலன் ஏற்புரை நிகழ்த்துவார். (2)

**சுன்னாகம் பொலிஸ் வழக்கு**

# சந்தேக நபர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்திருந்த சந்தேக நபரை சித்திரவதைக்கு உள்ளாக்கி கொலை செய்து, சடலத்தை இரணைமடுக் குளத்தில் போட்ட வழக்குத் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களான கொடிகாமம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட ஐவரை டிசெம்பர் மாதம் 22 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி நீதவான் நீதிமன்றப் பதில் நீதவான் அன்டன் புனிதநாயகம் நேற்று வியாழக்கிழமை உத்தரவிட்டார். (2)

# வீட்டுத்திட்டத்திற்கான வேலைகளை பூரணப்படுத்த பகுதிக் கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை

## வர்த்தக நிலைய உரிமையாளர்கள் கடன் பணத்தை கேட்டு நெருக்குவதாக பாதிக்கப்பட்ட பயனாளிகள் குற்றச்சாட்டு

(மல்லாவி)

மீள்குடியேற்ற அமைச்சின் நிதியொதுக்கீட்டின் மூலம் முல்லைத்தீவு மாவட்டத்திற்குட்பட்ட கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு,மாந்தை கிழக்கு, ஒட்டுசுட்டான், துணுக்காய் ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் வசிக்கின்ற வீடற்ற குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட வீட்டுத்திட்டத்திற்கான வேலைகளை பூரணப்படுத்தும் நிலையை எட்டுவதற்கு பகுதிக்கொடுப்பனவுகள்மாதக் கணக்காகியும் வழங்கப்படவில்லை.இதனால் குறித்த வேலைகளை நிறைவு செய்ய முடியாது இருப்பதுடன் கடனுக்கு கட்டுமானப் பொருட்களைவழங்கியவர்த்தகநிலைய உரிமையாளர்கள் கடன் பணத்தைக் கேட்டு நெருக்குவதால் தாம் பெரும் அவல நிலையை எட்டியுள்ளதாக பாதிக்கப்பட்ட வீட்டுத்திட்டபயனாளிகள் குற்றம்சாட்டுகின்றனர்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதிய வீடுகள் அமைப்பதற்கு பயனாளிகள் தெரிவு நடைபெற்று மீள்குடியேற்ற அமைச்சின் நிதியொதுக்கீட்டின் மூலம் மாவட்ட செயலகம் ஊடாக பிரதேச செயலகங்களுக்குரிய வீட்டுத்திட்டப் பயனாளிகள் தொகை பகிர்ந்தளிக்கப்பட்டு மக்களும் வீடுகளை அமைத்து வருகின்றனர்.

பகுதி பகுதியாக வீடுகள் அமைப்பதற்குரிய கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வரும் நிலையில் சில மாதங்களாக கொடுப்பனவுகள் எதுவும் வழங்கப்படவில்லை.

இதனால் வீட்டுத் திட்டப் பயனாளிகள் வர்த்தக நிலையங்களில் கட்டப்பொருட்களை கடனுக்கு பெற்ற நிலையில் பணத்தை மீளச் செலுத்த முடியாதநிலையில் வர்த்தக உரிமையாளர்களின் நெருக்குதலுக்கு உள்ளாகியுள்ளனர்.

இது தொடர்பில் உரிய பிரதேச செயலாளர்களிடம் தொடர்பு கொண்டு வினவிய போது,

மீள்குடியேற்ற அமைச்சு வீட்டுத்திட்டத்திற்கான நிதியை ஒதுக்கியிருந்தநிலையில் அரச திறைசேரியினால் இதற்குரிய கட்டுநிதி விடுவிக்கப்படாமையால் இந்நிலை தோன்றியுள்ளதாகத் தெிவிக்கின்றனர்.

இது தொடர்பில் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் எஸ்.குணபாலன் தெரிவிக்கையில்,

வீட்டுத்திட்டப் பயனாளிகளுக்குரிய பகுதிக் கொடுப்பனவிற்கான வேலைகள் முடிந்து 30 மில்லியனுக்குரிய சிட்டைகள் உள்ளதாகவும் அரச கட்டுநிதி கிடைக்காமையால் இதனை வழங்க முடியவில்லையெனவும் தெரிவித்துள்ளார்.

இதேபோல் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் ய.அனுருத்தனன் தெரிவிக்கையில்,

தன்னிடம் வீட்டுத்தோட்டத்திற்குரிய கொடுப்பனவிற்கான 10மில்லியன் ரூபா சிட்டைகள் இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் எஸ்.ரமேஷ் தெரிவிக்கையில்,

வீட்டுத்திட்டத்திற்குரிய கொடுப்பனவிற்கான 5மில்லியன் ரூபா சிட்டைகள் இருப்பதாகத் தெரிவிக்கின்றனர்.

இதுபோல் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் தெரிவிக்கையில்,தன்னிடம் 4 கோடி ரூபாவிற்கான வீட்டுத்திட்ட கொடுப்பனவிற்குரிய சிட்டைகள் இருப்பதாகவும் தெரிவித்தார்.

இது தொடர்பில் துணுக்காய் பிரதேச செயலாளரிடம் தொடர்புகொள்ள முற்பட்ட வேளை அவரது தொலை பேசி அழைப்பு கிடைக்காமையால் தகவல்களை பெறமுடியவில்லை.

எனவே உரிய அதிகாரிகள் இது தொடர்பில் கவனமெடுத்து வீட்டுத்திட்ட கடன்களுடனும் மற்றும் உரமானியத்திற்கான கடன்களுடனும் பெரும் அவலநிலைக்கு உட்பட்டுள்ள மக்களை மீட்டெடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டு உதவவேண்டுமென பாதிக்கப்பட்டுள்ள வீட்டுத்திட்டப் பயனாளிகள், கிராம அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-15)

## பால்நிலை வன்முறைகளுக்கு எதிரான கருத்தரங்கு

சர்வதேச பெண்களுக்கு எதிரான வன்முறை எதிர்ப்புத் தினம் கார்த்திகை 25 ஆம் திகதி நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதற்கமைய பால் நிலை வன்முறைகளுக்கு எதிரான 16 நாட்களுக்கான பிரசாரம் யாழ். சமூக செயற்பாட்டு மைய நிறுவனத்தினால் கார்த்திகை 25 தொடக்கம் மார்கழி 10 வரை நடைபெற்று வருகின்றது.

இதன் 16 ஆவது நாள் செயற்றிட்டம் நேற்று முன்தினம் முற்பகல் 11 மணியளவில் விசுவமடு உழவனூர் பொது நோக்கு கேட்போர் கூடத்தில் யாழ்.சமூக செயற்பாட்டு மைய நிறுவன மாவட்ட அலுவலரினால் முன்னெடுக்கப்பட்டது.

தற்போது பெண்களுக்கான வன்முறைகள் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்கின்ற போதிலும் இதனை ஒழிப்பதற்கான கருத்தரங்கு அன்றைய தினம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது நிறுவன இணைப்பாளர் என். சுகிர்தராஜ் கருத்துக்களை வழங்கினார்.

இக் கருத்தரங்கில் பொது மக்கள், பொது அமைப்புக்கள் கலந்து கொண்டிருந்தன. (2-307)



கடந்த 2010 ஆம் ஆண்டில் இருந்து இராணுவத்தினர் பயன்படுத்தி வந்த நெடுங்கேணி மகா வித்தியாலய ஆரம்ப பிரிவு காணி கடந்த 6 ஆம் திகதி பாடசாலை அதிபரிடம் கையளிக்கப்பட்டது.இக்காணியானது கடந்த 6 வருடங்களாக இயங்கி வந்துள்ளதுடன் தற்போது இச்சிற்றுண்டிச்சாலை நைனாமடு இராணுவ முகாமுக்கு மாற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(படம்:-குருமன்காடு செய்தியாளர்)

## ஒலுமடு காட்டுப்பகுதியில் 1984 இற்கு பின் முரளிப்பழம்



வவுனியா வடக்கு நெடுங்கேணி ஒலுமடு காட்டுப்பகுதியில் 1984 ஆம் ஆண்டுக்குப் பின் மீண்டும் முரளிப்பழம் அதிகளவு காணப்படுகின்றது.

1984ஆம் ஆண்டு இப்பகுதி காட்டுப் பகுதியில் அதிகளவு முரளிப்பழம் பழுத்திருந்து பறிக்கப்பட்டு அதிகளவு விலைக்கு விற்பனை செய்து வந்த மக்கள் மீண்டும் 32 வருடங்களுக்குப் பின் நெடுங்கேணி ஒலுமடு காட்டுப்பகுதிகளில் ஒரு பகுதிகளில் அதிகளவு முரளி மரத்தில் அதிகமாக பழம் காணப்படுவதனால் இப்பகுதி மக்களும் வெவ்வேறு பகுதிகளிலிருந்தும் சிறியோரிலிருந்து முதியோர் வரையும் ஆர்வத்துடன் காட்டுப்பகுதிகளில் பழம் பறிப்பதை காணக் கூடியதாகவுள்ளது.

அந்தவகையில் இந்த மரமானது வவுனியா மாவட்டத்தில் நெடுங்கேணி காட்டுபகுதியில் அதிகமாக காணப்படுகின்றது. இந்த பழத்தை பல ஆண்டுகளுக்குப் பின்னர் மக்கள் ஆர்வத்துடன் தேடி பறித்து விற்பனை செய்து வருவதனை காணக்கூடியதாகவுள்ளது.

இப் பழமானது ஒரு கிலோ 120 தொடக்கம் 150 ரூபா விலை வரை விற்பனை செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-15)

## நட்டாங்கண்டல் வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியர் ஒருவர் அவசியம்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு நட்டாங்கண்டல் வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியர் ஒருவரை நியமிக்குமாறு இப்பிரதேச மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போது கடமையிலுள்ள வைத்தியர் திங்கட்கிழமை தொடக்கம் வெள்ளிக்கிழமை வரை பணியில் ஈடுபடுவதாகவும்சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் வைத்தியசாலையில் நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்குவதற்கு வைத்தியர் கடமையில் இல்லையெனவும் பாதிக்கப்பட்டவர்களால் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

மாந்தை கிழக்கில் 3 ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் குறித்த வைத்தியசாலையை நம்பியே வாழ்வதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் வைத்தியசாலைக்கு நிரந்தரமாக வைத்தியர் ஒருவரை நியமித்துத் தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இதேவேளை இறுதியாக நடைபெற்று முடிந்த மாந்தை கிழக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் மக்கள் பிரதிநிதிகளினால் கோரிக்கை விடுக்கப்பட்ட நிலையிலும் இது வரை நிரந்தர மருத்துவர் நியமிக்கப்படாததன் காரணமாக மிகவும் பின்தங்கிய பகுதியான மாந்தை கிழக்கு மக்கள் பெரும் மருத்துவ நெருக்கடியினை எதிர் கொள்வதாகத் தெரிவிக்கின்றனர்.

ஆதலால் தற்போது பனிப்பொழிவு கூடுதலாக காணப்படுவதால் சளி, காய்ச்சல் போன்ற நோய்களினால் சிறுவர் முதல் முதியோர் வரை பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இதனைக் கருத்திற்கொண்டு காலம் தாழ்த்தாது நிரந்தரமாக வைத்தியர் ஒருவரை நியமிக்குமாறு நோயாளர்கள், பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.(2-81)

## புதுக்குடியிருப்பு பிரதேச சபையை இரு பிரதேச சபைகளாக பிரிக்குக

### பொதுமக்கள் மகஜர் கையளிப்பு

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்டத்திற்குட்பட்ட புதுக்குடியிருப்பு பிரதேச சபையை இரண்டு பிரதேச சபைகளாகப் பிரிக்குமாறு ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு ஆகிய பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மக்கள் தமது கோரிக்கை அடங்கிய மகஜர் ஒன்றை வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் உட்பட்ட துறை சார்ந்த பிரதிநிதிகளுக்கும் அனுப்பி வைத்துள்ளனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

புதுக்குடியிருப்பு பிரதேச சபையானது 968 சதுர கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்ட ஓர் பரந்துபட்ட பிரதேச சபையாகும்.

இது அண்ணளவாக யாழ். மாவட்டத்துடன் ஒப்பிடுகையில் ஒரு சில சதுர கிலோ மீற்றர் பரப்பளவுகளே குறைவானதாகும்.

இப் பிரதேசசபையினுள் புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான் ஆகிய இரு பிரதேசசெயலகபிரிவுகள் உள்ளடங்குகின்றன.

இதனுள் உள்ளடங்கும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவில் 19 கிராம அலுவலர் பிரிவுகளிலும் 12 ஆயிரத்து 863 குடும்பங்களைச் சேர்ந்த 39 ஆயிரத்து 925 அங்கத்தவர்கள் 177 கிராமங்களில் வசிக்கின்றனர்.

இதேபோல் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவிலுள்ள 27 கிராம அலுவர் பிரிவுகளிலும் 5 ஆயிரத்து 961 குடும்பங்களைச் சேர்ந்த 19 ஆயிரத்து 274 அங்கத்தவர்கள் வசிக்கின்றனர்.

ஒட்டு மொத்தமாக இரண்டு பிரதேச செயலக பிரிவுகளிலும் உள்ள 46 கிராம அலுவலர் பிரிவுகளில் 18 ஆயிரத்து 824 குடும்பங்களைச் சேர்ந்த 59 ஆயிரத்து 199 அங்கத்தவர்கள் மீள்குடியேறியுள்ளனர்.

இரண்டு பிரதேச செயலக பிரிவுகளை உள்ளடக்கியதாகவும் பரந்துபட்ட நீண்ட நிலப் பரப்பைக் கொண்டதுமான புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கு அரசாங்கத்தினால் ஒதுக்கீடு செய்யப்படுக்கின்ற அபிவிருத்தித் திட்டங்களுக்கான நிதி குறைவானதாக வுள்ளது.

அத்துடன் ஆளணித்தொகையும் குறைவானதாக காணப்படுகின்றது.

இதனால் இச்சபையை இரண்டு பிரதேசசபைகளாகப் பிரிக்கும் போது அரச நிதி ஒதுக்கீடுகள், ஆளணி வளப்பங்கீடுகள் உட்பட பல விதமான நன்மைகளை பிரதேச மக்கள் பெற்றுப் பயன்பெறக் கூடியதாக இருக்குமெனமக்கள் தமது கோரிக்கையை மகஜரில் தெரிவித்துள்ளனர். (2-15)




## முல்லைத்தீவு ஏ-35 வீதியிலுள்ள சங்கிலிப்பாலம் சேதம் அடைந்த நிலையில்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவிலிருந்து பரந்தன் நோக்கி செல்லும் ஏ-35 பெருந்தெருவில் உள்ள சங்கிலிப்பாலம் என்று அழைக்கப்படும் பாலம் நீண்ட நாட்களாக உடையும் அபாய நிலையை எட்டியுள்ளது.

அவ்வழியாக போக்குவரத்தில் ஈடுபடுபவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதன் ஒரு பக்கம் பாலம் சேதமடைந்துள்ளது. பார ஊர்திகள் செல்லத் தடை எனும் அறிவிப்பு பலகையும் காணப்படுகின்ற போதும் வாகனங்கள் இவ் எச்சரிக்கையை மீறி இப்பாலத்தின் வழியாக பயணம் மேற்கொள்கின்றன.

அதிகளவான மாணவர்கள் பாடசாலை செல்வதற்கு இவ்வீதியை பயன்படுத்துவதால் இதனை விரைவாக திருத்தியமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

ஆதலால் சம்பந்தப்பட்டவர்கள் இதில் கவனமெடுத்து பாலத்தை திருத்தி அமைக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-281)



# 25 ஆயிரம் ரூபா அபராதம் ஜனவரி முதல் அமுலாகும்

"போக்குவரத்தின் போது, சாரதிகளால் மேற்கொள்ளப்படும் 7 குற்றச்சாட்டுக்களுக்கு 25,000 ரூபாய் அபராதம் விதிக்கும் கொள்கை, ஜனவரி மாதத்திலிருந்து அமுலுக்கு வரும்" என, அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு, நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற போது, ஊடகவியலாளர் ஒருவரால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது குறித்து அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில், "வீதிகளில் ஏற்படும் விபத்தின் மூலம் நாளொன்றுக்கு 8 தொடக்கம் 10 பேர் வரை உயிரிழப்பதுடன், ஒரு நாளைக்கு 25இற்கும் மேற்பட்டோர் காயமடைகின்றனர். ஆனால், இந்த 7 குற்றச்சாட்டுகளுக்கு 25,000 ரூபாய் தண்டம் அறவிடப் போகின்றோம் என்று அறிவித்தல் ஒன்று விடுக்கப்பட்டதன் பின்னர், ஒரு நாளைக்கு விபத்தின் மூலம் 2 பேரே உயிரிழந்துள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. 2015ஆம் ஆண்டு விபத்தினால் ஏற்பட்ட மரணங்கள் 2,700 ஆகும். சுமார் 12 மில்லியன் பேர் காயமடைந்தனர். எனவே, இந்த 25,000 ரூபாய் அபராதம் விதிப்பது தொடர்பில் எங்களுடைய தீர்மானம் மாற்றமடையாது. இது குறித்து ஆராய்வதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அந்தக் குழுவின் அறிக்கை கிடைக்கப்பெற்றவுடன், 25,000 ரூபாய் அபராதம் அமுலுக்கு வரும்" என்று கூறினார்.

"தனியார் பேருந்துகளின் வேலை நிறுத்தத்தின் போது, 128 பேருந்துகள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. எனினும், அது தொடர்பில் அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லையே?" என்று ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர், "128 பேருந்துகள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றால், 128 பேர் கைது செய்யப்பட்டிருக்க வேண்டும். அந்தந்தப் பிரதேசத்திலுள்ள பொலிஸாருக்கு, எவரையும் கைது செய்ய முடியவில்லை என்றால், அது பொலிஸாரின் இயலாமையை எடுத்துக்காட்டுகின்றது. அவர்கள் பிரயோசனமில்லாதவர்கள் என்றே அர்த்தமாகும்" என்று கூறினார். இதேவேளை, டெங்கு நுளம்பு பரவும் அளவுக்கு தங்களது இருப்பிடத்தை வைத்திருப்பவர்களுக்கு 25,000 ரூபாய் அபராதம் விதிக்கப்படும் முடிவிலும் மாற்றம் கிடையாது எனவும் அமைச்சர் இதன்போது தெரிவித்தார். (இ-10)

# 109 பிரதி சுங்க அத்தியட்சகர்களுக்கு நியமனக் கடிதம் வழங்கும் வைபவம்



இலங்கை சுங்கத் திணைக்களத்துக்கு புதிதாக தேர்வு செய்யப்பட்ட 109 பிரதி சுங்க அத்தியட்சகர்களுக்கான நியமனக் கடிதம் வழங்கும் வைபவம் சுங்கத் திணைக்கள கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதன்போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஒருவருக்கு நியமனக் கடிதம் வழங்குவதைப் படத்தில் காணலாம். (இ-10)

# பத்திரிகையாளர் சோ ராமசாமியின் மறைவிற்கு சித்தார்த்தன் இரங்கல்



இந்தியாவின் மூத்த பத்திரிகையாளரும் நடிகரும் பிரபல எழுத்தாளருமான சோ ராமசாமி மறைந்த் செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைந்தோம்.

சோ ராமசாமியும் இந்திய அரசியலிலே மிகப்பெரிய செல்வாக்கினைச் செலுத்தி வந்துள்ளதோடு, ஒரு மூத்த பத்தரிகையாளராக, நடிகராக, அரசியல் ஞானியாக அவர் திகழ்ந்தார்.

இவர் அநேகமான இலங்கைத் தமிழ் அரசியல் பிரதிநிதிகளுடன் நட்புறவைக் கொண்டிருந்தார். இதனடிப்படையில் அவருடன் எனக்கும் மிக நீண்டகாலமான ஒரு நட்புறவு இருந்தது.

அவர் கூறுகின்ற கருத்துக்கள் சிலவேளைகளில் குதர்க்கமாக அல்லது எங்களுடைய கருத்துக்களுக்கு மிக மாறுபட்டதாக இருந்தாலும், நீண்டகாலத்திற்குப் பின் பார்க்கின்றபோது அவர் ஒரு அரசியல் ஞானியாகவே எனக்குத் தெரிந்திருக்கிறார்.

அவருடன் நாங்கள் பழகுகின்ற போது, கதைக்கின்றபோது நாங்களும் தெளிவுறக்கூடிய வகையிலே சில விடயங்களை அவர் எடுத்துக் கூறுவார். அவருடைய இழப்பு இந்தியாவிற்கு ஒரு பேரிழப்பாகும்.

தமிழ் மக்களுடைய ஈழ விடுதலைப் போரிலே அவர் அக்கறை காட்டாது இருந்திருந்தாலும், தமிழ் மக்களுக்கு ஒரு நியாயமான தீர்வு கிடைக்க வேண்டுமென்பதிலே அவர் மிகவும் அக்கறை காட்டி வந்தார் என்பதை இங்கு நினைவு கூருகின்றேன் என யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் புளொட் தலைவருமான த.சித்தார்த்தன் இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். (இ-10)

# இருட்டறையில் எனது வாழ்வு

## 25 வருடங்கள் சிறையிலிருக்கும் நளினியின் வலிகளைச் சுமந்த நெடுந்தொடர்..... 07

"ஏன் அப்படிச் செய்தீர்கள்? எங்க அப்பா மிக மென்மையானவர் ஆயிற்றே. நல்லவர் ஆயிற்றே! எதுவானாலும் பேசித் தீர்த்துக் கொள்ளலாமே? ஏன் அப்படிச் செய்தீர்கள்? என்று என்னைப் பார்த்துக் கேட்டவர் அழத் தொடங்கினார். நானும் அழ ஆரம்பித்து விட்டேன்.ஐயோ மேடம் எனக்கு எதுவும் தெரியாது. நான் ஒரு எறும்புக்குக்கூடத் தீங்கு நினைக்க முடியாதவள். என் சந்தர்ப்பம் சூழ்நிலை என்னை இப்படிக் குற்றவாளியாக நிறுத்தி இருக்கிறது."



"19.03.2008 திங்கட்கிழமை என்னைக் கண்காணிப்பாளர் அறைக்கு அழைத்துச் சென்றார்கள். அவருக்குப் பக்கத்தில் ஒரு பெண் உட்கார்ந்து இருந்தார். அந்தப் பெண் என்னை உற்றுப் பார்த்தார். அவர் யார் என்று எனக்குத் தெரிந்ததும் எனது நாடி நரம்புகள் தளர்ந்துவிட்டன. 'நான் பிரியங்கா காந்தி' என்று அவர் சொன்னார். உடனே அவரது



கையைப் பிடித்து அழவேண்டும் என்று தோன்றியது. தன் அருகில் உட்காருமாறு இரண்டு மூன்று தடவை அவர் சொன்ன பிறகுதான் உட்கார்ந்தேன். தலையைக் குனிந்து உட்கார்ந்து இருந்தேன். சில நிமிடங்கள் கழித்து நிமிர்ந்து பார்த்தேன். அவரது கன்னங்கள் சிவந்து போயிருந்தன.


'ஏன் அப்படிச் செய்தீர்கள்? எங்க அப்பா மிக மென்மையானவர் ஆயிற்றே. நல்லவர் ஆயிற்றே! எதுவானாலும் பேசித் தீர்த்துக் கொள்ளலாமே? ஏன் அப்படிச் செய்தீர்கள்?' என்று என்னைப் பார்த்துக் கேட்டவர் அழத் தொடங்கினார். நானும் அழ ஆரம்பித்துவிட்டேன். 'ஐயோ மேடம் எனக்கு எதுவும் தெரியாது. நான் ஒரு எறும்புக்குக் கூடத் தீங்கு நினைக்க முடியாதவள். என சந்தர்ப்பம், சூழ்நிலை என்னை இப்படிக் குற்றவாளியாக நிறுத்தி இருக்கிறது. மனதளவில்கூட நான் யாருக்கும் தீங்கு நினைக்காதவள்' என்று சொல்லி அழுதேன்.

அவரை அழுகையை நிறுத்தும்படி சொன்னேன். சில நிமிடங்கள் கழித்து இருவரும் ஓரளவு அமைதியாக ஆனதும் நான் சொல்ல ஆரம்பித்தேன்.

"எனக்கோ என் கணவருக்கோ இந்தச் சதி பற்றி எதுவுமே தெரியாது மேடம்! என் கணவர் உண்மையில் வெளிநாடு சென்று வேலை செய்து பிழைத்துக்கொள்ள வேண்டித்தான் சென்னை வந்தார். அதற்கு ஆதாரமாக இரண்டு கடிதங்கள் இருந்தன. ஒன்று சுவிட்சர்லாந்தில் இருந்து அவரது சித்தி அருள் வசந்தா எழுதிய கடிதம். மற்றொன்று கனடாவில் உள்ள கணவரின் பெரியப்பா மகள் ஜெயம் எழுதிய கடிதம். இரண்டில் ஒரு கடிதத்தை எங்களிடம் காட்டி விசாரித்தார்கள். ஆனால், ஆவணப்படுத்தாமல் மறைத்துவிட்டார்கள். அது ஆவணமாக்கப்பட்டிருந்தால் என் கணவர் குற்றச் சதியில் ஈடுபட இங்கே வரவில்லை என்பது உறுதியாகி இருக்கும். அதனால் தான் மறைத்தார்கள். ஆனால், சித்தி எழுதிய கடிதம் அரசுத் தரப்பு ஆவணம் 452 ஆக உள்ளது. அதில், கணவரது சித்தி விரைவில் சுவிஸ்ஃக்கு அழைப்பதாக எழுதியுள்ளார்.

என் கணவர் 'ஆங்கிலப் பயிற்சிக் கல்லூரிக்குப் போவதாகக் காட்டிக் கொண்டு சதித்திட்ட வேலைகளில் தான் இருந்தார். அவர் கல்லூரிக்குச் சரியாகவே செல்லவில்லை' என்று உண்மைக்குப் புறம்பாகக் கூறி, அதற்கான பொய் ஆவணங்களை சி.பி.ஐ. காட்டியது. ஆனால், சாட்சி சொல்ல வந்த கல்லூரி நிர்வாகம், 'முருகன் தினமும் நாள் தவறாமல் வந்து முழு நேரமும் பங்கேற்றிருந்தார். தொடர்ந்து அடுத்த கோர்ஸ்ஃம் படிக்க அதே கல்லூரியில் சேர்ந்து இருந்தார்' எனச் சொன்னதை சி.பி.ஐ. அதிகாரிகள் மறைத்தார்கள். வெளிநாட்டில் போய்ப் பிழைக்க ஆங்கிலம் அவசியம். அதனால் இரு கல்லூரிகளில் காலையும், மாலையும் படித்தார். இதற்கும் சி.பி.ஐயின் சாட்சியங்களும் ஆவணங்களுமே சான்றாக உளளன. ஆனால், இவர் வெளிநாடு செல்லத்தான் இந்த முயற்சிகளை எடுத்திருந்தார் என்பது வெளிப்பட்டுவிடும் என்பதால் எல்லாவற்றையும் மறைத்தார்கள்.

(வலிகள் தொடரும்...)



# பொருளாதாரத்தை டிஜிற்றல் மயமாக்குதல்

## பட்ஜெட் - 2017

நல்லாட்சி அரசாங்கத்தின் இரணடாவது வரவு - செலவுத் திட்டம் **அனைவருக்கும் நன்மைதரும் விரைவான அபிவிருத்தியை நோக்கி** என்ற தொனிப்பொருளில் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவினால் 10.11.2016 அன்று நாடாளுமன்றில் முன்வைக்கப்பட்டது. நிதி அமைச்சரின் 2017ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்ட வாசிப்பின் போது...

(தொடர்ச்சி)

382.அமைச்சுக்களினால் நடைமுறைப்படுத்தப்படும் அனைத்து மூலதன கருத்திட்டங்கள் மற்றும் கொள்வனவுகளுக்காக செய்து கொள்ளப்பட்ட அனைத்து ஒப்பந்தங்களும் உரிய அமைச்சின் இணையத்தளத்தில் ஜனவரி 01 இலிருந்து காட்சிப்படுத்தப்படும்.

383. சபாநாயகர் அவர்களே, நாம் அனைத்து மக்களினதும் வாழ்க்கையை இலகுபடுத்துவதற்கு கடமைப்பட்டுள்ளோம். இதன் பொருட்டு அரச வைத்தியசாலைகளில் வெளிநோயாளர் பிரிவு சேவையினை இரவு 10 மணி வரை நீடிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

அதேவேளை, மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம், ஆட்பதிவுத் திணைக்களம் மற்றும் குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் என்பவற்றினை மத ரீதியான விடுமுறை நீங்கலாக கிழமையின் ஏழு நாட்களிலும் திறந்திருப்பதை உறுதி செய்யுமாறு வேண்டிக் கொள்கின்றேன்.

இதற்கு மேலதிகமாக வங்கிகளும் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு கிளையாவது மதரீதியான விடுமுறை நாள் தவிர கிழமையில் 7 நாட்களும் திறப்பதற்கு நான் ஊக்குவிக்கின்றேன்.

384.குடிவரவுச் சட்டங்களை அமுல்படுத்துவதற்காக ஒரு குடிவரவு பொலிஸ் பிரிவை ஸ்தாபிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன். இதற்காக ரூபா 25 மில்லியனை ஒதுக்குதற்கு முன்மொழிகின்றேன்.

385.வெளிநாட்டவரை திருமணம் முடித்த இலங்கைப் பிரஜையின் வெளிநாட்டு துணைவருக்கு 5 வருட கால விசாவினைப் பெற்றுக் கொடுப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

**பொருளாதாரத்தை டிஜிற்றல் மயமாக்குதல்**

386.சபாநாயகர் அவர்களே, கடந்த வருடம் நாம் டிஜிற்றல் பொருளாதாரத்தை நோக்கிய பிரயாணத்தை ஆரம்பித்தோம். பொருளாதாரத்தை டிஜிற்றல் மயப்படுத்துவதனூடாக இலங்கை போன்ற நடுத்தர வருமான நாடுகளுக்கு இலஞ்சம் ஊழல் மற்றும் மனித செயலாற்றுகையில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்து பொதுச் சேவை வழங்கலில் வெளிபடைத்தன்மை மற்றும் ஆளுமையை மேம்படுத்தி சந்தைக்கும் மற்றும் தொழில்நுட்பத்திற்கான அடைவினை துரிதப்படுத்துவதற்கு வாய்ப்பளிக்கின்றது.

டிஜிற்றல் மயமாக்கலினூடாக சிந்தனைகள் பரம்பலடைந்து புத்தாக்கம் மற்றும் உற்பத்தித் திறன் மேம்பாட்டிற்கு வசதியளிப்பதோடு போட்டித் தன்மையான சூழல் விரிவாக்கப்படுகின்றது.

இச் சூழ்நிலையால் 2017 ஆம் ஆண்டிற்கு மற்றும் அதற்கு அப்பாலும் அதிகமான டிஜிற்றல் உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை நாம் அடையாளம் கண்டுள்ளோம்.

387.2017 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டமானது ஒருங்கிணைந்த திறைசேரி முகாமைத்துவ தகவல் முறைமையினூடாக அமுல்படுத்தப்படுவதோடு மற்றும் வருமான நிர்வாக முகாமைத்துவ தகவல் முறைமையானது ஏற்கனவே உள்நாட்டு இறைவரித் திணைக்களம் மற்றும் ஏனைய 23 நிறுவனங்களையும் இணைத்து அமுல்படுத்தப்படுகின்றது என்பதையும் நான் இச் சபைக்கு அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இதன் மூலம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு தேவையான தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடிவதனால் வரி நிர்வாகத்தை மிகவும் வினைத்திறனாக மேற்கொள்ள முடிவதோடு வரிக்கட்டமைப்பை விரிவுபடுத்தவும் வசதியளிக்கின்றது.

இதன் மூலம் சந்தையில் காணபடும் ஒழுங்கீனங்கள் நீக்கப்பட்டு அனைத்து வியாபாரங்களுக்கும் சம வாய்ப்பு உருவாக்கப்படும். அதே வேளை வரி செலுத்துபவர் கள் மெய்நிகர் காரியாலய முறைமையின கீழ் இலத்திரனியல் கோவை மற்றும் இலத்திரனியல் கொடுப்பனவு முறைகள மூலம் வரி செலுத்துவதற்கு வசதியளிக்கப்படும்.

388. சபாநாயகர் அவர்களே, தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மையினால் தற்போது அமுல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் தேசிய டிஜிற்றல் அடையாள அட்டையானது தனிநபர்கள், வியாபாரங்கள் மற்றும் அரசாங்கமானது டிஜிற்றல் உலகில் பாதுகாப்பான முறையில் கொடுக்கல்-வாங்கல்களை மேற்கொள்வதற்கு வசதியளிக்கின்றது.

தேசிய டிஜிற்றல் அடையாளமானது தனிநபர்களையும் மற்றும் வியாபாரங்களுக்குமான பிரத்தியேக அடையாளமாக அரசாங்க நிறுவனங்களினால் பயன்படுத்தப்படும். சமூகத்தில் வலுவிழந்தவர்களுக்கு மிகவும் சிறப்பான மற்றும் வினைத்திறனான சமூக பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங்களை வழங்குவதற்கும் இது பயன்படுத்தப்படும்.

389.டிஜிற்றல் முறையில் கையொப்பமிடககூடிய ஆவணங்களில் கையொப்பமிடக்கூடிய வகையில் அனைத்து பிரஜைகளுக்கும் பிரத்தியேக டிஜிற்றல் கையொப்பமானது பெற்றுக் கொடுக்கப்படும். இது நாட்டின் வர்த்தக செயற்பாட்டை மேம்படுத்தும்.

390.தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மையானது தேசிய கொடுப்பனவு மேடையை அமுல்படுத்தும் இது தனியார், வியாபாரங்கள் மற்றும் அரசாங்கமானது பொருட்கள் சேவைகளுக்கான கொடுப்பனவுகளை செலுத்துதல் மற்றும் பணமாற்றல் நிகர் நிலையில் (onlinc) கணனிகள் மற்றும் கையடக்கத் தொலைபேசிகளினூடாக மேற்கொள்வதற்கு வசதியளிக்கின்றது. 2017 ஆம் ஆண்டில் இருந்து தேசிய தரவுகள் மையமானது ஆரம்பிக்கப்படும்.

391.தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மையானது போககுவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்துவதற்காக சர்வதேச ரீதியில் செயற்படுத்தப்படும் கட்டண முறைமை ஒன்றையும் அறிமுகம் செய்யும்.

392. சபாநாயகர் அவர்களே, டிஜிற்றல் பொருளாதாரத்திற்கு வேகமாக நுழைவதற்கு வசதியளிக்கும் அதேவேளை தகவல் தொழில்நுட்ப பாதுகாப்பு முறைமையினை உறுதிப்படுத்துவது இன்றியமையாததாகும்.

ஆகவே தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மையானது கொடுக்கல் -வாங்கல்களை மிகவும் பாதுகாப்பான மற்றும் இலகுவான முறையில் மேற்கொள்வதற்கு வசதியளிக்கும் வகைகளில் தேசிய மட்டத்தில் தரவுகளின் ஒருங்கிணைப்பினது (Block chain) தொழில்நுட்பத்தினூடாக (Cryptography) உறுதி செய்யப்படும். இணையம் தொடர்பான (Cyber crime) குற்றங்களை தடுப்பதற்கும் மற்றும் தரவுகள் மற்றும் தகவல்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக சர்வதேச பங்காளர்களுடன் இணைந்து செயற்படும்.

393.அரசாங்க நிறுவனங்களுக்குள் காணப்படும் பல்வேறுபட்ட நிறுவனங்களுக்கிடையில் சிறந்த வினைத்திறனான ஒருங்கிணைப்பிற்கு வசதியளிக்கும் வகையில் அனைத்து அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள் காணொலி மூலம் இணைக்கப்படும். சுற்றாடலை மேம்படுத்துதல் மற்றும் பொதுச் சேவைகள் வழங்கலை வினைத்திறனாகவும் மற்றும் வெளிப்படையாகவும் பெற்றுக் கொடுக்கக்கூடிய வகையில் அரச நிறுவனங்களுக்கிடையில் டிஜிற்றல் ஆவணப் பரிமாற்ற முறைமையானது அமுல்படுத்தப்படும்.

394.மேற்கூறப்பட்ட முன்மொழிவுகளை அமுல்படுத்துவதற்கு ரூபா 15,000 மில்லியன்களை ஒதுக்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

**பாதுகாப்பான சூழலை உருவாக்குதல்**

395. சபாநாயகர் அவர்களே, நாங்கள் ஆட்சி செய்வதற்கு பொறுப்பேற்றது வெள்ளை வான் கலாசாரத்தைக் கொண்ட சட்டம் ஒழுங்கற்ற ஒரு நாட்டையேயாகும். எவ்வாறாயினும் இன்று பாரியதொரு மாற்றத்தை காண்கின்றோம். அதாவது சட்டமும் ஒழுங்கும் நிலைநாட்டப்பட்டு சாதாரண மனிதர்கள் எவ்வித அச்சமும் இன்றி வாழக்கூடிய சூழல் உருவாக்கப்பட்டுள்ளது. 2016ஆம் ஆண்டில் பொலிஸ் திணைக்களம் அதனுடன் தொடர்புபட்ட நிறுவனங்களின் இயலளவைக் கட்டியெழுப்புவதற்காக நாம் நடவடிக்கைகளை ஆரம்பித்தோம்.

இதன் மூலம் குற்றச்செயல்களுக்கு எதிராக வீதியில் இறங்கி மோதும் வழமையான முறைக்கு பதிலாக நிதியியல் மற்றும் இணைய குற்றங்களுக்கு எதிராக செயற்படுத்துவதற்காக இயலளவுகள் கட்டியெழுப்பப்பட்டுள்ளன.

396.மிகவும் நீண்டகாலமாக திருத்தப்படாதிருந்த முப்படைகளினதும் மற்றும் பொலிஸ் திணைக்களத்தினதும் சம்பள முரண்பாடுகளை நாம் சீர்செய்துள்ளோம்.

397.பொலிஸ் திணைக்களம் மற்றும் ஏனைய பொருத்தமான முதன்மை முகவரங்கள் மரபு ரீதியாக குற்றங்களுக்கெதிராக வீதியிலிறங்கி சண்டையிடுதலுக்குப் பதிலாக இணைய மற்றும் நிதியியல் குற்றங்களுக்கெதிராக செயற்படுவதற்கான இயலளவைக் கட்டியெழுப்புவதற்கான நிகழ்ச்சித் திட்டத்தினை 2016 இல் ஆரம்பித்தோம்.

398. சபாநாயகர் அவர்களே, அதற்கு மேலதிகமாக தற்போது எமது வீதிகளில் போக்குவரத்து ஒழுங்கானது மிகவும் மோசமான நிலையில் சீரழிந்துள்ளது என்பதை இச்சபையில் உள்ள அனைவரும் ஏற்றுக் கொள்வர் என்பதை நான் உறுதியாக நம்புகின்றேன்.

2015 ஆம் ஆண்டில் மட்டும் 40.000 மோட்டார் விபத்துக்கள் இடம்பெற்றதோடு இதனால் சுமார் 2800 இழப்புக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதேவேளை, வீதி பாவனையாளர்களினால் வீதி ஒழுங்கு விதிகளை மதிக்காமையினால் போக்குவரத்து நெரிசல் அதிகரித்து அது நாட்டின் பொருளாதாரத்திற்கு குறிப்பிடும் படியான ஒரு இழப்பினையும் ஏற்படுத்துகின்றது.

ஆகவே,போக்குவரத்து குற்றங்களுக்கான குறைந்தபட்ச தண்டப் பணத்தினை ரூபா 2,500 ஆக அதிகரிப்பதற்கும் இதன்படி ஏனைய தண்டங்களையும் அதிகரிப்பதற்கும் முன்மொழிகின்றேன்.

399.போக்குவரத்துடன் தொடர்புபட்ட பிரச்சினைகளினால் அரசாங்கத்திற்கு ஏற்படும் செலவுகளானது மிகவும் உயர்வானதாகும். இப்பின்னணியில், விபத்துக்களின் காரணமாக காயமடைந்தவர்கள் அரச வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படின் அது தொடர்பாக வைத்திய செலவுகளை ஈடுசெய்து கொள்ளும் வகையில் விபத்துக்குப் பொறுப்பான வாகனத்திற்கு அதாவது காப்புறுதிக் கொள்கையினூடாக ரூபா 25,000 இனை குறைந்தபட்ச காப்புறுதியிடல் கோரலாக விதிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

இதன் மூலம் சேகரிக்கப்படும் பணமானது அரச வைத்தியசாலைகளில் வசதிகளை மேம்படுத்துவதற்கு பயன்படுத்தப்படும். இது பொதுமக்கள் மீதான கட்டணமாக கருதப்படக்கூடாது.

400.பொலிஸ் திணைக்களத்திற்கு நவீன உபகரணங்கள் ,கருவிகளைப் பெற்றுக் கொடுத்து திணைக்களத்தின் சட்டம் ஒழுங்கு நிலைநாட்டல் சக்தியை மேம்படுத்துவதற்கு நான் 2017 இல் ரூபா 5.000 மில்லியன்களை ஒதுக்குவதற்கு முன்மொழிகின்றேன்.

**சட்ட ஏற்பாடுகளை மேம்படுத்தல**

401. சபாநாயகர் அவர்களே. எவ்வித அரசியல் தலையீடுகளுமற்ற சுயாதீனமான நீதித்துறையை உருவாக்குவது என்பது தொடர்பில் மக்கள் எம்மீது வைத்த நம்பிக்கையை நாம் நிறைவேற்றியுள்ளோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

இதற்கு மதிப்பளிக்கும் வகையில், நீதித்துறை மற்றும் அதனுடன் தொடர்புபட்ட நிறுவனங்களை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொள்வோம். சிறந்த வாழ்க்கைத்தரம் மற்றும் முதலீட்டினைக் கொண்ட நாட்டினை உருவாக்குகின்ற செயன்முறைக்கு வசதியளிப்பதற்கு சாத்தியமான நீதித்துறை மற்றும் சட்ட மறுசீரமைப்புகள் தொடர்பான பரிந்துரைகளை வழங்குமாறு பிரதம நீதியரசரினால் வழிநடத்தப்படும் நீதித்துறைக்கு அழைப்பு விடுக்கின்றேன்.

402.பிரதம நீதியரசர், உயர் நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம், மேல் நீதிமன்றம் உள்ளடங்கலாக நீதித்துறை சார்ந்த அங்கத்தவர்களின் மிக நீண்டகாலமாக தீர்க்கப்படாமலிருந்த சம்பள முரணபாடானது 2016 இல் தீர்க்கப்பட்டது.

(தொடரும்)

# முதல்வர் ஓ.பி.எஸ்.போயஸ் கார்டனில்



முதல்வர் ஓ.பன்னீர் செல்வம் போயஸ் கார்டனுக்கு நேற்றுச் சென்றார்.

மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா வாழ்ந்த போயஸ் கார்டனில் உள்ள வேதா இல்லத்தை நினைவுச் சின்னமாக்க வேண்டும் என்ற கோரிக்கை தற்போது தமிழகம் முழுக்க எழுந்துள்ளது.

தமிழக காங்கிரஸ் தலைவர் திருநாவுக்கரசர், "ஜெயலலிதா வாழ்ந்த போயஸ் இல்லத்தை நினைவுச் சின்னமாக வைத்து பொதுமக்கள் பார்வைக்கு வைக்க வேண்டும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

ஜெயலலிதாவின் மறைவுக்குப் பிறகு அ.தி.மு.கவின் கடைக்கோடி தொண்டர்கள், பொதுமக்கள் என பலரும் போயஸ் இல்லத்தைப் பார்க்க வேண்டும் என்ற எண்ணத்துடன் போயஸ் கார்டன் நோக்கி படையெடுத்துக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் வாசல் வரை அனுமதிக்கப்படுகின்றனர்.

முன்னதாக, ஜெயலலிதா பொதுமக்களை சந்திக்கும் அதே இடத்தில் தற்போது சசிகலா நின்றுகொண்டு வந்திருந்த பொதுமக்களிடம் பேசினார்.

இதைத்தொடர்ந்து முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் போயஸ கார்டனுக்கு நேற்று நண்பகல் சென்றார். (இ-10)



மறைந்த தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவிற்கு எம்.ஜி.ஆரின் நெருங்கிய நண்பரும் யாழ். எம்.ஜி.ஆர். என அழைக்கப்படும் கோப்பாய் சுந்தரலிங்கம் யாழ். கல்வியங்காடு பகுதியில் அமைந்துள்ள எம்.ஜி.ஆர். சிலைக்கு முன்பாக ஜெயலலிதாவின் உருவப்படத்தினை வைத்து மலர்தூவி அஞ்சலி செலுத்தினார். இதேவேளை எம்.ஜி.ஆர். சிலை முன்பாக கறுப்புக் கொடியும் பறக்கவிடப்பட்டுள்ளதுடன் வெடி கொளுத்தி மறைந்த தமிழக முதல்வருக்கு இறுதி மரியாதையும் யாழ். எம்.ஜி.ஆரினால் செய்யப்பட்டது. (படங்கள்:- உ.சாளின்)

## அப்பலோவில் 75 நாட்கள்

# ஜெயலலிதாவின் அறை வாடகைக்கு மட்டும் 18 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் செலவாம்

கடந்த செப்டெம்பர் மாதம் 22ஆம் திகதி ஜெயலலிதா அனுமதிக்கப்பட்ட நாளில் இருந்து பரபரப்பானது சென்னை கிரீம்ஸ் சாலையில் உள்ள அப்பலோ வைத்தியசாலை.

2ஆவது தளத்தில் உள்ள MDCCUவில் உள்ள ஒரு வோர்ட்டில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார் முன்னாள் தமிழக முதல்வர் ஜெயலலிதா. கடந்த 5ஆம் திகதி இரவு சிகிச்சை பலனின்றி மறைந்தார்.

இவர் சிகிச்சை பெற்று வந்த அறையின் ஒருநாள் வாடகை தற்போது தெரிய வந்துள்ளது.

அப்பலோவில் முதல் தளத்தில் MDCCU extn வோர்ட் இருக்கிறது. இந்த வோர்ட்டில் ஆபத்தான கட்டத்தை தாண்டிய நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

2வது தளத்தில் உள்ள MDCCU வோர்ட்டில் ஆபத்தான நிலையில் இருப்பவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது.

இந்த அறையின் ஒரு நாள் வாடகை 25 ஆயிரம் ரூபாய். அத்தோடு, ஒரு சிறப்பு சிகிச்சை வைத்தியர், நோயாளி ஒருவரை ஒரு முறை பரிசோதித்தால் அதற்கு கட்டணம் 2 ஆயிரம் ரூபாய்.

இப்படி ஒரு நோயாளியை நாள் ஒன்றுக்கு எத்தனை முறை வைத்தியர் பரிசோதிக்கிறாரோ, அதற்கேற்ப கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

இது தவிர வெளிநாட்டு, வெளிமாநில வைத்தியர்களின் வருகைக்கு தனிக் கட்டணம். அப்பலோ வைத்தியசாலையில் ஜெயலலிதா 75 நாட்கள் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

அதற்கான அறை வாடகை மட்டும் 18 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய். வைத்தியர்கள் பரிசோதனைக் கட்டணம், மருந்து செலவு ஆகியவற்றை சேர்த்து கணக்குப் பார்த்தாலும் கோடி ரூபாயைத் தாண்டும் என்கிறது வைத்தியசாலை வட்டாரம். (இ-10)

## ஜெயலலிதாவின் போயஸ் கார்டன் இல்லத்துக்கு படையெடுக்கும் மக்கள்



மறைந்த முதல்வர் ஜெயலலிதா வாழ்ந்த போயஸ் கார்டன் இல்லத்தைப் பார்வையிட பொதுமக்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஜெயலலிதாவின் மறைவை அடுத்து, அவர் உடல் அடக்கம் செய்யப்பட்ட இடத்தையும், அவர் வாழ்ந்த போயஸ் கார்டன் இல்லத்தையும் காண பொதுமக்கள் ஆர்வம்காட்டி வருகின்றனர். இந்நிலையில் நேற்று வியாழக்கிழமை காலை பொதுமக்கள் போயஸ் கார்டன் வீட்டில் அனுமதிக்கப்பட்டனர்.

வழக்கமாக தேர்தல் வெற்றிகள், முக்கிய நிகழ்வுகள் உள்ளிட்ட நேரங்களில் மட்டுமே, மக்கள் போயஸ் கார்டனில் அனுமதிக்கப்படுவர். இந்நிலையில், நேற்று போயஸ கார்டன் வேதா இல்லத்தின் வாசல் வரை பொதுமக்கள் அனுமதிக்கப்பட்டனர்.

அதே நேரம் அங்கு புகைப்படம் எதுவும் எடுக்க அனுமதிக்கப்படவில்லை. நேரம் செல்லச்செல்ல போயஸ் கார்டனுக்கு வரும் மக்கள் கூட்டம் அதிகரித்துக்கொண்டே செல்வதால், தடுப்பு வேலிகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

வழக்கமாக ஜெயலலிதா பேட்டியளிக்கும் வாசல் கதவு அருகே இருந்த சசிகலா, அங்குள்ள பொதுமக்கள் சிலரிடம் பேசினார். (இ-10)

# ஜெயலலிதா எழுதிய உயில் என்ன சொல்கிறது தெரியுமா?

தனது எந்தெந்த சொத்துக்கள், யார் யாருக்கு போக வேண்டும் என்று மறைந்த முதல்வர் ஜெயலலிதா உயில எழுதி வைத்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

மறைந்த முதல்வர் ஜெயலலிதா, தனது சொத்துக்கள் யாருக்கு சென்று சேர வேண்டும் என்று உயில் எழுதி வைத்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. ஜெயலலிதா மறைந்துவிட்ட நிலையில் அவரது சொத்துக்கள் யாருக்கு செல்லும் என்பது குறித்த கேள்வி அனைவரும் மத்தியிலும் எழுந்துள்ளது.

குறிப்பாக, சென்னையின் மிக முக்கியமான இடத்தில அமைந்துள்ள, போயஸ் கார்டன், வேதா இல்லம் யாருக்கு சொந்தம் என்ற கேள்வி எழுகிறது. இந்த இல்லம் 24 ஆயிரம் சதுர அடி பரப்பு கொண்டது. கட்டட பரப்பளவு 21662 சதுர அடியாகும்.

**போயஸ் கார்டன்**

இந்நிலையில், போயஸ் கார்டன் இல்லம், அவரது தோழி சசிகலாவுக்கு செல்ல உள்ளதாக கூறப்படுகிறது. 2 வருடங்களுக்கு முன்பே, சசிகலாவுக்குத்தான் அந்த சொத்து என ஜெயலலிதா உயில் எழுதி வைத்ததாக ஒரு தகவல் பரவுகிறது. அல்லது பரப்பப்படுகிறது.

**வேதா இல்லம்**

போயஸ் கார்டன் சொத்து 1967ஆம் ஆண்டு, ஜெயலலிதாவால் அவரது அம்மா சந்தியாவுடன் சேர்ந்து ரூ.1.32 இலட்சத்துக்கு வாங்கப்பட்டது. வேதவள்ளி என்ற ஜெயலலிதா தாயின் இயற்பெயரை மனதில் வைத்து, அந்த வீட்டுக்கு வேதா இல்லம் என பெயர் சூட்டியிருந்தார் ஜெயலலிதா.

**பிரமாண பத்திரம்**

ஜெயலலிதா கடந்த சட்டசபைத் தேர்தலின்போது தாக்கல் செய்த சொத்து மதிப்புப்படி, அவரது சொத்து மதிப்பு ரூ.113.73 கோடியாகும்.

இதில் அசையும் சொத்துக்கள் ரூ.41.63 கோடியாகும். அசையா சொத்துக்கள் ரூ.72.09 கோடியாகும். கையிலுள்ள ரொக்கம் ரூ.41000 மற்றும் கடன் ரூ.2.04 கோடியாகும்.

**அசையும் சொத்துக்கள**


ஜெயலலிதா தனது பிரமாண பத்திரத்தில் கூறியிருந்தபடி, அவரிடம் ரூ.10 ஆயிரம் மதிப்புள்ள அம்பாசிட்டர், மகேந்திரா ஜீப், மஸ்டா மேக்சி, ரூ.80 ஆயிரம் மதிப்புள்ள மகேந்திர பொலேரோ, டெம்போ டிராவலர், ரூ.5 ஆயிரம் மதிப்புள்ள கான்டசா, ரூ.30 ஆயிரம் மதிப்புள்ள டெம்போ டிராக்ஸ், தலா ரூ.20 இலட்சம மதிப்புள்ள இரு, டொயோடா பிரடோஸ் ஆகியவை அவரின் வாகனங்களாக இருந்தன.

**பார்ட்னருக்கு**


ஜெயலலிதா எழுதியுள்ள உயில்படி, கோடநாடு எஸ்டேட் மற்றும் சசி என்டர்பிரைசஸ் ஆகியவை அந்த சொத்தில் வாழும் பார்ட்னருக்கு செல்லஉள்ளது. ஜெயா பப்ளிகேஷன்ஸ் நிறுவனமும், பார்ட்னருக்கு போகிறது.

ஜெயலலிதா தவிர்ந்த இன்னொருவர் இந்த சொத்துக்களின் பார்ட்னர். ஒருவர் இறந்து விட்டால் மற்றொருவருக்கு முழு உரிமையும் செல்வது தான் அதன் சாராம்சம். அந்த நபர் யார் என்ற தகவல் வெளியாக வில்லை. (இ-10)

# இந்தோனேஷியாவில் நிலநடுக்கம்; பலி எண்ணிக்கை 100 ஆக உயர்வு







(ஜகார்த்தா)

இந்தோனேஷியா நாட்டின் சுமத்ரா தீவை தாக்கிய நிலநடுக்கத்துக்கு உயிரிழந்தோர் எண்ணிக்கை 100 ஆக உயர்ந்துள்ளது.

இந்தோனேஷியா நாட்டின் சுமத்ரா தீவில் அமைந்துள்ள அச்சே பகுதியை நேற்று முன்தினம் அதிகாலை சக்திவாய்ந்த நிலநடுக்கம் தாக்கியது. ரிக்டர் அளவுகோலில் 6.5 அலகுகளாக பதிவான இந்த நில நடுக்கத்தால் பல வீடுகள் இடிந்து விழுந்தன.

இஸ்லாமிய மக்கள் பெருமளவில் வாழும் நாடான இந்தோனேஷியாவில் அதிகாலை தொழுகைக்காக பலர் தயாராகிக் கொண்டிருந்த போது இந்த நிலநடுக்கம் ஏற்பட்டதால் பலர் தங்களது வீடுகளைவிட்டு வெளியில் ஓடி, வீதிகளில் தஞ்சம் அடைந்தனர்.

சுனாமி தாக்கலாம் என்ற அச்சத்தில் தங்களது வீடுகளுக்கு திரும்பிச் செல்ல பலர் தயக்கம் காட்டினர். அடுத்தடுத்து, ஐந்துமுறை நில அதிர்வுகளும் ஏற்பட்டதால் வீடுகள் மட்டுமின்றி, கடைகள், மசூதிகள் உள்ளிட்ட பல கட்டடங்கள் மண்மேடாகிப் போகின.

இடிபாடுகளுக்குள் சிக்கித் தவிக்கும் பலரை மீட்கும் பணி முழுவீச்சில் நடைபெறுகிறது.

இந்த நிலநடுக்கத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 100 ஆக உயர்ந்துள்ளதாக அந்நாட்டு இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேபோல் பலி எண்ணிக்கை தொடர்ந்து உயர வாய்ப்புள்ளதாக கூறப்படுகின்றது. (இ-10)

## ஈராக்கில் தவறுதலான வான்வழி தாக்குதலில் 63 பொதுமக்கள் பலி!

ஈராக்கில் ஐ.எஸ். தீவிரவாதிகளின் வசமுள்ள நகர் மீது நடத்தப்பட்ட வான்வழித் தாக்குதல் ஒன்றில் தவறுதலாக பொதுமக்கள் கொல்லப்பட்டனர். இந்த தாக்குதலில் 63 பேர் பலியாகி இருப்பதாகவும், அதில் பலர் பெண்கள் மற்றும் குழந்தைகள் என்று சிரியா எல்லைக்கு அருகே உள்ள அல் கயிமிலிருந்து வைத்தியசாலை வட்டாரங்கள தெரிவித்துள்ளன.

ஐ.எஸ் குழுவின் தலைமையகமாகப் பயன்படுத்தப்பட்டுவருவதாகக் கருதி ஒரு மசூதி மீது நடத்தப்பட்ட தாக்குதல் தவறாக முடிந்துவிட்டதாக முதற்கட்ட தகவல்கள் தெரிவித்தன.

மசூதிக்கு பதிலாக மக்கள கூட்டம் மிகுந்த சந்தைப் பகுதி ஒன்று தாக்குதலுக்கு உள்ளானது. அமெரிக்கா தலைமையிலான கூட்டணிப்படையினரும் மற்றும் ஈராக் விமானப் படையினரும் ஐ.எஸ் நிலைகள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். அவர்களில், இந்த குறிப்பிட்ட தாக்குதலுக்கு யார் பொறுப்பு என்ற விபரம் இன்னும் தெரியவில்லை. (இ-10)

## உயிரிழப்பு அதிகரிப்பு

## ஜெயலலிதா காலமானார் என்ற செய்தியை அறிந்ததால் மரணமடைந்த 77 பேரின் குடும்பங்களுக்கு நிதியுதவி

### தலா மூன்று இலட்சம் அறிவிப்பு



தமிழக முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் மறைவு தாங்காமல் உயிரிழந்த 77 பேர் குடும்பங் களுக்கும் தலா 3 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங் கப்படும் என அ.தி.மு.க. தலைமைக் கழகம் அறி வித்துள்ளது.

இது குறித்து அக்கட்சி சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பில், தமிழக முதல்வராகவிருந்த செல்வி ஜெயலலிதா கடந்த திங்கட்கிழமை இரவு காலமானார். அவரது மறைவுச் செய்தியைக் கேட்டதும் அதிர்ச்சி தாளாமல் தமிழகத்தில் உள்ள பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 77 பேர் மாரடைப்பு உட்பட பல்வேறு காரணங்களால் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்களின் ஆத்மா இறைவன் நிழலில் இளைப்பாற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு அ.தி.மு.க. சார்பில் குடும்ப நல நிதியுதவியாக தலா 3 இலட்சம் ரூபாய் வழங்கப்படும்.

மேலும் முதல்வர் உடல் நலம் குன்றிய செய்தி அறிந்து துயரம் தாளாமல் தீக்குளித்து தொடர் சிகிச்சை பெற்று வரும் கடலூர் கிழக்கு மாவட்டம் விருத்தாசலம் ஒன்றியத்தைச் சேர்ந்த புதுகூரப்பேட்டை கிளைச் செயலாளர் கே.கணேசன், துக்கம் தாளாமல் விரலை வெட்டிக்கொண்ட திருப்பூர் மாவட்டம் உகாயனூரைச் சேர்ந்த மாகாளி ஆகியோர் முழு சிகிச்சை பெற்று நலம் பெற தேவையான ஏற்பாடுகளைச் செய்துள்ளதோடு அவர்களுக்கு தலா 50,000 ரூபாய் நிதியுதவி வழங்கப்படும் எனவும் கூறப்பட்டுள்ளது. (இ-10)

## ரைம்ஸ் ஏட்டின் தேர்வு; சிறந்த மனிதர் ட்ரம்ப்



பிரபல அமெரிக்க ஏடான 'ரைம்ஸ் ஏட்டின் ஆசிரியர்கள், 'அமெரிக்க ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள டொனால்ட் ட்ரம்ப் இந்த ஆண்டின் சிறந்த மனிதர்' என அறிவித்துள்ளனர்.

பிரபல அமெரிக்க ஏடான 'ரைம்ஸ்', ஒவ்வொரு ஆண்டும், செய்திகளில் அதிகளவில் இடம்பெற்று பரபரப்பை ஏற்படுத்தும் உலக பிரசித்தி பெற்ற அரசியல்வாதிகள், கலைஞர்கள், வீரர்கள், தொழில் அதிபர்களில் இருந்து அந்த ஆண்டின் சிறந்த மனிதரை தேர்ந்தெடுத்து அட்டையில் வெளியிட்டு கௌரவம் அளித்து வருகிறது.

அந்த வகையில் இந்த ஆண்டுக்கான சிறந்த மனிதர் இறுதித் தேர்வு பட்டியலில் பிரதமர் நரேந்திர மோடி, அமெரிக்க ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள டொனால்ட் ட்ரம்ப், துருக்கி ஜனாதிபதி தாயீப் ஏர்துவான், இங்கிலாந்து சுதந்திரக் கட்சி தலைவர் நைஜல் பாரேஜ், அமெரிக்க பாடகி பியான்ஸ், ஜிம்னாஸ்டிக் வீரர் சிமோன் பைல்ஸ், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் உள்ளிட்ட 11 பேர் இடம் பெற்றிருந்தனர.

இதில் இணையத்தள வாக்கெடுப்பில் பிரதமர் மோடி அபார வெற்றி பெற்றார்.

ஆனால் 'ரைம்ஸ் ஏட்டின் ஆசிரியர்கள், 'அமெரிக்க ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள டொனால்ட் ட்ரம்ப், இந்த ஆண்டின் சிறந்த மனிதர்' என அறிவித்துள்ளனர்.

அமெரிக்க அரசுக்கு எதிராக பிரசாரம் செய்து, ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்று அனைவரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியவர் என 'ரைம்ஸ் புகழாரம் சூட்டியுள்ளது.

இந்தத் தேர்வு குறித்து ட்ரம்ப் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார். இதுபற்றி அவர் கருத்து தெரிவிக்கையில், "இது மிகப் பெரிய கௌரவம். இது மிகுந்த அர்த்தம் கொண்டது. டைம ஏட்டின் அட்டையில் இடம் பெறப்போவது அதிர்ஷ்டம்" எனக் கூறினார். (இ-10)

## சர் விருதைப் பெற்ற பாகிஸ்தான் பிரதமருக்கு நீதிமன்றம் எச்சரிக்கை



இங்கிலாந்து நாட்டின் உயரிய விருதான சர் விருதை, அந்நாட்டு அரசு பாகிஸ்தான் நாட்டின் தற்போதைய பிரதமராக உள்ள நவாஸ் ஷெரீபுக்கு கடந்த 1997 ஆம் ஆண்டு வழங்கி கௌரவப்படுத்தியது.

இந்நிலையில் ஜாவேத் இக்பால் ஜபாரி என்பவர் பாகிஸ்தானில் உள்ள லாகூர் நீதிமன்றத்தில், நவாஸ் ஷெரிப் இங்கிலாந்து நாட்டின் உயரிய விருதான சர் விருதைப் பெற்றுள்ளார். அந்த விருது அடிமைத்தனத்தைக் குறிக்கிறது என்றும் பாகிஸ்தானின் தேசிய நலனுக்கு எதிராகவும் இருக்கிறது என முறையிட்டுள்ளார். இதனால் அந்த விருதை அவர் இங்கிலாந்து அரசிடமே திருப்பியளிக்க உத்தரவிட வேண்டும்என்றுநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்.

மேலும் அந்த மனுவில் பாகிஸ்தானின் அரசியலமைப்புச் சட்டத்தின் 2-ஏ மற்றும் 249-ஆம் பிரிவுகளை மீறி, இங்கிலாந்தின் விருதை நவாஸ் ஷெரிப் பெற்றுக் கொண்டதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டது.

இதனால் அவர் மீது வழக்கு தொடரப்பட்டு, அது தொடர்பான மனுவும் விசாரணை செய்யப்பட்டு வருகிறது. இவ்விருது பெற்றதற்கான காரணத்தை விளக்கும்படி நவாஸ் ஷெரிப்புக்கு உத்தரவிட்டுள்ளது. ஆனால் அவர் இதற்கு பதில் அளிப்பதை பல முறை ஒத்தி வைத்துள்ளார். இந் நிலையில், இந்த வழக்கின் விசாரணை, கடந்த செவ்வாய்க்கிழமை மீண்டும் நடைபெற்றது. அப்போது, நவாஸின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி நதீம் அஞ்சும் இந்த மனுவுக்கு பதிலளிக்க மேலும் கால அவகாசம் அளிக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

இதனால், ஆத்திரமடைந்த நீதிபதி, மனுவில் கேட்கப்பட்டுள்ள கேள்விகளுக்கு நவாஸ் ஷெரிப் உடனடியாக பதிலளிக்க வேண்டும் என்றும் அவ்வாறு இல்லாவிட்டால, நீதிமன்றம் கடுமையான உத்தரவைப் பிறப்பிக்க நேரிடும் என்றும் எச்சரித்துள்ளார்.

மேலும் இந்த வழக்கு விசாரணையை வரும் 19 ஆம் திகதிக்கு நீதிபதி ஒத்தி வைத்துள்ளார். (இ-10)

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# அட கடவுளே...! கனவா இது?

# கனவுகள் -ஒரு மர்மம்



மனிதன் உடலில் நிகழும் பல விடை தெரியாத நிகழ்வுகளில் கனவுகளும் ஒன்று. அனைவருக்கும் கனவுகள் வருமா, கனவுகள் ஏன் வருகின்றன, அதற்கு அர்த்தங்கள் இருக்குமா. கனவுகளை கட்டுப்படுதத முடியுமா? போன்ற வினாக்களுக்கான பதில் அறிந்துகொள்ள.

மனித உடல் தூங்கும் போது நான்கு நிலைகள் சுழற்சியாக மீண்டும் மீணடும் நிகழ்கின்றன. முதல் மூன்று நிலைகளில் நமது உடல் வெப்பநிலை குறைந்து, இரத்த அழுத்தம் மற்றும் இதய துடிப்பு குறைந்து ஆழ்நிலை உறக்கத்திற்கு செல்லும். இந்த நிலைகளில் நம் உடலின் வளர்சிதை மாற்றம் குறைந்து உடலின் பெரும்பாலான பாகங்கள் ஓய்வில் இருக்கும். இந்த மூன்று நிலைகளிலும் நம் விழி அசைவற்ற உறக்கத்தில் இருக்கும். (NREM–Non Rapid Eye Movement ) நான்காவது நிலையை அடையும் போது நம் விழிகளில் அசைவு இருக்கும். (REM -Rapid Eye movement)இந்த நிலை 20 நிமிடங்கள் வரை நீடிக்கும். இந்நிலையில் தான் நமக்கு கனவுகள் வருகின்றன. நாம் மொத்தமாக உற ffjlll;25 %இற்கும் மேலாக REM நிலையிலேயே கழிக்கிறோம். இந்த நான்கு நிலைகளும் மாறி மாறி தொடர்ச்சியாக நாம் கண்விழிக்கும் வரை வந்து கொண்டே இருக்கும்.



நாம் அனைவரும் கனவு காண்கிறோம். சிலர் இதை மறுத்தாலும் அது தான் உணமை. ஆனால் கனவுகளை நமது மூளை உடனே நமது ஞாபகத்திலிருந்து நீக்கி விடுகிறது. நாம் விழிக்கும் நேரத்தில் கண்ட கனவு மட்டுமே நமக்கு ஞாபகம் இருக்கும். அதாவது 95% கனவுகள் நமக்கு விழிக்கும் முன்பே மறந்து விடுகின்றன. உண்மையில் நமது வாழ்நாளில் 6% கனவிலேயே கழிக்கிறோம்.

குழந்தைகளும் கனவுகள் காண்கின்றன. அவர்களுக்கு மொழி தெரியாததால் அவர்களின் கனவுகள் வெறும் ஊமை படம் போன்று மொழி பரிமாற்றம் அற்ற கனவுகளாக தோன்றும். குழந்தைகள் பெரியவர்களை போன்று இரண்டு மடங்கு நேரத்தை நான்காம் நிலை உறக்கத்தில் (REM in total sleep-50%) கழிக்கின்றன. அதே போல மூன்று வயதிற்கு முன்பே பார்வை இழந்த, பிறவியிலேயே பார்வை அற்றவர்களும் கனவு காண்கின்றனர். அவர்களின் கனவுகளில் ஒலி, சுவை, ஸ்பரிசம், மணம் போன்ற நான்கு புலன்கள் தொடர்புடைய கனவுகள் தோன்றும்.

சில விலங்குகள் கூட கனவு காண்கின்றன. கனவு காணும் போது நமது உடல் முழுவதும் (விழித்திரையை தவிர்த்து) செயலற்ற நிலையில் (Paralysis) இருக்கும் என்பது உங்களுக்கு தெரியுமா?, அதனால் தான் நம்மை கனவில் நம்மை யாராவது துரத்தினாலும் உடனே எழும்பி ஓடுவதில்லை. இந்த கட்டுப்பாடு இல்லை என்றால் என்ன ஆகும் என்று சிந்தித்து கொள்ளுங்கள்.

கனவுகள் ஏன் வருகின்றன என்று இதுவரை மருத்துவ உலகம் உறுதியாக கண்டறியவில்லை. ஆனால் அதற்கு பல ஏற்றுக்கொள்ளக்கூடிய விளக்கங்கள் உள்ளன.

முதலாவதாக நாம் காணும் கனவுகளுக்கும் உண்மை வாழ்விற்கும் மறைமுகமாக தொடர்பிருக்கலாம் என்று சிலர் கருதுகின்றனர். அதற்காக, நீங்கள் கனவில் தாக்கப்பட்டால் அது உண்மையில் நிகழும் என்று அர்த்தம் இல்லை. ஆனால் உங்கள் ஆழ்மனதிற்குள் ஒரு அங்கமாக இருந்து அது கனவாக வெளிப்படுகிறது என்று அர்த்தம்.

அடுத்த விளக்கமாக, நாம உறங்கும் போது நாம் மூளை அன்றைய நிகழ்வுகளை தொகுத்துக் கொண்டிருக்கும். அவசியமான தகவல்களை நமது நீண்டகால ஞாபகமாகவும் (Long Term Memory) அவசியமற்றவற்றை ஞாபகத்திலிருந்து அழித்து கொண்டிருக்கும். இந்த செயலினால்தான் கனவுகள் ஏற்படுவதாகவும் சில விளக்கங்கள் உள்ளன.

அடுத்த விளக்கமாக, ஒருவரின் நிஜ வாழ்வில் நிறைவேறாத அல்லது நிகழாத ஏக்கங்கள் கனவாக வரும் என்றும் கூறப்படுகிறது. இந்த விளக்கத்திற்கு Compensation theory என்று பெயர்.

இதை போன்ற கனவுகள் பற்றிய பல விளக்கங்கள் உள்ளன. கனவு ஏற்பட காரணமாக நாம் உறங்கும் போது நமது தண்டுவடமானது நாம் மூளைக்கு சில மின்வேதியல் சமிக்ஞைகளை அனுப்பி தூண்டுவதால் தான் கனவு வருவதாக மருத்துவ உலகில் நம்பப்படுகிறது. கனவுகளுக்கு அர்த்தம் உண்டா? என்றாவது நீங்கள் கண்ட கனவிற்கான அர்த்தங்களை தேடி இருக்கிறீர்களா?



நாம் காணும் கனவிற்கு தனித்தனியாக அர்த்தம் காண முடியாது. எனினும் உலக அளவில் சில பொதுவான அர்த்தங்கள் உள்ளன. அதாவது நீங்கள் பறப்பது போனறு கனவு கண்டால் நீங்கள் நிஜத்தில் ஆரோக்கியமாகவும், சுதந்திரமாகவும் மகிழ்ச்சியாகவும் உள்ளதாக அர்த்தம்.



குழந்தைகள் தங்கள் கனவில் வெற்று உடலுடன் தனிமையில் இருப்பதாக கனவு கண்டால் அதற்கு தான் பலவீனமாக இருப்பதாக உணர்வதாக பொருள்படும். அதேபோல் நீங்கள் விழுவது போன்று கனவு வந்தால், உங்கள் ஆழ்மனம் எதையோ இழக்கப் போவதாகவும் கட்டுப்பாடு இன்றி இருப்பதாகவும் உணர்வதாலாகும்.

கனவுகளை நம்மால் கட்டுப்படுத்த முடியுமா? இது முடிந்தால் நாம் விரும்பியது நடக்காவிடிலும் அதை கனவில் அனுபவிக்கலாம் என்று ஏங்குபவரா நீங்கள் ? அப்படியெனில் உங்களுக்கான விடை ஆம். நம்மால் நம் கனவுகளை கட்டுப்படுத்த முடியும். இது அனைத்து கனவிற்கும் பொருந்தாது. நாம் என்ன கனவு காண்கிறோம் என்று தெரிந்து நகழும் கனவுகளுக்கு லூசிட் ட்ரீம் (Lucid dream)என்று பெயர். பெரும்பாலும் அதிகாலையில் விழிக்கும் முன்னர் நமக்கு இந்த வகையான கனவுகள் தோன்றும். இந்த கனவுகளை நம்மால் கட்டுப்படுத்த முடியுமாம்.

மனிதனின் 18 வயசு வரைக்கும் மூளை வளர்ச்சி தொடரும். அதற்கு பின்பு ஒவ்வொரு நாளும் மூளை செல்கள் இழப்பு நிகழும். நம் உடலின் மூளை நரம்பு செல்லின் தூண்டுணர்வின் வேகம் மணிக்கு 170 மைலகள் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. ஒரு 10 வாற் மின் விளக்கு எரிவதற்கு தேவைப்படும் மின்சாரம் மூளைக்கு தேவை. இது ஆச்சர்யம் தான். ஆனால் உண்மை.

என்சைகிளோபீடியா, பிரிட்டானிக்கா புத்தகங்களில் உள்ள தகவல்கள் அளவில் 5 மடங்கு நம் மூளை தகவல்களை சேமித்து வைத்திருக்கும் என விஞ்ஞானிகள் நம்புகின்றனர். விஞ்ஞானிகளுக்கு ஆச்சர்யம் அளிப்பது இந்த மூளை. நாம் விழித்து இருக்கு போது செயற்படுவதை விட, தூங்கும் போது ஆதீத ஆற்றலில் செயற்படுவது எப்படி என்பதுதான்.

கை.கால் இடுப்பு வலி இதெல்லாம் அந்த அந்த பகுதியில் ஏற்படும் வலி தான். இல்லையா? ஆனால் தலைவலி என்று சொல்வது மூளையை சுற்றி இருக்கும் நரம்புகள், இரத்த நாளங்களில் திசுக்களில் ஏற்படும் வலிதானே தவிர மூளை வலியை உணர்வது இல்லை. இன்னும் தெளிவாக சொல்வதென்றால் மூளையை தொட்டால் அதை உணர முடியாது. இதயத்தில் இருந்து மூளைக்கு செல்லும் இரத்தக் குழல் தமனிகளை (Aorta) ஒன்று சேர்த்தால் (Diameter of a garden hose) அந்த விட்டத்தின் அளவு வீட்டுத்தோட்டத்திற்கு பயன்படுத்தும் குழாய் அளவு இருக்கும்.

பொதுவாகச் சொல்வது மூளையை நாம் 10% தான பயன்படுத்துறோம். அப்ப 90% சும்மா இருக்குமா என்றால் இல்லை, எல்லா செல்லுமே வேலை செய்து கொண்டுதான் இருக்கும். தூக்கம் மூளைக்கு மிக மிக முக்கியம். 11 நாட்கள் ஒருவன் தூங்காமல் இருந்தால் அவன் இறந்து விடுவான் என்பது மட்டும் உணர்ந்து கொள்ளவேண்டும்.





காலிங்கராசா ஹரிச்சந்திரா
தொழில்நுட்பஅலுவலர்,
மீன்பிடியியல் விஞ்ஞானத்துறை, விஞ்ஞானபீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.


## வாரத்திற்கு ஒரு புதிர்! 175

ராஜாவின் தற்போதைய வயது 27. ரமாவின் தற்போதைய வயது 21. சில காலத்துக்குமுன் ராஜாவின் வயது ரமாவின் வயதின் மூன்று மடங்காக இருந்தது. அது எவ்வளவு காலத்தின் முன்?

புதிர் 175 இற்கான விடைகளை 19.12.2016 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:

கலாநிதி. (செல்வி) ஷிவதர்சினி இராசலிங்கம்
ஆசிரியர், பிரிவு A
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
இரசாயனவியற்றுறை
யாழ்.பல்கலைக்கழகம்.

சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு
ரூபா 500/- பணப்பரிசு வழங்கப்படும்.
இப் பணப்பரிசினை யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான சங்கம் பிரிவு A பிரிவிடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

## புதிர் 174 க்கான 500/- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி

நல்லரெத்தினம் நதீஸ்வரன்
பிரதானவீதி,
மூதூர்-01.
திருகோணமலை.

**புதிர் 174க்கான கேள்வியும் விடையும்:**

அணுஉலையில் பயன்படுத்தப்படும் பாரநீரின் (Heavy water-$D_2O$) செயற்பாடு என்ன? நியூத்திரன் வேகத்தைக் குறைக்கும்

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் புதிர் இல. 175

சரியான விடை:-..........................................
முழுப்பெயர்:-..........................................
முகவரி:-..........................................
தொ.பே. இல:..........................................
கையொப்பம்:..........................................

# கோத்தா - புலனாய்வாளர்கள் இணைந்து பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டனர்

## சரத் பொன்சேகா பரபரப்பு குற்றச்சாட்டு



(கொழும்பு)

மோசடியில் ஈடுபட்டார்கள் என்பதற்காக தம்மால் துரத்தப்பட்ட இலங்கை இராணுவப் புலனாய்வு அதிகாரிகள், கோத்தபாய ராஜபக்ஷவுடன் இணைந்து பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் பாதுகாப்பு அமைச்சுக்கான வரவு - செலவுத்திட்ட நிதி ஒதுக்கீடு குறித்த குழு நிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

"இறைமை மற்றும் ஆட்புல ஒருமைப்பாட்டை உறுதிப படுத்தியமையாலேயே நாடு என்ற அங்கீகாரம் எமக்கு அனைத்துலக ரீதியில் கிடைத்துள்ளது.

பாதுகாப்பு இன்றி நாடொன றில் பொருளாதார முன்னேற்றமோ அல்லது நாட்டை முன்னேற்றுவதற்கான எந்த செயற்பாட்டையும் முன்னெடுக்க முடியாது.

நாட்டின் பாதுகாப்புக்கு உள்ளக ரீதியாகவும் அனைத்துலக ரீதியாகவும் அச்சுறுத்தல் ஏற்படலாம். உள்ளக அச்சுறுத்தல் தொடர்பில் எமக்கு அனுபவங்கள் உள்ளன. இவற்றை தடுத்து ஜனநாயகத்தை பாதுகாக்கும் பொறுப்பு முப்படையினருக்கும் பொலிஸாருக்கும் உள்ளது.

நான் இராணுவத் தளபதியாகப் பொறுப்பேற்ற போது, இராணுவப் புலனாய்வுப் பிரிவில் மோசடியில் ஈடுபட்ட உயர் அதிகாரிகள் இருந்தனர்.

எனினும், அவர்களை ஒதுக்கிவிட்டு, திறமை வாய்நத அதிகாரிகளை உரிய பதவிகளுக்கு நியமித்து, இராணுவப் புலனாய்வுப் பிரிவு மீளமைக்கப்பட்டது.

மோசடிகள் தொடர்பில் துரத்தி விடப்பட்ட இராணுவப் புலனாய்வு அதிகாரிகள் கோத்தபாயவுடன் இணைந்து செயற்பட்டனர். அவர்கள் பல்வேறு தேவைகளுக்கும் பயன்படுத்தப்பட்டனர்.

அனைத்துலக சட்டங்கள் மற்றும் உள்நாட்டு சட்டங்களுக்கு அமையவே நான் போரை முன்னெடுத்தேன். இராணுவத்தினருக்கு எதிரான சவால்களுக்குப் பொறுப்புக்கூற நான் தயாராகவே இருக்கின்றேன்.

எனினும், கோத்தபாயவின் எண்ணங்களை நிறைவேற்றச் சென்று சட்டத்தை மீறிச் செயற்பட்ட இராணுவ அதிகாரிகள் தொடர்பாக என்னால் பொறுப்புக்கூற முடியாது.

அதற்கான பொறுப்பை கோத்தபாய ராஜபக்ஷவே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

வடக்கு, கிழக்கு பகுதிகளில் தொடர்ந்தும் இராணுவ முகாம்கள் பேணப்பட வேண்டும். அதேவேளை, இராணுவத்தினர் வசமுள்ள பொதுமக்களின் காணிகள் மீள ஒப்படைக்கப்பட வேண்டும்.


காணாமற்போனவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம பெற்றுக் கொடுக்க இலங்கை இராணுவத்தினர் முன்வர வேண்டும்.

இராணுவத்தின் பொறுப்புக்கள் நிபுணத்துவம் வாய்நத அதிகாரிகளிடம் கையளிக்கப்பட வேண்டும்.

போரில் வெற்றி பெறுவதற்கு முக்கிய பங்காற்றிய இராணுவம் இப்போது நல்லிணக்க முயற்சிகளில் வெற்றி பெறுவதற்கு உதவ வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# கடன் சிறைக்குள் நாட்டை தள்ளியவர் மகிந்ததான்

## ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் முறையற்ற வரித் திட்டத்தினால் நாடு கடன் சுமைக்கு தள்ளப்பட்டுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த அரசாங்கத்தில் ஒரு ரூபாவைக்கூட வரியாக செலுத்தாது செயற்பட்ட நிறுவனங்கள் பல இனங்காணப்பட்டுள்ளதாகவும் பிரதமர் தெரிவித்தார்.


கொழும்பிலுள்ள சுங்கத் திணைக்களத்தின் பிரதான மண்டபத்தில் நேற்று முன்தினம இடம்பெற்ற நிகழ்வொன்றில் பிரதமர் ரணில் விக்கிரம சிங்க விசேட விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தார்.

இதன்போது உரையாற்றிய பிரதமர், பெற்றுக்கொண்ட கடனைத் திருப்பிச் செலுத்த ஒரு நாட்டினால் முடியாமலிருந்தால் அந்த நாட்டின் பொருளாதாரம் வீழ்ந்து போய விடும். அப்படிப்பட்ட சூழ்நிலையிலேயே நாம் இருந்தோம். கடந்த காலங்களில் நாட்டின் செலவினங்கள் வருமானத்தை விடவும் அதிகரித்திருந்தன. வரி அறவீடுகளும் கணக்கீடுகளும் சரியான முறையில் இடம்பெறவில்லை. இலங்கையில் எல்லோருக்கும் வரி விலக்கு அளிக்கப்பட்டது. சிலருக்கு 30 வருடங்களுக்கான வரிவிலக்கு அளிக்கப்பட்டது. இதுவரையிலும் ஒரு சதமேனும் அவர்கள் செலுத்தவில்லை.

யுத்தத்தின் பின்னர் எமது செலவினங்களை ஈடு செய்வதற்குக்கூட பணம் இல்லாதிருந்தது. இந்த நெருக்கடிகளுக்கு மத்தியில்தான் 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# புதிய முறையிலேயே உள்ளூராட்சித் தேர்தல்

## அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவிப்பு



புதிய முறையில் உள்ளூராட்சி தேர்தல் நடைபெறும் என அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகமொன்று எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை புதிய முறையில் நடத்துவதற்கு ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப் பட்டது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடத்தப் பட்டது.

இந்தப்பேச்சு வார்த்தையின் போது புதிய முறையில் தேர்தல் நடத்தத் தீர்மானிக் கப்பட்டது.

புதிய முறையில் எதிர்வரும் மார்ச் மாதத் திற்கு முன்னதாக உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தப் படும். விகிதாசார முறையில் மட்டும் தேர்தல் நடத்து மாறு நாடாளுமன்றில் யோசனை முன்வைக்கப்பட்ட போதிலும், எதிர்காலத்தில் அவ்வாறான யோசனைகள் முன் வைக்கப்படாது எனவும் அவர் தெரிவித்தார். (இ-10)

# இன்று ஒரு தகவல்

## முகம் தெரியாத எதிரிகள்

நம் பார்வையில் தான் நம் எதிரிகள் உருவாகிறார்கள். அல்லது வளர்கிறார்கள் என்று எண்ணுவது தவறு.

நம்மை அறியாமலேயே நமக்கு எதிரிகள் உருவாகிறார்கள்.

நம்மால் மறைமுகமாகப் பாதிக்கப்பட்டவர்கள் மட்டுமின்றி நம்மால் மறைமுகமாகப் பாதிக்கப்பட்டவர்களும் நமக்கு எதிரிகள் ஆகிவிடுகிறார்கள்.

இதைவிட வேடிக்கை என்னவென்றால் நமக்கு முன் பின் தெரியாதவர்கள் கூட நமக்கு எதிரிகளாக ஆகிவிடுவதுண்டு.

உதாரணமாக-

ஒருவர் மேடையில் மிகப் பிரமாதமாகப் பேசுகிறார் என்று வைத்துக் கொள்வோம்.

உடனே சக பேச்சாளர்கள் அவரை விரோதி போல் எண்ணவும் நடத்தவும் ஆரம்பிக்கிறார்கள்.

இது கூடப் பரவாயில்லை!

கூட்டத்தில் பேச்சைக் கேட்டவர்களில் ஒரு பகுதியினர் கூட, இவன் என்ன இந்தப் போடு போடுகிறானே- எல்லோரையும் ஓர் அசத்து அசத்தி விட்டானே! என்கிற பொறாமையில் கிட்டத்தட்ட எதிரிகளாகிவிடுகிறார்கள்.

பத்துப் பேர் ஓர் ரயிலில் பெர்த் பெற முயற்சி செய்கிறார்கள்.

ஒருவருக்கு மட்டுமே இடம் கிடைக்கிறது. மற்ற ஒன்பது பேரும் அவருக்கு முகம் தெரியாத எதிரிகளே.

சிற்றூர் ஒன்றில் வாழும் ஒருவருக்கு லோட்டரியில் ஐந்து இலட்சம் கிடைக்கிறது.

அவ்வளவுதான்.

அந்த ஊர் மக்களே அவருக்கு முகம் தெரியாத எதிரிகள்.

ஆனால் பார்க்கும் போதோ பழகும் போதோ இவர்கள் நட்புப் போர்வையை போர்த்திக் கொள்வார்கள்.

முன்பின் தெரியாத போதும் ஒரே துறையில் இருப்பவர்கள் முகம் தெரியாத எதிரிகளே.

இந்தக் கோணத்தில் சிந்திக்காமல், இந்த உண்மையை உணராமல் அவர்களைச் சற்று மட்டமாக நடத்தியும், பெருமிதப் பார்வை பார்த்தும் குறைத்துப் பேசியும் சரிவரப் பழகாமலும் நிரந்தர விரோதிகளாக ஆக்கிக் கொள்கிறவர்கள் இருக்கிறார்கள்.

இவர்கள் அங்கீகரிக்கப்பட்ட எதிரிகளாக ஆகும் போது நம்முடைய வளர்ச்சி ஏகமாய்த் தடைப்படுகிறது.

இவர்களோடு மல்லுக்கட்டவே நமக்கு நேரம் சரியாக இருக்கிறது.

வளர்ச்சியைப் பற்றிச் சிந்திக்க முடியவில்லை.

இந்தத் தவறை மட்டும் ஒரு போதும் எவரும் செய்துவிட வேண்டாம்.

**லேனா தமிழ்வாணன்**

# சிறுநீரக மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டு ஏழு இந்தியப் பிரஜைகளுக்குமான விளக்கமறியல் தொடர்ந்து நீடிப்பு

சட்டவிரோத சிறுநீரக மாற்று நடவடிக்கை தொடர்பாக கொழும்பில் வைத்து கைது செய்யப்பட்ட இந்தியப் பிரஜைகள் எழுவரையும் தொடர்ந்தும் எதிர்வரும் 22ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில் இந்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே நீதவான் கிஹான் பிலப்பிட்டிய இந்த விளக்கமறியல் உத்தரவைப் பிறப்பித்தார்.

சட்டவிரோத சிறுநீரக மாற்று சத்திரகிசிச்சை சந்தேகத்தில் கடந்த பெப்ரவரி மாதம் கொழும்பில் வைத்து கைது செய்யப்பட்ட 8 இந்தியப் பிரஜைகளும் மிரிஹானை தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் அவர்கள் அனைவரும் தப்பிச்சென்றிருந்தனர்.

இவ்வாறு தப்பிச் சென்றவர்களில் 7 பேர் மன்னார் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்ட போதிலும் மற்றையவர் இந்தியாவிற்குச் தப்பிச் சென்றுவிட்டதாக கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினர் தெரிவித்தனர்.

இந்த நிலையில் கைது செய்யப்பட்ட 7 இந்தியப் பிரஜைகளுக்குமான விளக்கமறியலை நீதிமன்றம் மேலும் நீடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-10)



கேலிச்சித்திரம்

# இந்திய-இலங்கை உடன்படிக்கை குறித்து தேவையற்ற ஐயத்தை ஏற்படுத்த வேண்டாம்

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

(கொழும்பு)

**இந்திய-இலங்கை வர்த்தக உடன்படிக்கை தொடர்பாக நாட்டு மக்களிடமும் ஏனைய துறையினரிடமும் தேவையற்ற ஐயத்தினை ஏற்படுத்த வேண்டாமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**

முதலில் அமைச்சரவைக்கும் பின்னர் பாராளுமன்றத்திற்கும் சமர்ப்பித்து, பாதகமான விடயங்கள் காணப்படுமெனின் அவற்றை நீக்கியதன் பின்னர், எல்லோராலும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒப்பந்தம் ஒன்றிலேயே அரசாங்கம் கையெழுத்திடும் என ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சின் செலவு விடயம் தொடர்பில் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற வரவு செலவுத்திட்ட விவாதத்தில்கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசாங்கம் என்ற வகையில் இந்தியாவுடன் மட்டுமன்றி பொருளாதார ரீதியில் வலுவான பொருளாதார ஒத்துழைப்பினைப் பெற்றுக் கொள்ளக்கூடிய சகல நாடுகளுடனும் ஒப்பந்தங்களை மேற்கொள்ள அரசாங்கம் எதிர்பார்க்கின்றது எனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

அரசினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் தொடர்பாக சில தரப்பினர் மக்களை தவறான வழியில் வழிநடத்தக்கூடிய கருத்துக்களை முன்வைப்பது தொடர்பில் தமது கவலையை தெரிவித்த ஜனாதிபதி . நாட்டின் பாதுகாப்பு தொடர்பாகவும் மக்களின் நலன்கள் தொடர்பாகவும் செயற்படும் அனைவரும் இவ் விடயத்தில் தமது மனச்சாட்சிக்கு ஏற்ப செயற்படுவதன் முக்கியத்துவம் பற்றியும் தெரிவித்தார். (இ-10)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 922


**கதிர்**




**சிந்து**




**றாதை**




**றாதை**


செத்த பிறகுதான் நரகத்துக்கு போவாங்கன்னு கேள்விப்பட்டிருக்கேன் !!!

எனக்கு என்னமோ ??? நாம வேற எங்கயோ செத்துத்தான் இந்த நரகத்துக்கு வந்திருப்போம்னு தோனுது !!! ☻

**ஜெனோசன்**




**அனு அனுஜன்**




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# துறுதுறு கோமளவல்லி அதிரடி 'ஜெ' ஆன கதை!





"நெருப்பாற்றில் நீந்தியே பழக்கப்பட்டவள் நான்!" - சொத்துக்குவிப்பு வழக்கில் விடுவிக்கப்பட்டபின், பெங்களூரு பரப்பன அக்ரகாரா சிறைச்சாலையில் இருந்து வெளியே வந்த ஜெயலலிதா, தன் பொதுவாழ்க்கை பற்றி கூறிய வரிகள் இவை.

16 வயதில் சினிமாத்துறையில் நுழைந்த ஜெயலலிதாவின் வாழ்க்கை முழுவதுமே கிட்டத்தட்ட பொதுவாழ்க்கைதான். மருத்துவமனை படுக்கையில் இருந்தபோது கூட அந்த அதிரடிகள் தொடர்ந்தன. ஆம், முதல் இரண்டு நாட்கள் உடல்நிலைபற்றி பலவிதமான தகவல்கள் பரவிக்கொண்டிருந்த சூழலில்... உள்ளாட்சி தேர்தல் பற்றிய அறிவிப்பு அதிரடியாக வெளிவந்து அரசியல்வாதிகளின் கவனத்தை அந்தப் பக்கம் திருப்பிவிட்டது.

"சட்டம் படித்து சிறந்த சட்டத்தரணியாக ஆகவேண்டும், நல்ல பணவசதி படைத்த ஒரு பெண்மணியாக வாழவேண்டும்" இவைதான் சினிமாத்துறைக்குள் நுழைவதற்கு முன்னர் ஜெயலலிதாவின் எதிர்காலக் கனவாக இருந்தது.

தான் மேக்அப் போட்டதற்காக வருத்தப்பட்டு, 'சினிமா என்னோடு போகட்டும்... என் மகளுக்கு அதுவேண்டாம்' எனக் கூறி வந்த தாய் சந்தியா, திடீரென சினிமாவில் நடிக்கச் சொல்லி நிர்ப்பந்தப்படுத்திய போதுதான் தனது கனவு உடையப்போகிறது என்பதை ஜெயலலிதா முதன்முதலாக உணர்ந்தார். அம்மாவின் முடிவை எதிர்த்து வாதம் செய்திருக்கிறார். ஆனால், சூழல்... அம்மாவின் முடிவையே ஏற்கவைத்தது.

### ஜெயவிலாஸ்... லலிதவிலாஸ்!

ஸ்ரீரங்கத்தில் பிறந்து வளர்ந்த ரங்கசாமி ஐயங்கார் ஒரு பொறியாளர். பல்வேறு இடங்களில் குறுகிய காலங்கள் பணியாற்றியவர் கடைசியாக, (அப்போதைய) மைசூர் மாநிலத்தில் இருந்த இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் நிறுவனத்தில் பணி கிடைத்தவுடன் குடும்பத்தோடு மைசூரில் செட்டில் ஆனார். இவருக்கு அம்புஜவல்லி, வேதவல்லி, பத்மவல்லி என்ற மூன்று மகள்கள், ஒரு மகன்.

மைசூர் மகாராஜா அரண்மனையில் மருத்துவர் பணி கிடைக்கப்பெற்று அங்கேயே குடிபெயர்ந்த நரசிம்மன் ரங்காச்சாரியின் மகன் ஜெயராமன். இந்த ஜெயராமனுக்கும் ரங்கசாமி ஐயங்காரின் மகள் வேதவல்லிக்கும் பெற்றோர் சம்மதத்துடன் திருமணம் நடைபெற்றது. இந்தத் தம்பதிக்கு இரண்டு குழந்தைகள். ஜெயக்குமார் மற்றும் கோமளவல்லி.



கர்நாடக மாநிலம், மண்டியா மாவட்டம், பாண்டவபுராவில் உள்ள மேலுகோட்டே (மேல்கோட்டை) என்ற ஊரில் பிறந்த கோமளவல்லி, அம்மாவழி, அப்பாவழித் தாத்தாக்கள் இரண்டு பேரின் 'ஜெயவிலாஸ்', 'லலிதவிலாஸ்' ஆகிய பெயர்கள் கொண்ட வீடுகளில் மாறிமாறி வளர்ந்ததால் இரு குடும்பத்தின் அன்பின் நினைவாக ஜெயலலிதா என அழைக்கப்பட்டார். செல்லப்பெயர்... அம்மு. எம்.ஜி.ஆர் ஜெயலலிதாவை அம்மு என்றுதான் அழைப்பார்.

### 1960இல் ஆரம்பமான வாட்டாள் வம்பு!

1960 இல் முதல் நாட்டிய அரங்கேற்றத்தை நிகழ்த்திய ஜெயலலிதா, மைசூர் தசரா விழாவில் நாட்டியமாட 70 ஆம் ஆண்டு அழைக்கப்பட்டார். மைசூர் மாநிலம், கர்நாடக மாநிலம் என்று பெயர் மாற்றப்படுவதற்குக் கடும் எதிர்ப்புக் கிளம்பியிருந்த தருணம் அது. இந்த நேரத்தில் தசராவில் கலந்து கொள்வது சரியானது அல்ல என்று ஜெயலலிதாவின் நலன் விரும்பிகள் அறிவுறுத்தினர்.

அந்தத்தருணத்தில் அவர், விகடன் இதழுக்கு அளித்த பேட்டி ஒன்றில், 'கர்நாடகாவில் பிறந்து வளர்ந்து கன்னடம் நன்றாகப் பேசினாலும்கூட, நான் ஒரு தமிழர்' என்று குறிப்பிட்டிருந்தார். இந்தக்கருத்துக்கு, வாட்டாள் நாகராஜின் 'கன்னட சாலுவாலி' கட்சி சார்பில் கடும் எதிர்ப்பு கிளம்பியது. 'கர்நாடகாவில் பிறந்து வளர்ந்துவிட்டு இப்படி பேசுவதா... இதற்கு மன்னிப்பு கேட்க வேண்டும்!' என்ற மிரட்டல் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இது தான் ஜெயலலிதாவின் நிலைப்பாட்டுக்கு, கருத்துக்குக் கிடைத்த கடுமையான முதல்எதிர்ப்பு என்றே சொல்லலாம். எதிர்ப்புக்குப் பதில் எதுவும் சொல்லாத ஜெயலலிதா, உடல்நலன் காரணமாக தசரா விழாவில் பங்கேற்க இயலாது என்று மறுத்துவிட்டார்.

### சுற்றி வளைத்த வாட்டாள்!

இந்நிலையில் கன்னட திரைப்பட இயக்குநர் பி.ஆர்.பந்துலு, தனது கன்னட படத்தின் தமிழ் ரீமேக்கான 'கங்கா கௌரி' படத்தில் நடிக்க ஜெயலலிதாவை அழைத்தார். சென்னையில் நடத்துவதை விட மைசூரில் நடத்தினால் செலவு குறையும் என்பதற்காக அங்கே சூட்டிங் நடத்தப்பட்டது. அதேசமயத்தில்தான் தசரா விழாவும் நடைபெறுகிறது என்பதை ஜெயலலிதா மறந்துவிட்டார்.

சூட்டிங் கவர் செய்ய திரைத்துறையின் பிரபல செய்தித்தொடர்பாளர் பிலிம் நியூஸ் ஆனந்தன் தலைமையில் 10 பேர் கொண்ட செய்தியாளர் குழுவும் மைசூர் சென்றது. சூட்டிங் தொடங்கும் நேரத்தில் 100 பேர் கொண்ட படையோடு வந்த வாட்டாள் நாகராஜ்... ஜெயலலிதா , பந்துலு மற்றும் பத்திரிகையாளர்கள் இருந்த அறைக்குள் ஆயுதங்களுடன் நுழைந்து கதவைப்பூட்டிக் கொண்டு, ஜெயலலிதா முற்றுகையிட்டு மன்னிப்புக் கேட்கவேண்டும் என்று மிரட்டல் விடுத்தார். பந்துலுவும் அதையே வலியுறுத்தினார்.

ஆனால், அப்போது ஜெயலலிதா சொன்னது இதுதான், "நான் தமிழ் பெண், கன்னடப் பெண் அல்ல. மன்னிப்பும் கேட்க முடியாது!" என்று சத்தமாகக் கூறிவிட்டார். அவர் அப்போது தமிழில் பேசியதால் அந்தக் கும்பலுக்கு புரியவில்லை. இயக்குநர் சாமி, வாட்டாள் நாகராஜ் குழுவினரைப் பார்த்து, மைசூருக்கு வந்துள்ள தமிழர்களைத் தாக்குவது வெட்கரமானது என்று எடுத்துக்கூற கூட்டம் கலைந்து சென்றுவிட்டது.

### மாறாத தைரியம்!

தனது தீர்மானமான முடிவை மாற்றிக்கொள்ள மறுப்பதும், மிரட்டலுக்கு அஞ்சாமல் எதிர்த்து நிற்பதும் ஜெயலலிதாவின் உடன் பிறந்த குணம் என்பதை நேரில் பார்த்ததாக பத்திரிகையாளர்கள் நினைவுகூர்கின்றனர். இளைமையின் வலிமையும், புதிதாக பொதுவெளியில் வந்த உத்வேகமும் ஒருங்கே இருந்தபோது இருந்த அந்தக் குணம் கடைசிவரை அவரிடம் மாறவில்லை என்றே சொல்லலாம்.

தந்தை ஜெயராமன், பட்டப்படிப்பு முடித்தவராக இருந்தாலும் கூட சம்பாத்தியமோ, குடும்பத்தின் வளர்ச்சி குறித்தோ அக்கறை கொண்டவராக இல்லாமல் இருந்ததுடன், குடும்பச் சொத்துக்கள் அனைத்தையும் சிறிது சிறிதாகக் கரைத்தார். ஜெயலலிதா இரண்டு வயதாக இருக்கும்போதே ஜெயராமன் இறந்தும் போனார்.



வேதவல்லியாக இருந்த ஜெயலலிதாவின் தாய், திரைத்துறையில் சந்தியா என்ற பெயரில் காலடி எடுத்து வைத்து சிறுசிறு கதாபாத்திரங்களில் நடித்த வருவாயைக் கொண்டே தனக்கும், குடும்பத்துக்கும் வருவாய் ஈட்டிக்கொண்டிருந்தார். ஆனால், போதுமானதாக இல்லை.

### நெருப்பை வளர்த்த தனிமை!

இரண்டு தாத்தாக்கள் வீட்டிலும் செல்லமாக வளர்ந்து, எதிர்காலக் கனவுகளைச் சுமந்து கொண்டு பட்டாம் பூச்சிபோல சுற்றித்திரிந்த ஜெயலலிதாவுக்கு, பொறுப்புக்களைச் சுமக்க மறந்த தந்தை, தாய்பிடமிருந்து சரியான தருணங்களில் கிடைக்காத அன்பும், அரவணைப்பும், 16 வயதில் திரைத்துறைக்குள் நுழையவேண்டிய நிர்ப்பந்தம் உட்பட பல காரணங்கள் ஒன்று சேர்ந்து அழுத்தங்களைக் கொடுக்க, அவருக்குள் ஒரு நெருப்பு கொஞ்சம்கொஞ்சமாக உருக்கொள்ளவும், வேகமெடுக்கவும் தொடங்கியது.

இதை எல்லாவற்றையும் விட தனிமை என்பது அவருக்கு உடன்பிறந்த ஒன்றாகவே ஆகிப் போனதும் அந்த நெருப்புக்கு மேலும் வலுசேர்க்கத் தொடங்கியது.

இந்த உத்வேகம் அனைத்தும் வெற்றிகளை நோக்கியே அவரைத் தொடர்ந்து கொண்டு சென்றன. அவர் நடித்த படங்களில் பெரும்பாலானவை சுப்பர் ஹிட்தான். 'இஜ்ஜத்' என்ற ஹிந்திப் படத்தில் தர்மேந்திராவுடன் நடித்தார், அதுவும் ஹிட். 'Epistle' என்னும் ஓர் ஆங்கிலப் படத்திலும் நடித்துள்ளார் ஜெயலலிதா.

சட்டத்தரணி ஆகவேண்டும் என்று எண்ணிய ஜெயலலிதா, திரைத்துறையில் பட்டையைக் கிளப்பத் தொடங்கினார்.

(18ஆம் பக்கம் பார்க்க...)

# துறுதுறு கோமளவல்லி அதிரடி 'ஜெ' ஆன கதை!





### ஒரு வட்டம்... ஒளிவட்டம்!

அவரது வளர்ச்சிப் பாதையைக் கூர்ந்து கவனித்தால், சோதனைகளைக் கண்டு முடங்கிக் கிடப்பதல்ல பெண்ணினம் என்பதை உணர்த்துவதாகவே உள்ளதைக்காண முடியும். தனக்கு சரி என்று பட்டதைத் துணிச்சலோடு பேசுவதற்கும், செய்து முடிக்கவும்,தயங்கியதே இல்லை. ஆனால், இந்தக் குணம் அவருக்கு மேலும் பல துன்பங்களைக் கொடுத்தன. அதேசமயம், அடுத்தகட்ட வெற்றிக்கான தூண்டுகோலாக, உத்வேகமாக அந் தத் துன்பங்களை எடுத்துக் கொள்வதில் ஜெயலலிதா தனித் துவமாகவே இருந்து வந்திருக் கிறார். வெற்றிப்பாதைக்கு இடையூறாகக் குறுக்கே நிற்பவர்கள் பற்றியெல்லாம் அவர் கொஞ்சம்கூட அலட்டிக்கொள்ளாமல் அடித்துக் கிளப்பி முன்னேறிச் செல்லவும் தயங்கியதே இல்லை.

ஒவ்வொரு தருணத்திலும் அவருடன் அவரின் தனிமையும் பயணித்துக்கொண்டே இருப்பதையும் பார்க்கமுடிகிறது. அந்தத் தனிமை அவரது ஆளுமையைச் சுற்றி ஒரு வலுவான யாரும் உள்ளே நுழைய முடியாத ஒரு வட்டத்தை உருவாக்கிக் கொண்டதையும்பார்க்கமுடிகிறது. அதுவே ஒளிவட்டமாகவும் தொடர்கிறது.

### எரிமலை வெடித்தது!

தெலுங்கு சுப்பர் ஸ்டார் சோபன் பாபுவின் நட்பு கிடைத்தது. திருமணம் செய்து கொண்டு குடும்பம் அமைப்பார் என்று எதிர்பார்த்த ரசிகர்களுக்கு ஏமாற்றம். மீண்டும் எம்.ஜி.ஆரோடு அரசியல் நட்பு ஏற்பட அரசியலுக்குள் காலடி எடுத்துவைத்தார். எம்.ஜி. ஆரோடு 28 படங்களில் நடித்த ஜெயலலிதாவுக்கு, அந்த நெருக்கமே அரசியலிலும் கால்பதிக்க வைத்தது. கொள்கை பரப்புச் செயலாளர் என்கிற புதிய பதவியையே உருவாக்கிக் கொடுக்கப்பட, திரை நட்சத்திரம் என்ற தளத்தில் இருந்து அரசியல் பொறுப்புக்கு மாறினார் ஜெயலலிதா. மாநிலங்களவை உறுப்பினராகவும் ஜெயலலிதாவை உயர்த்தினார் எம்.ஜி.ஆர்.

ஆனால், அதேசமயம் தான் மிகவும் கட்டுப்படுத்தப்படுவதாக



வும், கண்காணிக்கப்பட்டுக்கொண்டே இருப்பதாகவும் ஜெயலலிதா உணர்ந்தார். சுதந்திரமாகச் சிந்தித்தும், செயற்பட்டும் பழகிய அவருக்கு இது அழுத்தங்களைக் கொடுத்தது. இதுதான் தீவிர அரசியலைக் கையில் எடுக்க வைத்தது.

எம்.ஜி.ஆரின் அரசியல் வாரிசாக அவர் கருதிக் கொண்டிருந்த நிலையில், எம்.ஜி.ஆர். இறுதி ஊர்வலத்தில் உடல் வைக்கப்பட்டிருந்த வாகனத்திலிருந்து எம்.ஜி. ஆரின் மனைவி ஜானகியின் உறவினர் தீபனால் (முதல் மரியாதை படத்தில் நடித்தவர்) கீழே தள்ளி விடப்பட்டார் ஜெயலலிதா. தமிழகம் மட்டுமல்ல உலகமே நேரடி ஒளிபரப்பில் அந்த அவமான நிகழ்வைப் பார்த்துக் கொண்டிருக்க... அதுவே ஜெயலலிதாவுக்கு பொசிட்டிவ் நிகழ்வாக மாறிபோனது. அவரின் உள்ளிருந்த நெருப்பு எரிமலையாக மாறியது.

### ஜெயலலிதாவுக்கு நிகர் அவர் மட்டுமே!

அ.தி.மு.கவானது ஜானகி அணி, ஜெயலலிதா அணி என இரண்டாகப் பிரிந்திருந்த நிலையில் இரட்டை இலைச் சின்னம் முடக்கப்பட, சேவல் சின்னத்தில் போட்டியிட்டு, சொல்லத்தக்க அளவில் எம்.எல்.ஏக்களைப் பெற்று எதிர்க்கட்சி தலைவராக வந்தமர்ந்தார். இரட்டை இலைச் சின்னத்தையும், அ.தி.மு.கவையும் கைப்பற்றி முதல்வராகவே ஆனார். இதனால், எம்.ஜி.ஆரா... கருணாநிதியா... என்றிருந்த தமிழக அரசியலை ஜெயலலிதாவா...! கருணாநிதியா...! என மாற்றியமைத்தார். தமிழகத் தின் முதல்வராக 6முறை அரியணை ஏறிய ஜெயலலிதா, முதல்வராகவேநம்பிடமிருந்துவிடைபெற்றார்.

தனக்கே உரித்தான ஆக்ரோஷ குணம், எதிர்த்து நிற்கும் துணிச்சல், அவமானங்களை அடுத்த வெற்றிக்கான ஊக்கமாக எடுத்துக்கொள்ளும் திறன் ஆகியவை திரையுலகம், பொதுவுலகம், அரசியல் உலகம் என்ற அனைத்திலும் ஜெயலிதாவின் வெற்றிக்கு துணையாக அமைந்தன.

ஜெயலலிதா மீது ஆயிரம் விமர்சனங்கள் இருந்தாலும்... ஜெயலலிதாவுக்கு நிகர் அவர் மட்டுமே என்பதிலும் மாற்றுக் கருத்தில்லை!

ஜூனியர் விகடன்

---

# தமிழ் சினிமா வரலாறு

## புற்றுநோயால் ராகினி மரணம் 318

கே.எஸ். கோபாலகிருஷ்ணனின் "சித்தி"யிலும் பத்மினியின் நடிப்பு பெரும் வரவேற்பை பெற்றது. திருவருட்செல்வர், பேசும் தெய்வம், குலமா குணமா முதலிய படங்களிலும் பத்மினி நடித்தார்.

### சிவாஜியுடன் அதிக படங்கள்

தமிழ் கதாநாயகர்களில் சிவாஜிகணேசனுடன் தான் பத்மினி அதிக படங்களில் நடித்துள்ளார். அவர்கள் ஜோடியாக நடித்த படங்கள் 59. எம்.ஜி.ஆருடன் 12 படங்களிலும் ஜெமினிகணேசனுடன் 12 படங்களிலும் இணைந்து நடித்தார்.

எம்.ஜி.ஆர்., மஞ்சுளா நடித்த ரிக்ஷாக்காரன் படத்தில் பத்மினி குணச்சித்திர வேடத்தில் நடித்தார்.

இதன்பின் பத்மினி அமெரிக்கா திரும்பினார். கணவர் ராமச்சந்திரன் வைத்தியசாலையை கவனித்துக் கொள்ள பத்மினி ஒரு நாட்டியப்பள்ளி தொடங்கினார்.

### ராகினி

இதற்கிடையே பத்மினியின் தங்கை ராகினிக்கு 1964 இல் திருமணம் நடந்தது. சேலத்தைச் சேர்ந்த மாதவன் தம்பி என்ற பிரா சுதாகரை மணந்தார்.

தமிழ், மலையாளம் உட்பட பல்வேறு மொழிகளில் 100 இற்கு மேற்பட்ட படங்களில் நடித்திருந்த ராகினி திருமணத்துக்குப் பின் நடிக்கவில்லை.

1979இல் ராகினி புற்று நோயால் பாதிக்கப்பட்டார். தீவிர சிகிச்சைகள் அளித்தும் பலன் இல்லை.

1976 டிசெம்பர் மாதத்தின் பிற்பகுதியில் ஒருநாள் சிவாஜிகணேசன் வீட்டுக்கு ராகினி திடீரென்று வந்தார். சிவாஜியிடமும் அவர் மனைவியிடமும் இன்று முழுவதும் உங்கள் வீட்டில்தான் இருக்கப் போகிறேன். இங்கேதான் சாப்பாடு என்று கூறினார்.

பத்மினி குடும்பத்தினர் அனைவரும் சிவாஜி குடும்பத்தினருக்கு நெருங்கிய பழக்கம் உள்ளவர்கள். ராகினி அடிக்கடி சிவாஜி வீட்டுக்கு வந்து விட்டு சற்றுநேரம் பேசிக்கொண்டிருந்து விட்டுத் திரும்பிச் செல்வார்.

இம்முறை நாள் முழுவதும் இங்கே தங்கப்போகிறேன் என்று சொன்னதால் சிவாஜிக்கு ஒரு சந்தேகம். என்னம்மா! வீட்டில் ஏதாவது சண்டையா? என்று விசாரித்தார். அதெல்லாம் ஒன்றுமில்லை. வீட்டில் வேண்டுமானால் விசாரித்துப் பாருங்கள் என்றார் ராகினி. அதன்படி சிவாஜி போன்செய்து விசாரித்தார். பிரச்சினை ஒன்றுமில்லை என்று சொன்னார்கள்.

சிவாஜி தன் மனைவி கமலாவை தனியே அழைத்து ராகினிக்கு ஏதோ மனம் சரியில்லை போலிருக்கிறது. நன்றாக கவனித்துக் கொள். அவளுக்குப் பிடித்தமானதை சமையல் செய்து கொடு என்று கூறி விட்டு படப்பிடிப்புக்கு கிளம்பிச் சென்றார்.

அன்று மாலை சிவாஜி



கணவர் மாதவன் தம்பியுடன் ராகினி.

திரும்பி வரும் போது ராகினி இருந்தார். என்னம்மா! மனம் சரியாகி விட்டதா? சந்தோசம் தானே? என்று கேட்டார். ராகினி சிவாஜியை பார்த்தார். அவர் கண்கள் கலங்கின.

வைத்தியர் சொல்லிவிட்டார். இன்னும் சில நாட்கள் தான் நான் இருப்பேன். நான் போவதற்கு முன் கடைசி முறையாக உங்களை எல்லாம் பார்க்க வேண்டும். உங்களுடன் ஒரு நாள் சந்தோசமாக இருந்து விட்டுப் போக வேண்டும் என்று தான் வந்தேன் என்றார்.

இதை சிவாஜியும் கமலாவும் சற்றும் எதிர்பார்க்கவில்லை. இருவருடைய கண்களிலும் கண்ணீர் பொங்கியது. என்னம்மா! என்ன சொல்றே என்று சிவாஜி பதற்றத்துடன் கேட்டார்.

அங்கிள் எனக்கு புற்றுநோய் குணம் ஆகாது என்று வைத்தியர்கள் சொல்லி விட்டார்கள் என்று ராகினி அழுதபடி கூற அவரை கமலாம்மாள் அன்புடன் அணைத்துக் கொண்டு கவலைப்படாதே அம்மா! நாங்கள் எல்லாம் இருக்கிறோம். சீக்கிரம் குணம் ஆகிவிடுவாய் என்று ஆறுதல் கூறினார்.

எவ்வளவோ நவீன மருத்துவம் எல்லாம் வந்து விட்டது. கவலைப்படாதே. எனக்குத் தெரிந்த வைத்தியர்களிடம் எல்லாம் விசாரிக்கிறேன். மேல்நாட்டிற்கு போவதென்றாலும் போய் வரலாம் என்றார் சிவாஜி. சொன்னபடியே ராகினிக்கு மேற்கொண்டு என்ன சிகிச்சை செய்யலாம் என்று வைத்தியர்களிடம் எல்லாம் சிவாஜி விசாரித்தார். ஆயினும் பலன் இல்லை. சிவாஜி வீட்டுக்கு வந்து விட்டுப் போன சில நாட்களில் (30.12.1976) ராகினி மரணம் அடைந்தார்.

(தொடரும்)

# ஜெயலலிதாவின் மனங்கவர்ந்த நாவல் இதுதான்



'சந்தியாவின் மகளாய் பிறந்தார்... இந்தியாவின் மகளாய் மறைந்தார்' என்ற வைரமுத்துவின் வைர வரிகளுக்கு ஏற்ப வாழ்ந்து மறைந்தவர் தமிழக முதல்வர் ஜெயலலிதா. அவர், மறைந்து சில நாட்கள் ஆகிவிட்ட போதி லும்... அவர் செயற் படுத்திய திட்டங்களும், சாதனைகளும் என்றும் மக்கள் மனதைவிட்டு அகலாதவை. அவர், திரை மற்றும் அரசியல் வாழ்க் கையில் மட்டும் கோலோ ச்சவில்லை. தமிழ், தெலுங்கு, கன்னடம், இந்தி, ஆங்கிலம் என ஐந்து மொழிகளிலும் புலமை வாய்ந்த பெண்ம ணியாக ஜொலித்த ஜெயல லிதாவுக்கு எழுத்துகள் என்றால் உயிர். தன்னு டைய சிறு வயதிலேயே ஆங்கிலப் புத்தகங்களை அதிகம் படித்தவர் அவர். இலக்கியத்தின் மீதும், எழுத்துகளின் மீதும் தீராக் காதல் கொண்டிருந்த ஜெ-வின் இன்னொரு பயணம்தான் இந்தக் கட்டுரை.




### "அது வெறும் இலக்கியப் படைப்பு அல்ல!"

சென்னையில் படிக்கும் போதே ஜெயலலிதா ஆங்கில காமிக்ஸ் புத்தகங்களை அதிகம் விரும்பிப் படித்தார். தன் மகள் படிப்பதற்காக தாய் சந்தியா ஏராளமான ஆங்கில காமிக்ஸ் புத்தகங்களை வாங்கிக் கொடுப்பார். ஒரே மூச்சில் பல காமிக்ஸ் புத்தகங்களைப் படிக்கும் ஆர்வம் அவருக்கு இருந்தது. தமிழில் வெளியான மூதறிஞர் ராஜாஜி எழுதிய, 'சக்கர வர்த்தி திருமகன்' நாவலை அவர் படித்தார். ஜெயலலிதாவுக்குப் பிடித்த இலக்கிய நூல் மகா பாரதம். அதுகுறித்து அவர், "அது வெறும் இலக்கியப் படைப்பு அல்ல. வாழ்க்கை முறையினை எவ்வாறு அமைத்துக் கொள்ள வேண்டுமென்று உணர்த்தும், வழிகாட்டும் அருள்வாக்கு.

பண்பாடு, கலாசாரம், சமூகவியல், அரசியல், யுத்த சாஸ்திரம் உட்பட அனைத்து சாஸ்திர அம்சங்களையும் உள்ளடக்கிய முழுமையான வாழ்க்கைக்குத் தேவையான பொக்கிஷம் அது" என்று ஒருமுறை கருத்துத் தெரிவித்திருந்தார்.

### ஜெ-வை மிகவும் கவர்ந்த நாவல்!




படப்பிடிப்புத் தளத்தில் ஒரு ஷொட் முடிந்து இன்னொரு ஷொட்டுக்கு தயாராகும் முன்பு, ஆங்கில நாவல்களுடன் மூழ்கியிருப்பார். சார்லஸ் டிக்கன்ஸ், ஜேன் ஆஸ்டேன், ஷிட்னி ஷெல்டன் போன்ற ஆங்கில எழுத்தாளர்கள் எழுதிய நாவல்களை ஜெயலலிதா விரும்பிப் படிப்பார். நாவல்களைப் போலவே கவிதைகளைப் படிப்பதிலும் அவர் ஆர்வம் கொண்டிருந்தார். கவிஞர் சாமர்செட்டின் கவிதைகளையும் விரும்பிப் படிப்பார். படப்பிடிப்புத் தளத்தில் ஒரு நிமிடத்தைக்கூட வீணடிக்கமாட்டார். ஐந்து அல்லது பத்து நிமிடங்களில் ஏதாவது ஓர் ஆங்கில நாவலைப் படிக்க ஆரம்பித்து விடுவார். '1960-70 ஆம் ஆண்டுகளின் அவ்வப்போது வெளிவந்த ஆங்கில நாவல்களைப் படிக்கும் ஒருசில திரை நட்சத்திரங்களில் ஜெயலலிதாவும் ஒருவர். அன்றைய சமயத்தில், ஆங்கிலத்தில் வெளியான திரில்லர், சமூகம், குடும்ப உறவுகள் கலந்த உணர்வு சம்பந்தமான நாவல்களை அதிகம் விரும்பிப் படித்தார். "புகழ்பெற்ற ஆங்கில நாவலாசிரியரான ஜுங் சாங் (jung chang) எழுதிய 'வைல்டு ஸ்வான்ஸ்: த்ரீ டாட்டர்ஸ் ஆஃப் சைனா' (Wild Swans: Three Daughters of china) என்கிற நாவல்தான் தன்னை மிகவும் கவர்ந்தவைகளில் ஒன்று" என ஓர் இதழுக்குப் பேட்டியளித்திருந்தார் ஜெயலலிதா. போயஸ் கார்டனில் உள்ள அவருடைய வீட்டில் ஒரு பெரிய நூலகம் இருக்கிறது. அதில், பெரும்பாலான புத்தகங்கள் எல்லாமே நாவல்கள் தான். அதிலும் ஆங்கில நாவல்கள்தான் அதிகம். அதேபோன்று, கொடநாடு எஸ்டேட்டிலும் ஒரு பெரிய நூலகம் உள்ளது. ஆரம்ப காலத்தில் ஹிக்கின்பாதம்ஸ் போன்ற பெரிய புத்தகக் கடைகளுக்குச் சென்று தனக்கு வேண்டிய ஆங்கில நாவல்களை வாங்கி வந்திருக்கிறார் ஜெயலலிதா.

### "அழகாக இருக்கும் பெண்கள் புத்திசாலியாக இருக்கமாட்டார்கள்!"

ஒருமுறை ஊட்டியில் உள்ள ஹிக்கின்பாதம்ஸ்'க்கு, ஜெயலலிதாவே நேரில் சென்று புத்தகங்கள் வாங்கிய நினைவலைகளை அந்த நிறுவனத்தாரிடம் பேட்டியெடுத்து ஒரு பத்திரிகை வெளியிட்டது. அவருடைய காரில் உடைகள், பொருட்கள் போன்றவற்றோடு புத்தகங்களும் அதிகம் இருக்கும். "தன்னை மிகவும் கவர்ந்த எழுத்தாளர்களில் குஷ்வந்த் சிங்கும் ஒருவர்" என்று ஜெயலலிதா ஒருமுறை கூறியிருந்தார்.

1992ஆம் ஆண்டில் சட்டசபை நடவடிக்கைகளை விமர்சித்த 'இல்லஸ்ட்ரேட்டேட் வீக்லி' (illustrated weekly) இதழ் குறித்து பேரவையில் பேசிய ஜெயலலிதா, '



இல்லஸ்ட்ரேட்டேட் வீக்லி இதழில் குஷ்வந்த் சிங் பணியாற்றிய வரை தரமானதாக இருந்தது. தற்போது தரம் குறைந்துள்ளதாக எண்ணுகிறேன்" என்று விமர்சனம் செய்தார். ஜெயலலிதா எம்.பியாக இருந்த காலத்தில், எழுத்தாளர் குஷ்வந்த் சிங்கும் ராஜ்யசபா எம்.பியாக இருந்தார். அவர், "அழகாக இருக்கும் பெண்கள் புத்திசாலியாக இருக்கமாட்டார்கள் என நினைத்தேன். ஆனால் உங்களைப் (ஜெயலலிதாவை) பார்த்தவுடன் அந்தக் கருத்தை மாற்றிக்கொண்டேன்" என்று சொன்னது குறிப்பிடத்தக்கது.

### எழுத்துகள் உயிரானவை!

ஜெயலலிதா எழுத்தாளராகவும் கோலோச்சினார். 'துக்ளக்' இதழில், ஜெயலலிதா எழுதிய கட்டுரைகளுக்கு வாசகர்கள் மத்தியில் ஏகப்பட்ட வரவேற்பு. ஆரம்பத்தில் தமிழ்நாட்டு அரசியல் பற்றி கட்டுரையை எழுதத் தொடங்கி, பின்னர் இந்திய அரசியல், சர்வதேச விவகாரங்கள் என அனைத்து விடயங்கள் குறித்தும் எழுத ஆரம்பித்தார். 'இந்திய மருத்துவர்களின் அலட்சியம்', 'கர்ப்பிணிகளுக்கான இத் தாலிய சட்டம்', 'ஜோஸ்யத்தின் சாத்தியம்' என அவர் ஆழமான கட்டுரைகள் எழுதினார்.

இது தவிர, 'குமுதம்' வார இதழிலும் எழுத ஆரம்பித்தார். 'தாய்' பத்திரிகையில், 'எனக்குப் பிடித்தவை' என்ற தலைப்பில் வாரம் ஒரு கட்டுரை, ஓராண்டு காலம் எழுதினார்.

தாய் இதழின் முக்கிய எழுத்தாளர்களில் ஒருவராக ஜெயலலிதா இருந்தார். 'பொம்மை' இதழில் 'அழகுக்கலை' பற்றி எழுதினார். 1980ஆம் ஆண்டு 'கல்கி' இதழில், 'உறவின் கைதிகள்' என்ற தொடரை எழுதினார்.

இதுதவிர, இன்னும் பல... தன் கைவண்ணத்தில் உருவான எழுத்துகளை எல்லாம் பத்திரிகை உலகுக்கு எழுதி, தன்னை ஓர் எழுத்தாளராய் பறைசாற்றிக் கொண்டார் ஜெயலலிதா.

அவர், இன்னும் பலவற்றை எழுத நினைத்திருக்கலாம் அல்லது படிக்க நினைத்திருக்கலாம். ஆனால், காலனுக்குத் தான் அவசரம் பொறுக்கவில்லை போலும். அவருடைய மூச்சுக்காற்றை நிறுத்தி... மெரீனா கடற்கரைக் காற்றைச் சுவாசிக்க வைத்துவிட்டான் அந்தக் கல்நெஞ்சக்காரன். உயிரைப் பறித்த அவனுக்குத் தெரியாது அவருடைய எழுத்துகள் உயிரானவை என்று.

ஜெ.பிரகாஷ்

---

## தூக்குங்கள்...தூக்குங்கள்...!

## பாராளுமன்றத்தையே அதிர வைத்த உறுப்பினரின் செயல் என்ன தெரியுமா?



பாராளுமன்றம் என்றாலே இப்போது சுவாரசியமான இடமாக மாறிவிட்டது. ஒருவருக்கு ஒருவர் மோதிக் கொள்வதிலும், குற்றச்சாட்டுக்களை முன்வைத்துக் கொள்வதிலுமே பலர் முன்னிலை வகிக்கின்றனர். யுள்ளனர்.

மக்களின் குறைகளை தீர்க்க பாராளுமன்றத்திற்கு சென்று அங்கே உறங்கியது மட்டுமல்லாமல் கீழே விழுந்தமை தற்போது பலவாறாக விமர்சிக்கப்படுகின்றது.

அதேசமயம் ஒருவர் உரை



நாடாளுமன்றத்தில் ஒரு உறுப்பினர் உரையாற்றும் போது பலர் உறங்கி விடுவது என்னமோ நாம் வழமையாக பார்க்கும் விடயமே.

நேற்று முன்தினம் ஓர் பாராளுமன்ற உறுப்பினர் உரையாற்றிக் கொண்டிருக்கும் போது அவர் அருகில் அமர்ந்திருந்த மற்றுமோர் உறுப்பினர் தன்னையறியாது உறங்கியுள்ளார்.

அதிக உடல் எடையைக் கொண்ட அவர் உறங்கிய யாற்றிக்கொண்டிருக்கும் போது, மற்றொரு பக்கம் அமர்ந்திருந்த பாராளுமன்ற உறுப்பினர் தொலைபேசியை பார்ப்பதிலேயே கருத்தாக இருந்துள்ளார்.

குறிப்பாக கீழே ஒருவர் விழுந்து அமளி துமளியாக பாராளுமன்றம் மாறிய போதும் அதனையும் கண்டு கொள்ளாது தொலைபேசியில் மூழ்கியிருந்துள்ளார் அருகில் அமர்ந்திருந்த உறுப்பினர்.

நாட்டிற்கு மிக முக்கிய



போது அவருடைய நிறையை தாங்கிக்கொள்ள முடியாத கதிரை உடைந்து அவர் கீழே விழுந்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து ஏனைய உறுப்பினர்கள் தூக்குங்கள் ... தூக்குங்கள் என கூச்சலிட்டு அவரை தூக்கி மான வரவு செலவுத் திட்ட விவாதத்தில் ஒருவர் உறங்கி விழுந்ததும், மற்றொருவர் தொலைபேசியில் கருத்தாக இருந்ததும் தற்போது சமூக வலைத்தளங்களில் பலவாறு விமர்சிக்கப்படுகின்றது. (இ-10)

---

## பாலர் பகல் பராமரிப்பு நிலைய வருடாந்த கலைவிழா நாளை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலைய 22ஆவது வருடாந்தக் கலை விழா நாளை சனிக்கிழமை பி.ப.2மணிக்கு சாவகச்சேரி டச்சு வீதி ஐங்கரன் மணி மண்டபத்தில் நிலையத்தலைவர் வை.இராசரத்தினம் தலைமையில் நடைபெறும். இவ்விழாவில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் பா.செந்தில்நந்தனன், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி முகாமைத்துவம்) நா.கந்ததாசன், மாவட்ட நன்னடத்தை உத்தியோகத்தர் க.சிவகரன் (யாழ். சிறுவர் நீதவான் நீதிமன்றம்). இலங்கை வங்கி சாவகச்சேரி முகாமையாளர் திருமதி செ. செந்தூரன், சாவகச்சேரி நகராட்சி மன்றச் செயலாளர் கா.சண்முகதாசன், தென்மராட்சி கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ச.அருமைநாயகம், சாவ. இந்துக் கல்லூரி அதிபர் நா.சர்வேஸ்வரன், சாவகச்சேரி றிபேக் கல்லூரி அதிபர் ந.ஜெயக்குமார், சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் (சாவகச்சேரி பிரதேச செயலகம்) திருமதி தீபா மஞ்சுரன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக சாவகச்சேரி நகர்கிராம அலுவலர் க.சுபாஸ் சந்திரபோஸ், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் ச.விநோதன், சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம் தலைவர் ந.சிவபாலன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். இவ்விழாவில் நிலைய மாணவர்களது கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (இ-5-29)




# பஞ்சு, சிலந்தி, மேகம்!

முன்னொரு காலத்தில் ஜப்பானின் ஒரு பகுதியில் 'யோஸ்கோ' எனும் பெயருடைய இளைஞன் வாழ்ந்து வந்தான். அவன் ஒரு விவசாயி.

ஒருநாள், அவன் தனது வயலில் வேலை செய்து கொண்டிருந்தான். அப்போது பாம்பு ஒன்று ஒரு சிலந்தியைப் பிடித்து உண்ண முயற்சித்துக் கொண்டிருந்தது. யோஸ்கோவுக்கு சிலந்தி மீது இரக்கம் ஏற்பட்டது. உடனே அவன் தனது தடியை எடுத்துக்கொண்டு ஓடிச் சென்று அந்தப் பாம்பை விரட்டியடித்தான். உயிர் தப்பிய சிலந்தி விவசாயிக்கு நன்றிக் கடன் பட்டதாய், தனது தலையைச் சாய்த்து அவனுக்கு நனறி செலுத்திவிட்டு, சென்று மறைந்தது.

இது நடந்து சில நாட்கள் ஆகியிருக்கும். ஒருநாள் யோஸ்கோவின் வீட்டுக் கதவைத் தட்டும் சத்தம் கேட்டது. அத்துடன் யாரோ மெல்லிய குரலில் "ஐயா' என்று அழைப்பதும்கேட்டது.

கதவைத் திறந்து பார்த்தவனுக்கு வியப்பு ஏற்பட்டது. அங்கே ஓர் அழகிய பெண் நின்று கொண்டிருந்தாள்.

'அவள், "உங்களுக்கு ஆடை நெய்ய ஆள் தேவைன்னு கேளவிப்பட்டேன். தயவு செய்து நான் உங்கள் வீட்டில் இருக்க அனுமதி கொடுங்கள். நான் உங்களுக்குத் துணி நெய்து கொடுப்பேன்" என்றாள்.



யோஸ்கோவுக்கு அவனுடைய தறியில் ஆடை நெய்ய உண்மையிலேயே ஆள்தேவை இருந்தது. அதனால் அவன் மிகுந்த சந்தோஷத்துடன் அந்தப் பெண்ணைத் தனது வீட்டில் தங்கிக்கொள்ள அனுமதித்தான்.

தறி இருந்த அறைக்கு அவளை அழைத்துச் சென்று காட்டினான். அவளும் உடனே ஆடை நெய்ய ஆரம்பித்தாள்.

அன்று இரவு தறி இருந்த அறைக்கு யோஸ்கோ சென்றான். எவ்வளவு துணி நெய்திருக்கிறாள் பார்க்கலாம் என்று யோசித்தபடி சென்றவனுக்கு வியப்பு காத்திருந்தது.

அவன் வைத்திருந்த நூல்கள் எல்லாவற்றையும் நெய்து முடித்திருந்தாள் அந்தப் பெண்.

ஒரே நாளில் இவ்வளவு துணியை நெய்து முடிக்க யாராலும் முடியாது என்பது அவனுக்குத் தெரியும்.

அதனால் அந்தப் பெண்ணை விசாரித்தான்.

அந்தப் பெண் அவன் கேட்ட கேள்விக்கு அளித்த பதில் விந்தையாக இருந்தது.

"நீங்கள் என்கிட்ட இந்த மாதிரி கேள்விகளெல்லாம் கேட்கக்கூடாது. இனிமேல் இந்தத் தறி அறைக்குள் என் அனுமதியில்லாமல் நீங்கள் வரக்கூடாது" என்றும் கூறினாள்.

இதைக் கேட்டு, சரியென்று தலையாட்டினான் யோஸ்கோ. இருந்தாலும் அவள் ஏன் அப்படிச் சொல்கிறாள் என்ற எண்ணம் அவனுக்குள் சுழன்று கொண்டேயிருந்தது.

ஒருநாள், அவளுக்குத் தெரியாமல் அந்த அறைக்குள் எட்டிப் பார்த்தான்.

அங்கே அவன் பார்த்த காட்சி அவனைத் திடுக்கிட வைத்தது.

அங்கே அந்தப் பெண்ணுக்குப் பதிலாக ஒரு பெரிய சிலந்தி துணி நெய்து கொணடிருந்தது. அது பஞ்சை விழுங்கி நூலாக்கித் தனது வாயிலிருந்து வெளிக்கொண்டு வந்து, தறியில் நுழைத்து துணி நெய்து கொண்டிருந்தது. மளமளவென்று துணிகள் தயாராகிக் கொண்டிருந்தன.

அவன் அந்தச் சிலந்தியை நன்றாக உற்றுப் பார்த்தான்.

அப்போதுதான் தெரிந்தது - அந்தச் சிலந்தி இவனால் பாம்பிடமிருந்து காப்பாற்றப் பட்ட சிலந்தி என்பது.

(தொடரும்...)

## 12.2016 09 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1582 (ஜூலியன், ஞாயிற்றுக்கிழமை) - பிரான்ஸ் அடுத்த நாளை திங்கட்கிழமை, டிசம்பர் 20 (கிரெகோரியன்) ஆக்கியது.
- 1793 - நியூயோர்க் நகரின் முதலாவது நாளிதழ் "தி அமெரிக்கன் மினேர்வா" வெளியிடப்பட்டது.
- 1856 - ஈரானிய நகரம் புஷேஹர் பிரித்தானிய ஆக்கிரமிப்புப் படைகளிடம் வீழ்ந்தது.
- 1905 - பிரான்சில் அரசையும் கிறிஸ்தவ தேவாலயங்களையும் பிரிக்கும் சட்டமூலம் கொண்டுவரப்பட்டது.
- 1917 - பிரித்தானியர் பாலஸ்தீனத்தின் ஜெருசலேம் நகரைக் கைப்பற்றினர்.
- 1922 - போலந்தின் முதலாவது அதிபராக "கப்ரியேல் நருட்டோவிச்" தெரிவு செய்யப்பட்டார்.
- 1937 - ஜப்பானியப் படைகள் சீன நகரான நாஞ்சிங்கைத் தாக்கின.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: பிரித்தானிய, மற்றும் இந்தியப் படைகள் இத்தாலியப் படையினரை எகிப்தில் தாக்கினர்.
- 1941 - இரண்டாம் உலகப் போர்: சீனக் குடியரசு, கியூபா, குவாத்தமாலா, பிலிப்பீன்ஸ் ஆகியன ஜெர்மனி மற்றும் ஜப்பான் மீது போரை அறிவித்தன.
- 1946 - இந்திய சட்டசபை ராஜேந்திர பிரசாத் தலைமையில் அமைக்கப்பட்டது.
- 1953 - ஜெனரல் எலெக்ட்றிக் நிறுவனம் தனது நிறுவனத்தில் பணியாற்றிய கம்யூனிஸ்ட்கள் அனைவரையும் பணிநீக்கம் செய்தது.
- 1961 - பிரித்தானியாவிடம் இருந்து தங்கனீக்கா விடுதலை பெற்றது.
- 1979 - பெரியம்மை நோய் முற்றாக அழிக்கப்பட்டு விட்டதாக உலக சுகாதார அமைப்பு அறிவித்தது. மனித உயிர் கொல்லி நோயொன்று முற்றாக அழிக்கப்பட்டது இதுவே முதலாவதாகும்.
- 1986 - இந்தியைத் திணிக்கும் அரசியல் சட்ட நகலை எரித்ததற்காக தி.மு.க. தலைவர் மு. கருணாநிதி உள்ளிட்ட 10 தி.மு.க. சட்டப்பேரவை உறுப்பினர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டனர்.
- 1990 - லெக் வலேசா போலந்தின் முதலாவது மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியானார்.
- 1992 - வேல்ஸ் இளவரசர் சார்ல்ஸ், இளவரசி டயானா இருவரினதும் பிரிவினை அறிவிக்கப்பட்டது.
- 2003 - மாஸ்கோ நகர மத்தியில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 6 பேர் கொல்லப்பட்டனர்.
- 2006 - மாஸ்கோவின் மருத்துவமனை ஒன்றில் இடம்பெற்ற தீவிபத்தில் சிக்கி 45 பேர் உயிரிழந்தனர்.

### பிறப்புகள்

- 1579 - மார்டின் தெ போரஸ், பெருவின் புனிதர். (இ. 1639)
- 1608 - ஜான் மில்டன், ஆங்கிலேயக் கவிஞர். (இ. 1674)
- 1868 - ஃபிரிட்ஸ் ஹேபர், வேதியியலுக்கான நோபல் பரிசு பெற்ற போலிய-செருமானியர். (இ. 1934)
- 1906 - கிரேசு ஹாப்பர், கோபால் (நிரலாக்க மொழி) உருவாக்கியவர். (இ. 1992)
- 1919 - வெ. தட்சிணாமூர்த்தி, இந்தியப் பாடகர், கவிஞர். (இ. 2013)
- 1934 - ஜூடி டென்ச், ஆங்கிலேய நடிகை.
- 1946 - சோனியா காந்தி, இந்திய அரசியல் வாதி.
- 1947 - அலன் ஜான்ஸ், ஆங்கிலேயத் துடுப்பாளர்.
- 1954 - ழான்-குளோடு சுன்கர், லக்சம்பர்க் அரசியல்வாதி.
- 1981 - தியா மிர்சா, இந்திய நடிகை.

### இறப்புகள்

- 1669 - ஒன்பதாம் கிளமெண்ட் (திருத்தந்தை). (பி. 1600)
- 1937 - நில்சு குஸ்டாப் டேலன், இயற்பியலுக்கான நோபல் பரிசு பெற்ற சுவீடியர். (பி. 1869)
- 1979 - ஃபுல்டன் ஜான் ஷீன், அமெரிக்கப் பேராயர். (பி 1895)
- 2006 - சு. வில்வரத்தினம் (சு.வி.) ஈழத்துக் கவிஞர். (பி. 1950)

### சிறப்பு நாள்

- தான்சானியா - விடுதலை நாள். (1961)
- பன்னாட்டு ஊழல் எதிர்ப்பு நாள்.

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 100 | 70 | 70 | 70 | 80 | 50 |
| உருளைக்கிழங்கு | 120 | 150 | 100 | 120 | 110 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 50 | 80 | 35 | 70 | 50 | 80 | 70 |
| தக்காளி | 60 | 80 | 45 | 70 | 60 | 80 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 80 | 40 | 60 | 60 | 60 | 50 |
| கோவா | 40 | 80 | 35 | 40 | 50 | 70 | 40 |
| கரட் | 100 | 80 | 60 | 80-160 | 80 | 150 | 120 |
| பூசணி | 40 | 80 | 30 | 40 | 40 | 60 | 40 |
| புடோல் | 60 | 80 | 40 | 80 | 50 | 80 | 60 |
| வாழைக்காய் | 50 | 60 | 35 | 50 | 40 | 80 | 50 |
| சின்ன வெங்காயம் | 100 | 60 | 80 | 100 | 120 | 120 | 80 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 90 | 100 | 90 | 100 | 100 |
| பாகற்காய் | 140 | 600 | 110 | 240 | 160 | 160 | 120 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 70 | 80 | 80 | 120 | 80 |
| கருணைக்கிழங்கு | 60 | 100 | 60 | 60 | 70 | 100 | 60 |
| பயற்றங்காய் | 120 | 200 | 70 | 120 | 100 | 160 | 180 |
| லீக்ஸ் | 100 | 100 | 80 | 120 | 100 | 120 | 100 |
| பீற்றூட் | 50 | 100 | 60 | 50 | 60 | 120 | 60 |
| கறிமிளகாய் | 140 | 200 | 100 | 200 | 120 | 160 | 120 |
| முருங்கைக்காய் | 180 | 200 | 100 | 200 | 100 | 200 | 220 |
| போஞ்சி | 150 | 300 | 200 | 180 | 180 | 240 | 240 |
| கத்தரிதம்புள்ள | 50 | 50 | 40 | 60 | — | 60 | 50 |
| கீரை - 1பிடி | 30 | 50 | 30 | 30 | 20 | 40 | 30 |
| தேசிக்காய் | 300 | 400 | 400 | 400 | 400 | 600 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 50 | 20-35 | 50 | 35 | 40 | 50 |
| இராசவள்ளி | 350 | 600 | — | — | 300 | — | — |
| வெங்காயப்பூ | 180 | 200 | — | — | — | — | — |
| முள்ளங்கி | 80 | 200 | 50 | 60 | 60 | 120 | 70 |
| பொன்னாங்காணி | 40 | 60 | 10 | 30 | 40 | 40 | 30 |
| வல்லாரை | 15 | 30 | 15 | 10 | 20 | 20 | 25 |
| ஈரப்பலா | 80 | 80 | — | 80 | 70 | 100 | 70 |

உணர்ச்சி வேகத்தில் அறிவாளியும் மடையன் ஆகி விடுவான்

~ காரவன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# அம்பாந்தோட்டையில் சீன முதலீட்டிற்கு எதிராக துறைமுக ஊழியர்கள் போராட்டம்

(கொழும்பு)

அம்பாந்தோட்டை மகிந்த ராஜபக்ஷ துறைமுகத்திற்கு அருகில் உள்ள பகுதியை சீனாவின் முதலீட்டாளர்களுக்கு வழங்குவதற்காக நல்லாட்சி அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானத்திற்கு எதிராக துறைமுக ஊழியர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

உடன் நடவடிக்கை எடுத்து அரசாங்கம் இதனை தடுத்து நிறுத்தாவிட்டால் தொடர் போராட்டங்களை நடத்தப் போவதாகவும் ஊழியர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த ஆர்ப்பாட்டம் நேற்றுப் பகல் அம்பாந்தோட்டை மகிந்த ராஜபக்ஷ துறைமுகத்திற்கு முன்பாக மேற்கொள்ளப்பட்டது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட பில்லியன் கணக்கான கடனை தீர்ப்பதற்காக அம்பாந்தோட்டை துறைமுகத்தைச் சார்ந்த பகுதிகளில் முதலிடுவதற்கு சீன அரசாங்கத்திற்கு வாய்ப்பளிப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அண்மையில் நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

மகிந்த ராஜபக்ஷ உட்பட ஒன்றிணைந்த எதிர்க்கட்சி இதற்கு எதிர்ப்பை வெளியிட்ட போதிலும் இதிலிருந்து பெறப்படும் பணத்தைக் கொண்டு கடனை செலுத்தவுள்ளதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

இதற்கமைய அம்பாந்தோட்டை துறைமுகத்தை அண்மித்த பகுதி சீன முதலீட்டாளர்களுக்கு திறக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் சீன முதலீட்டாளர்களுக்கு குறித்த வலயம் வழங்கப்பட்டால் தமது தொழிலுக்கு பாதிப்பு ஏற்படும் என்று அம்பாந்தோட்டை துறைமுக ஊழியர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

குறித்த வலயத்தில் சீனா முதலீடு செய்தால் துறைமுகமும் சீனாவிற்கே சென்றுவிடும் என்றும், அதனூடாக சீனப் பிரஜைகளுக்கு தொழில் வாய்ப்பு கொடுக்கப்பட்டு தங்களது தொழில் பறிக்கப்பட்டுவிடும் என்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

துறைமுகத்தில் பணி புரிகின்ற அனைத்து ஊழியர்களையும் உடனடியாக நிரந்தர பணியாளர்களாக நியமிக்கும்படியும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோரிக்கை முன்வைத்தனர்.

இதேவேளை சீன அரசாங்கத்தின் நிதியுதவியுடனேயே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அம்பாந்தோட்டை துறைமுகத்தை கடந்த 2010ஆம் ஆண்டு நவம்பர் மாதம் திறந்து வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

## ஆடு அறுக்க முதல் ஆணைத்துக்குச் சட்டி நீட்டுதல்...

ஆடு அறுக்க முதல் ஆணைத்துக்கு சட்டி நீட்டுதல் என்பது கிராமத்து மொழி. ஆடு இன்னமும் வெட்டப்படவில்லை. ஆனால் ஆணம் கேட்டு சட்டியைக் கொண்டு வந்து பிடித்தால் எப்படி இருக்கும் என்பது போல இந்தச் சொற்றொடர் அவசரப்படுவோரின் சூழ்நிலையை மிகத் துல்லியமாக எடுத்துக் காட்டும்.

இந்த இடத்திலும் இச்சொற்றொடர் மிகவும் பொருத்தமானது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் அண்மையில் அமெரிக்காவின் உப ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட மைக் பென்சுடன் தொலைபேசியில் உரையாடினார்.

அந்த உரையாடலில் அமெரிக்க ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் ட்ரம்ப் உடன் சந்திப்பை ஏற்படுத்துவது என்று தீர்மானிக்கப்பட்டதுடன் இலங்கைக்கு எதிராக ஐ.நாவில் பேசப்படும் போர்க்குற்றம் தொடர்பிலான விடயத்தை அப்படியே கைவிட வேண்டும் என அமெரிக்க ஜனாதிபதியிடம் மைத்திரிபால சிறிசேன கேட்டுக் கொண்டதாகவும் கூறப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் ஜனாதிபதியாக ட்ரம்ப் தெரிவு செய்யப்பட்டிருந்தாலும் அவர் 2017 ஜனவரி மாதமே தனது ஜனாதிபதி பதவியைப் பொறுப்பேற்பார்.

ஆக, பதவியை ஏற்க முன்னதாகவே இலங்கை மீதான போர்க்குற்ற விசாரணை தொடர்பிலான தீர்மானங்களை ஐ.நா சபை கைவிடுவதற்கு அமெரிக்க ஜனாதிபதி உதவ வேண்டும் என்று மைத்திரிபால சிறிசேன கோருகிறார் எனில், இதனையே ஆடு அறுக்க முதல் ஆணத்துக்குச் சட்டியை நீட்டுதல் என்று கூறிக் கொள்ளலாம்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீது தமிழ் மக்கள் மிகுந்த நம்பிக்கையும் நன்மதிப்பும் கொண்டுள்ளனர். தமிழ் மக்களின் வாக்குப் பலமே மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியாக்கியது.

உண்மையில் தமிழ் மக்களின் உரிமை விடயத்தில் மைத்திரிபால சிறிசேனவுக்கு கருசனை இருந்திருக்குமாயின் இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு அமெரிக்காவின் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள தாங்கள் உதவி செய்ய வேண்டும் என்றே கேட்டிருக்க வேண்டும்.

ஆனால் ஜனாதிபதி மைத்திரி அவ்வாறு கேட்காமல் இலங்கை மீதான போர்க்குற்ற விசாரணை என்ற விடயத்தில் இருந்து தம்மை விடுவிக்க வேண்டும் என்றே அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியிடம் கேட்டுள்ளார். இவ்வாறு கேட்டதற்குள் நிறைந்த அர்த்தமும் உள்ளார்ந்தமும் உண்டென்பது தெளிவு.

அதாவது போர்க்குற்ற விசாரணை என்ற விடயம் பேசுபடு பொருளாக இருக்கும் வரைக்குமே இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ற விடயமும் பேசப்படும்.

மாறாக ஐ.நா சபையில் இலங்கை மீதான போர்க்குற்ற விசாரணை என்பதை நீக்கிவிட்டால் அதன் பின்னர் இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பதை முழுமையாகக் கைவிட்டு விட முடியும் என்பதுடன் தமிழ்த் தரப்புக்கள் தங்களுக்கான தீர்வு என்ற விடயத்தில் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க முடியாமலும் போகும்.

இதனாலேயே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி ட்ரம்ப் பதவியேற்பதற்கு முன்னதாகவே அவரிடம் போர்க்குற்ற விசாரணையில் இருந்து முற்றுமுழுதான விடுவிப்பைக் கோரியுள்ளார் என்பது புலனாகும்.

இதனை மேலும் ஆதாரப்படுத்துவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாராளுமன்றத்தில் ஆற்றிய உரை அமைந்துள்ளது. வரவு செலவுத் திட்ட விவாதத்தில் உரையாற்றிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன படையினரைப் பலப்படுத்துவேன் என்று கூறியுள்ளார்.

ஆம், மகிந்த இரண்டு அடி பாய்ந்தால் நான் நான்கு அடி பாய்வேன் என்ற முடிவை ஜனாதிபதி மைத்திரி எடுத்துள்ளார் போலும்.

என்ன செய்வது இலங்கையின் வரலாற்றில் பண்டாரநாயக்க முதல் மைத்திரிவரை நான்கு அடி பாய்ந்து காட்டுவதிலேயே கருசனையாக இருக்கின்றனர்.

தமிழர்கள் எப்பாடுபட்டாலும் அது பற்றி அவர்களுக்கு எந்தக் கவலையும் இல்லை என்பதே நிசர்சனமானது.



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### உலகம் மிக மோசமான நிலையில் இருக்கும் பொழுது அதை ஏற்றுக்கொள்

உலகம் மிகவும் மோசமான நிலையிலிருக்கும் பொழுது அது உன்னிடம் அளக்கப்பட்டால் நீ என்ன செய்வாய்?

மிகவும் மோசமானதைப் பெறும் போது நீ குறை கூறக்கூடாது. உலகம் மிகவும் மோசமானதாக இருந்தால்தான் அது நல்லதாக ஆக முடியும். இவ்வுலகைச் சரிப்படுத்துவதற்காகவே நீங்கள் இங்கேயிருக்கிறீர்கள்.

ஜீம்: எதுவும் மிக மோசமாக இருக்கும் போது அங்கே காலமும் (ஆகாசமும்) அகண்ட வெளியும் மட்டுமே இருக்கின்றன. (சிரிப்பு)

ப்யாட்டி: நீ வாழ்க்கையைத் துயரமாகக் காணும் போதுதான் நீ உன்னில் உள்ளாழ்ந்து போகிறாய்.

பௌலா: நீ மூச்சுவிட முடியாமல் கஷ்டப்படும்போது நீ மூச்சை முயன்று உள்ளே இழுக்க வேண்டியிருப்பதைப் போல.

யாருடைய உதவியும் இல்லாமல் நீயே ஒரு காரியத்தைச் செய்தாக வேண்டும் எனும் பொழுது என்ன நிகழ்கிறது?

1.விரக்தியடைந்து குறை சொல்வாய்

2.மற்றவர்கள் உதவாததற்கு நன்றி சொல். அதனால் எல்லாப் பெருமையையும் ஏற்றுக்கொள்ளலாம்.

3.மனமார்ந்த நன்றியுடன் பிரார்த்தனை செய். நீ தனியாக அதைச் செய்து முடிக்கத் தேவையான சக்தியைப் பெறுவாய் என அறிந்து கொள். எல்லாவற்றையும் செய்பவன்-கர்த்தா- ஒருவனே.




### கல்வியின் நோக்கம் என்ன?

❖ கற்றுக் கொடுப்பவரும், கற்றுக் கொள்பவரும் நேர் வழியில் இருக்க வேண்டும். இந்த நிலை அற்றவர்களிடம் நல்வழி இருக்காது.

❖ கல்வி கற்பதைவிட்டு விடுவதும், பொருள்களை சேர்ப்பதில் முழு நேரத்தையும் செலவு செய்வதும் மக்களை நாசப்படுத்தும் இரண்டு வஸ்துகளாகும்.

❖ கல்விக்காக தன் உயிரை விட்டவர் மரணிப்பதில்லை. கல்வி கற்றுத்தந்தவர் மரணித்த பின்னும், அவரது நற்செயலின் கூலி அவரைச் சென்றடைகிறது.

❖ கல்வியில் ஒரு சந்தேகம் ஏற்பட்டால் அதுபற்றி தெரிந்தவரிடம் கேட்கலாம். அவர் அதைச் சொல்ல மறுத்தாலோ, மறைத்தாலோ, மறுமை நாளில் நெருப்பால் ஆன கடிவாளத்தைக் கொண்டு கண்களில் கடிவாளமிடப்படுவார்.


❖ மக்களை தன் பக்கம் இழுக்கும் நோக்கத்திற்காக மட்டும ஒருவன் கல்வி கற்பானாயின், அவனை அல்லாஹ் நரகத்தில் நுழையச் செய்வான்.

❖ ஒருவன் கல்வியைத் தேடி ஒரு பாதையில் நடந்தால், அந்தப்பாதையை அல்லாஹ்சொர்க்கப்பாதையாக ஆக்குகிறான்.

## பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்பு வாரம்

JSAC
யாழ். சமூக செயற்பாட்டு மையம்
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)
16

பெண்மையென்னும் மென்மைக்குள் பெண் தன்னை அடக்கிக் கொள்ளாது, மெல்லினத்தோடு வல்லினத்தையும் இணைத்து சமத்துவமான சமுதாயத்தின் நாளைய நாட்களுக்காய் இன்றே ஒன்றிணைவோம்.



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### வெள்ளிக்கிழமை நகம் வெட்டக்கூடாது? சனிக்கிழமையில் புதிதாக எதுவும் வாங்கக்கூடாது?

பொதுவாக நம் வீட்டில் தாத்தா, பாட்டி நிறைய கதைகள் மற்றும் வியக்க வைக்கும் சில விசித்திரமான பழக்கவழக்கங்களை சொல்வார்கள்.

உதாரணத்திற்கு வெள்ளிக்கிழமை அன்று நகம் வெட்டக்கூடாது, சனிக்கிழமை அன்று எந்த ஒரு பொருளையும் புதிதாக வாங்கக்கூடாது என்று கூறுவார்கள்.

**வெள்ளிக்கிழமை நகம் வெட்டக்கூடாது ஏன்?**

வெள்ளிக்கிழமை ஒரு புனிதமான மற்றும் கடவுளின் பக்திகள் நிறைந்த நாளாக கருதப்படுகிறது.

எனவே புனிதமான வெள்ளிக்கிழமை நாளன்று நம்முடைய வீட்டுற்குள் அல்லது வீட்டின் வெளியில் நகத்தை வெட்டுவது மிகவும் கெட்ட சகுனமாக கருதப்படுகிறது.

இதன் காரணமாக தான் நம்முடைய முன்னோர்கள் மற்றும் சத்குரு ஆகியோர்கள் வெள்ளிக்கிழமை அன்று நகத்தை வெட்டக்கூடாது என்று கூறுகின்றார்கள்.

**சனிக்கிழமை அன்று புதிதாக எதுவும் வாங்கக்கூடாது ஏன்?**

இன்றைய காலத்தில் மாயமந்திரங்கள், பில்லி, சூனியம் போன்ற வேலைப்பாடுகள் அதிகமாக நடந்து வருகின்றன.

எனவே நம் வீட்டில் உள்ளவர்கள் சனிக்கிழமை அன்று புதிதாக எதுவும் வாங்கக்கூடாது என்றும் யாருக்கும் எதுவும் கொடுக்கக் கூடாது என்றும் கூறுவார்கள்.

மேலும் நாம் அடுத்தவர்களின் வீட்டிற்கு செல்லும் போது, அங்கு தலை சீவக்கூடாது என்று சொல்வார்கள்.

ஏனெனில் நம்முடைய நகம் மற்றும் முடிகளை எடுத்து பில்லி, சூனியம் போன்ற வேலைப்பாடுகளை செய்து விடுவார்கள், இதனால் நமது வாழ்வில் பல தடங்கல் ஏற்படுமாம்.

## கவிதைத்தொகுதி வெளியீட்டு விழா

கவிஞர் சூரிய நிலாவின் "யாழ். கவி" அழகு கவிதைத் தொகுதி நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கொடிகாமம் பிரதேச சபை மண்டபத்தில் யாழ்ப்பாணம் உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தின் அதிபர் தா.சோதிலிங்கம் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் ஹாட்லிபேர்க் கல்லூரியின் ஓய்வுநிலை அதிபர் க.அருந்தவபாலன், சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேச சபை செயலாளர் மு.கோடீஸ்வரன், கைதடி சித்த ஆயுர்வேத வைத்தியசாலை வைத்தியர் ஐ.ஜெபநாமகணேசன் ஆகியோர்கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)

# அரை இறுதியில் சென்.தோமஸ்

## பருத்தித்துறை ஐக்கிய வி.கழகத்தின் மின்னொளியிலான கபடிப் போட்டி

வடமராட்சி கபடி சங்கத்தின் அனுமதியுடன் பருத்தித்துறை நகர அபிவிருத்தி சங்கம் சுவிஸ் அனுசரணையில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் மின்னொளியில் லீக் முறையில் நடத்தும் கபடிச் சுற்றுப்போட்டித் தொடர் நடைபெற்று வருகின்றது.



இப் போட்டியில் 'ஏ' பிரிவில் 5 கழகங்களும் 'பி' பிரிவில் 5 கழகங்களும் போட்டியிடுகின்றன. 06.12.2016 அன்று மாலை 6.30 மணிக்கு ஆரம்பமாகிய போட்டியில் பருத்தித்துறை-முனை சென். தோமஸ் 'பி' அணி, பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக 'ஏ' அணியை எதிர் கொண்டது. அரையிறுதிப் போட்டிக்குள் நுழைவதற்கு இரண்டாமிடத்தை பிடிப்பதற்காக இரு அணிகளும் பலப்பரீட்சை நடத்த வேண்டிய கட்டாயத்தில் களம் புகுந்தன. விறுவிறுப்பாக ஆரம்பித்த போட்டியில் இரு அணிகளும் தற்காப்பு ஆட்டத்தை நீண்ட நேரமாக கையாண்டு கொண்டிருந்தனர். பின்னர் திடீரென இரண்டு புள்ளிகளை பெற்றுக்கொண்டு ஐக்கியம 'ஏ' அணியை முன்னேறத் தொடங்கியது. அதற்கு பதிலடி கொடுத்தாற்போல சென்.தோமஸ் 'பி' அணியும் உடனடியாக இரண்டு புள்ளிகளைப் பெற்று சமப்படுத்தியது. இருப்பினும் ஐக்கியம் 'ஏ' அணி தாங்கள் ஆதிக்கத்தை செலுத்திக் கொண்டே முன்னேறி 10:09 என்ற புள்ளிகளுடன் முதலாம் பாதி ஆட்டம் நிறைவு செய்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் சென் தோமஸ் 'பி' அணி, திருப்பு முனையை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்பட்டபோதும் நிலைமைகள் ஐக்கியம் 'ஏ" அணியின் பக்கமே சாய்ந்து கொண்டிருந்தன. இதனால் ஐக்கியம் 'ஏ" முன்னேறி 22 புள்ளிகளை பெற்றுக்கொணடு சென். தோமஸ் 'பி' எந்தவித புள்ளிகளையும் கொடுக்காது வெற்றியை நோக்கி நகரத் தொடங்கியது.

இறுதியாக போட்டி முடிவுக்கு வரும்போது இருஅணிகளும் 25:25 என்ற புள்ளிகள் பெற்றுக் கொண்டதனால் சென்.தோமஸ் 'பி' அணி இரண்டாமிடத்துடன் அரை இறுதிக்குள் நுழைய ஐக்கியம் 'ஏ' மூன்றாமிடத்துடன் அரை இறுதிக்குள் நுழைந்தது.

இந்த கபடி போட்டியின் சிறந்து ஆக்கிரமிப்பாளராகவும் எதிர் ஆக்கிரமிப்பாளராகவும் செயறபட்டமைக்காக சிறந்த விளையாட்டு வீரராக சென்.தோமஸ் 'பி' அணியின் வீரர் அ.அஜித் தெரிவுசெய்யப்பட்டார். (க)

# மன்னார் கில்லறிஅணி லீக் சுற்றுக்கு தெரிவு



மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடக்கின் சுப்பர் கிங் 2016 சுற்றுத் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் ஆனைக்கோட்டை யூனியன் அணியை எதிர்த்து மன்னார் கில்லறி அணி மோதியது.

நடைபெற்ற லீக் சுற்றுக்கான தெரிவுப் போட்டியில் ஆனைக்கோட்டை யூனியன் அணியை 5:2 என்ற கோல்கணக்கில் வீழ்த்தி லீக் சுற்றுக்குள் நுழைந்தது மன்னார் கில்லறி விளையாட்டுக்கழகம். (க)



எவர் கீறீன் விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியாக நடத்திய கபடிச் சுற்றுப் போட்டியில் சம்பியன் ஆன பருத்தித்துறை சென்.தோமஸ் ஏ அணியினரை படத்தில் காணலாம்.



# மரண அறிவித்தல்

## திருமதி பத்மநாதன் கமலாம்பிகை

**(வாரிவளவு, காரைநகர்)**

காரைநகர் வாரிவளவைச் சேர்ந்த திருமதி பத்மநாதன் கமலாம்பிகை 08.12.2016 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பத்மநாதனின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற இங்கிரியா கணபதிப்பிள்ளை, தெய்வானைப்பிள்ளையின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான கல்கமுவா நடராசா, மாணிக்கத்தின் அன்பு மகளும், கோமாவதி, கௌரியம்பாள் (அதிபர் - காரை சுப்பிரமணிய வித்தியாசாலை), கல்யாணி (கனடா), ஐங்கரன் (உதவி முகாமையாளர், சமுர்த்தி வங்கி - காரைநகர்) ஆகியோரின் அன்புத் தாயாரும், கெங்காதரன் (சேரமான் அரிசியாலை, கிளிநொச்சி), அருள்மொழி (CSK ஊழியர்), கணேசலிங்கம் (கனடா), யாழினி (தேசிய சேமிப்பு வங்கி யாழ்.2ஆம் கிளை) ஆகியோரின் அன்பு மாமியாரும், சபேசன், சஞ்சீவன், சஜீவன், சசிரூபன், சானுஜன், வசீகரன், கஜீபா, நிசாந்தி (கனடா), சயந்தன் (கனடா), ஜஸ்விந் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும், லலிதாம்பிகை, விமலாம்பிகை, அன்னலட்சுமி, தவமலர், பாக்கியம், காலஞ்சென்ற வரதராஜா மற்றும் நவமலர், செல்வராசா, மங்கையர்க்கரசி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான பூமணி, இராஜேஸ்வரி மற்றும் பாலசிங்கம், அம்பிகைபாகன் (லண்டன்) ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் யாவும் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று 09.12.2016 இன்று பி.ப 3.00 மணியளவில் சாம்பலோடை இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**வாரிவளவு காரைநகர்**

**077 866 6155**

**தகவல் :-**

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

(C-6631)

# வடக்கின் தீர்மானம்...

2017ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தின் குழுநிலை விவாதம் நாடாளுமன்றத்தில் நடைபெற்று வருகின்றது.

இதனிடையே நேற்றையதினம பௌத்த சாசன மற்றும் நீதியமைச்சிற்கான நிதி ஒதுக்கீடு மீதான விவாதம் நடைபெற்றது.

அதன்போது வடக்கில் அத்துமீறிய புத்தர் சிலை வைப்புகள் மற்றும் விகாரை நிறுவுதல் என்பவற்றுக்கு எதிராக வடமாகாண சபையில் அண்மையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் நேற்று தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கும், நீதியமைச்சருக்கும் இடையே காரசாரமான விவாதம் நடைபெற்றது.

இதன்போது உரையாற்றிய நீதியமைச்சர், வடக்கில் பௌத்த விகாரைகளை அமைக்க இடமளிக்கக் கூடாது என்ற பிரேரணை ஒன்றை வடமாகாண முதலமைச்சர் மாகாண சபையில் நிறைவேற்றியுள்ளார். அவ்வாறான அதிகாரம் அவருக்கு எந்த சட்டத்தின் அடிப்படையில் வழங்கப்பட்டது என்பதை கேட்க விரும்புகிறேன். அரசியலமைப்பு அல்லது வேறு எந்த சட்டத்தைப் பயன்படுத்தி முதலமைச்சர் இந்தப் பிரேரணையை கொண்டுவந்தார்? எனினும் அப்படியொரு பிரேரணை நிறைவேற்றப்பட்டாலும் அதற்கான சட்ட அனுமதி கிடைப்பதில்லை. அதனை ஏற்றுக் கொள்ளவும் எம்மால் முடியாது. எனவே அந்தப் பிரேரணை குப்பைத் தொட்டியில் போடப்படுகிறது. முதலமைச்சர் விக்னேஸ்வரன் வடமாகாணத்தை அவமானப்படுத்தியுள்ளார். அவர் உச்சநீதிமன்ற நீதியரசராக இருந்தார் என்பதோடு எமது கௌரவத்திற்கும் உரித்தானவர் என நீதியமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது குறுக்கிட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் வடமாகாண சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் குறித்து நீதியமைச்சருக்கு விளக்கம் வழங்கினார்.

இதனையடுத்து தனது உரையை தொடர்ந்த அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ச, மாகாண சபைகளுக்கு உரித்தான அதிகாரங்கள் தொடர்பாக அரசியலமைப்பின் 154ஆவது பிரிவில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது என்று கூறினார்.

இதன்போது குறுக்கீடு செய்த ஒன்றிணைந்த எதிர்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெல, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினரான சி.வி.விக்னேஸ்வரன் வடமாகாண முதலமைச்சராக இருக்கின்றார்.

யாருக்கும் பொறுப்பொன்று இருக்கிறது. நூறு வீதம் தமிழ் மக்கள் இருக்கின்றனர் என்று கூட்டமைப்பினர் தெரிவித்தாலும் அங்கு 15 தொடக்கம் 18 ஆயிரம் சிங்கள மக்கள் வாழ்ந்த பகுதி என்பதோடு 97 ஆயிரம் முஸ்லிம் மக்கள் இருந்த பகுதியுமாகும்.

அவர்களை அங்கியிருந்து வெளியேற்றிவிட்டு நூறுவீதம் என்று கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று தெரிவித்தார்.

எவ்வாறாயினும் கெஹலிய ரம்புக்வெல எம்.பியின் இந்தக் கூற்றை நிராகரித்த சிறிதரன் எம்.பி, முஸ்லிம் மக்களின் குடியேற்றங்களை தாம் எதிர்க்கவில்லை என்றும், வலுக்கட்டாயமாக மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகளையே எதிர்ப்பதாகவும் கூறினார்.

இதனைத் தொடர்ந்து சபையில் உரையை மீண்டும் தொடர்ந்த அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ச- சிலருக்கு இனவாதமே ஒட்சிசனாகும். நாங்கள் வடமாகாண முதலமைச்சர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மற்றும் எதிர்கட்சித் தலைவரை மதிக்கின்றோம். இந்தக் குழுவினர் (பொது எதிரணியினர்) அப்படியான சிந்தனையில் இல்லை. தமிழ் மக்களின் மற்றுமொரு பிரதிநிதிகளான வட மாகாண முதலமைச்சர் தலைமையிலான சபையிலுள்ள உறுப்பினர்கள் இந்தத் தலைவர்களுக்கு மேல்தான் தாங்கள் இருக்கின்றோம் என்பதை தமிழ் மக்களுக்கு முன்பாக நிரூபிக்க முனைகின்றனர் எனத் தெரிவித்தார். (செ-11)

# மோதல், கலவர...

தாம் தற்போது பகைமையை மறந்து சமாதானமாக இருப்பதாக தெரிவித்து குறித்த தமது முறைப்பாட்டை மீள வாங்கியதன் அடிப்படையில் இவ்வழக்கு நடவடிக்கையானது முடிவுறுத்தப்பட்டுள்ளது.

கடந்த யூலை மாதம் 16ஆம் திகதி யாழ்.பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான பீட மாணவர்கள் முதலாம் வருட மாணவர்களை வரவேற்பதற்கான நிகழ்வுகளை ஏற்பாடு செய்திருந்தனர்.

இதன் போது சிங்கள மாணவர்கள் வழமைக்கு மாறாக வரவேற்பு நடனத்தில் சிங்கள முறையிலான கண்டிய நடனத்தை நடத்த ஏற்பாடு செய்திருந்தனர்.

இதனையடுத்து இது தொடர்பாக ஆரம்பத்தில் கருத்து முரண்பாட்டில் ஆரம்பித்து இறுதியில் தமிழ், சிங்கள மாணவர்களுக்கு இடையிலான மோதல் கலவரமாக உருபெற்றிருந்தது.

அத்துடன் இம் மோதல், கலவர சம்பவத்தில் சிங்கள மாணவர் ஒருவர் படுகாயமடைந்து கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்ததுடன் குறித்த மாணவனது முறைப்பாட்டுக்கு அமைய தமிழ் மாணவர்கள் சிலருக்கு எதிராக யாழ்.நீதவான் நீதிமன்றில் வழக்கும் தொடுக்கப்பட்டிருந்தது.

இதேபோன்று தமிழ் மாணவர்கள் மேற்கொண்டிருந்த முறைப்பாட்டுக்கமைய சிங்கள மாணவர்களுக்கு எதிராகவும் யாழ்.நீதவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அந்தவகையில் குறித்த இரு வழக்கு விசாரணைகளும் ஒரே சமயத்திலாக கடந்த நான்கு மாதங்களாக யாழ்.நீதவான் நீதிமன்றில் இடம்பெற்று வந்திருந்தது.

அத்துடன் கடந்த 2ஆம் திகதி எடுத்துக்கொள்ளப்பட்ட வழக்கு விசாரணையின் போது குறித்த இரு தரப்பு மாணவர்களும் மன்றில் சட்டத்தரணி ஊடாக தாம் தற்போது ஒற்றுமையாக இருப்பதாகவும் எனவே இவ் வழக்கை முடிவுக்கு கொண்டுவர வேண்டும் எனவும் குறிப்பிட்டிருந்தனர்.

இதனையடுத்து நீதவான், குறித்த சம்பவம் தொடர்பில் காயமடைந்த நபர் தனது முறைப்பாட்டை மீளப் பெறுவதாக அதே பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்து அது தொடர்பாக அப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியால் நீதிமன்றுக்கு தெரியப்படுத்தப்பட்டால் இவ் வழக்கை முடிவுக்கு கொண்டுவரலாம் என குறிப்பிட்டிருந்தார்.

அதற்கமைய நேற்றையதினம் வழக்கானது மீள யாழ்.நீதவான் நீதிமன்றில் நீதவான் எஸ்.சதீஸ்கரன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்த போது மாணவர்கள் சார்பில் சட்டத்தரணி சயந்தன் முன்னிலையாகியிருந்தார்.

இதன்போது கோப்பாய் பொலிஸார் குறித்த மோதல் சம்பவம் தொடர்பாக இருதரப்பு மாணவர்களும் தாம் செய்திருந்த முறைப்பாட்டை மீள கைவாங்கியதாக மேலதிக அறிக்கையை மன்றில் சமர்ப்பித்திருந்தனர்.

இதனடிப்படையில் குறித்த வழக்கானது முடிவுறுத்தப்படுவதாக நீதவான் அறிவித்திருந்தார். (இ-4)

# எதிர்க் கட்சித் தலைவர் இரா.சம்...

தமிழர் தலைமைகள் பகிரங்க மன்னிப்புக் கோரியதில்லை. ஆகவே சம்பந்தன் பகிரங்க மன்னிப்பு கேட்கவேண்டும் என ஜாதிக ஹெல உறுமய கட்சி தெரிவித்துள்ளது.

ஜாதிக ஹெல உறுமய கட்சியினால் நேற்று கொழும்பில் நடத்தப்பட்ட செய்தி யாளர் சந்திப்பின் போதே கட்சியின் ஊடகப் பேச்சாளர் நிஷாந்த ஸ்ரீ வர்ணசிங்க மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

'இலங்கை தமிழர்கள் தண்டிக்கப்பட்டமை மற்றும் தமிழர் சொத்துக்கள் அழிக்கப்பட்டமை என்ற விடயங்கள் தொடர்பில் இலங்கை அரச தலைவர்கள் மன்னிப்புக் கோரிய இருசந்தர்ப்பங்கள் இலங்கை வரலாற்றில் நடைபெற்றுள்ளது.

முதலாவதாக சிங்கள மக்கள் மூலம் தமிழ் மக்கள் தண்டிக்கப்பட்டமை அல்லது கருப்பு ஜூலை கலவரத்தில் நடைபெற்ற அசம்பாவிதம் குறித்து ஒட்டுமொத்த சிங்கள மக்கள் சார்பிலும் மனிப்புக் கேட்பதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க மன்னிப்புக் கோரினார்.

அதன் பின்னர் யாழ் நூலகம் எரிக்கப்பட்டமை தொடர்பில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் மன்னிப்புக் கோரினார்.

உண்மையில் நாட்டின் சிறுபான்மை மக்களுக்கு எதிராக சிங்கள மக்கள் மேற்கொண்ட அசம்பாவிதங்கள் குறித்து மன்னிப்புக்கோரியமை நல்ல விடயமாகும்.

ஆனால் தமிழ் மக்களினால் தமிழர் ஆயுதக் குழுக்களினால் தற்போதைய தமிழர் அரசியல் தலைமைகளினால் சிங்கள மக்களுக்கு நடந்த அசம்பாவிதங்கள் குறித்து இதுவரையில் தமிழர் தலைமைகள் மன்னிப்புக்கோரியதில்லை.

விடுதலைப்புலிகள் மூலம் தலதாமாளிகை தாக்கப்பட்டமை, ஸ்ரீமகாபோதி தாக்கப்பட்டமை, பௌத்த பிக்குகள் கொல்லப்பட்டமை, சிங்கள அப்பாவி மக்கள் கொல்லப்பட்டமை உள்ளிட்ட பல்வேறு குற்றச்செயல்களுக்கு இதுவரையில் தமிழர் தரப்பு வருந்தவும் இல்லை.

நல்லிணக்கம் மற்றும் ஒற்றுமை பற்றி பேறுவதில் இரண்டு தரப்பும் அதற்கு முன்வர வேண்டும்.

சிங்கள தரப்பு விட்டுக்கொடுப்புடனும் மன்னிப்புக் கேட்கும் மனப்பாங்குடன் செயற்படும்போதும் தமிழர் தரப்பினால் ஏற்படுத்தப்பட்ட குற்றங்களுக்கும் அநியாயங்களுக்கும் தமிழர் தலைமைகள் மன்னிப்புக் கேட்க வேண்டும். இதற்காக எதிர்க்கட்சி தலைவர் பகிரங்க மன்னிப்பை கேட்க வேண்டும் என்றார். (செ-11)

# முஸ்லிம்கள் ஆயுதம் ஏந்தும்...

அவர் இதனைத் தெரிவித்தார். அவர் இது தொடர்பில் மேலும் கூறியதாவது,

பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் ஞானசார தேரர் உள்ளிட்ட பலர் இஸ்லாம், அல்குர்ஆன் மற்றும் அல்லாஹ் தொடர்பாக மிகவும் கீழ்த்தரமான கேவலமான பிரசாரங்களை செய்து வருகின்றனர்.

இந்த விடயம் தொடர்பில் முஸ்லிம் அலுவல்கள் அமைச்சு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இனவாதம் பேசுபவர்களை கைது செய்ய வேண்டும் அல்லது அவர்களை கட்டுப்படுத்த வேண்டும் என வலியுறுத்தி முஸ்லிம் எம்.பிக்கள் அனைவரும் இணைந்து ஜனாதிபதி, பிரதமர் மற்றும் பொலிஸ்மா அதிபர் ஆகியோருக்கு கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்தோம். ஆனால், இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

அதேபோன்று, சில பாராளுமன்ற உறுப்பினர்கள் பேசுகின்ற போது முஸ்லிம்கள் அரேபிய கலாசாரத்தை பின்பற்றக் கூடாது எனத் தெரிவித்திருந்தனர். உலகம் முழுவதிலும் உள்ள முஸ்லிம்கள் அனைவருக்கும் ஒரே கலாசாரம் தான் என்பதை நான் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். முஸ்லிம்கள் அரபு நாட்டில் இருந்தாலும் சரி வேறு எங்கு இருந்தாலும் சரி அனைவருக்கும் இஸ்லாம் ஒரே கலாசாரத்தை வழிகாட்டியுள்ளது. முஸ்லிம்கள் எவ்வாறு வாழ வேண்டும் என்பது தொடர்பில் ஒரு வாழ்க்கை வழிகாட்டலை ஷரியா சட்டம் வரையறுத்துள்ளது. எனவே, எமது மார்க்க வட்டங்களில் எவருக்கும் தலையிட முடியாது என்பதை ஆணித்தரமாக தெரிவித்துக் கொள்கின்றேன்.

முஸ்லிம்கள் இந்நாட்டில் வாழ முடியும். ஆனால் அவர்கள் இஸ்லாம் மார்க்கத்தை பின்பற்றக் கூடாது, குர்ஆனை பின்பற்றக்கூடாது போன்ற கருத்துக்களை கூறி பொதுபல சேனா ஞானசார தேரர் மீண்டும் இஸ்லாம் தொடர்பில் கேவலமாக விமர்சிக்கத் தொடங்கியுள்ளார். நாங்கள் இந்த விடயம் தொடர்பில் தெளிவாகக் கூறிக்கொள்ள விரும்புகின்றோம். முஸ்லிம் சமூகத்தின் மூச்சே இஸ்லாம் தான் - வாழ்க்கையே குர்ஆன் தான் - உலகத்தில் நாங்கள் வாழ்வதே இந்த மார்க்கத்துக்காகத்தான். இந்த மார்க்கத்தை பின்பற்றக் கூடாது என யாராவது தடைவிதிப்பார்களாயின் அவர்களுக்கு எதிராக நாங்கள் யுத்தம் செய்தாக வேண்டும் என இஸ்லாம் கூறுகின்றது.

இன்று இஸ்லாத்துக்கும் - முஸ்லிம்களுக்கும் எதிராக மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளினால் முஸ்லிம் இளைஞர்கள் மிகவும் மனவேதனையுடனும் - கவலையுடனும் இருக்கின்றார்கள்.

இஸ்லாமும், குர்ஆனும், அல்லாஹ் தொடர்பில் தொடர்ந்தும் விமர்சிக்கப்படும் போது முஸ்லிம் இளைஞர்களை எம்மால் கட்டுப்படுத்த முடியாது போய்விடும். இனவாத செயற்பாடுகளை கட்டுப்படுத்த முஸ்லிம் எம்.பிக்கள் நடவடிக்கை எடுப்பதில்லை எனக் கூறி முஸ்லிம் இளைஞர்கள் எங்களை கடுமையாக விமர்சித்து வருகின்றனர்.

எனவே, இந்நிலை தொடர்ந்தும் இருக்குமாக இருந்தால் முஸ்லிம் இளைஞர்கள் ஆயுதம் ஏந்துவதை யாராலும் தடுக்க முடியாது போய்விடும். அவர்களது முதல் இலக்கு நாங்கள் தான். எங்களை படுகொலை செய்துவிட்டே அவர்களுடைய போராட்டங்களை ஆரம்பிப்பார்கள்.

தமிழ் மக்களின் உரிமைகள் மறுக்கப்பட்டதனாலேயே தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தினார்கள்.

அவர்கள் ஆயுதம் ஏந்திய பின்னர் முதலில் படுகொலை செய்தது தமிழ் அரசியல் தலைவர்களையே. இந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்கு எமக்கு 30 ஆண்டுகள் போய் நாடு குட்டிச்சுவரானது. இது போன்று, முஸ்லிம் இளைஞர்கள் ஆயுதம் ஏந்த நாங்கள் இடமளிப்போமானால் இந்த பிரச்சினையை 50, 60 வருடங்கள் சென்றாலும் தீர்க்க முடியாது போய்விடும் என்பதுடன் நாடு சீரழிந்துவிடும்.

இந்த நாடு பௌத்த நாடு. இங்கு வாழ்கின்ற அனைத்து மக்களுக்கும் சம உரிமை உள்ளது. முஸ்லிம்கள் இந்நாட்டுக்கு வந்தான் வரத்தான்கள் அல்ல மாறாக இந்நாட்டின் சொந்தக்காரர்கள். நாட்டின் அனைத்து தேசிய பிரச்சினைகளிலும் நாங்களும் பங்கு கொண்டுள்ளோம். நாட்டின் சுதந்திரத்துக்காக முஸ்லிம்களும் போராடியுள்ளனர். நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்காக இரவு - பகலாக உழைக்கின்றோம்.

நாட்டை காட்டிக்கொடுத்தவர்கள் அல்ல முஸ்லிம்கள். நாங்கள் இராணுவத்துக்கு எதிராகவோ - பொலிஸாருக்கு எதிராகவோ என்றுமே செயற்பட்டது கிடையாது. இந்த நாட்டை எமது உயிருக்கும் மேலாக நாங்கள் நேசிக்கின்றோம்.

எனவே சகல இன மக்களும் தங்களது அரசியல் உரிமைகளோடு சுதந்திரமாகவும் நிம்மதியாகவும் வாழ்வதற்கான சூழலை அரசு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என வலியுறுத்தினார். (செ-11)

# மைத்திரி, ரணி...

தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட இளைஞன் 26 வயதுடையவர் எனவும், காலி - ரத்கம பகுதியைச் சேர்ந்தவர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-10)

# வடக்கில் முளை...

கொண்டு கருத்து வெளியிட்ட அக்கட்சியின் விஜித ஹேரத் கிளிநொச்சியில் புதிதாக விகாரைகள் அமைகப்படுவதாக பொய்யான குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுவதாக கூறினார்.

இந்நிலையில் குறுக்கிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் 2009 ஆம் ஆண்டுக்கு முன்னதாக கிளிநொச்சியில் ஒரேயொரு விகாரை மாத்திரமே காணப்பட்டதாக சுட்டிக் காட்டினார்.

விஜித ஹேரத் கருத்துரைக்கையில் வடக்கில், தற்போது புதிதாக பௌத்த விகாரைகள் அமைக்கப்படுவதாக கூறப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

கடந்த சில நாட்களுக்கு முன்பதாக பௌத்த விகாரை ஒன்று புதிதாக அமைக்கப்படுவதாக கூறி 400றக்கும் மேற்பட்ட மக்களை தூண்டிவிட்டு பாரிய கூட்டமொன்றை நடத்தினார்கள். உண்மையில் புதிய விகாரை ஒன்று அமைக்கப்படுகின்றதா? இல்லை.

கிளிநொச்சியில் அமைந்துள்ள பிரதான இராணுவ முகாமில் ஒரு புத்தர் சிலை வைக்கப்பட்டுள்ளது. அது கோவிலில் இருந்து 50 மீற்றர் தொலைவிலேயே இருக்கின்றது. இவ்வளவு காலமும் ஒரு சிலை இருந்தது ஆகவே சுவர் அமைக்கப்படுகின்றது அவ்வளவுதான்.

எனினும் இதனை பெரிதாக்கி, கோவில் காணியை அபகரித்துள்ளதாக குற்றம்சாட்டி போராட்டங்களை நடத்துகின்றனர். எனினும் இது தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய அரசாங்கம் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை.

உண்மையில் கோவில் காணி கைப்பற்றப்படவில்லை, புத்தர் சிலை இராணுவ முகாமிற்குள்ளேயே காணப்படுகின்றது. தேவையற்ற பிரச்சினைகளை தோற்றுவிப்பது யார்? அரசியல் ரீதியாக தோல்வியடைந்தவர்களே இதனை மேற்கொள்கின்றனர்.

எனினும் தற்போது யாராவது சட்டவிரோதமாக விகாரைகளை, பள்ளிகளை அமைப்பார்களாயின் அது தவறு. அதனை தடுப்பது அரசாங்கத்தின் கடமை, காணப்படும் விகாரைகளை இல்லாதொழிக்க எவருக்கும் உரிமையில்லை. அதனை நிறுத்து

04 பக்கம் பார்க்க...

**வகுப்புக்கள்**

**வட மாகாண ஆசிரியர் சேவைக்கான விசேட கருத்தரங்கு வகுப்பு**

கல்விசார் பொது அறிவும், பொது உளச்சார்பும்
11.12.2016 ஞாயிறு-09.00am-01.00pm
12.12.2016 திங்கள் -09.00am-01.00pm
13.12.2016 செவ்வாய்-09.00am-01.00pm

**விவசாய போதனாசிரியர் பரீட்சை வகுப்பு**
சனி 10.00 am -01.00 pm

**கணக்காளர் சேவை**
சனி 08.30 am -01.30 pm
ஞாயிறு 08.30 am -01.30 pm

**EB Class**
- அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான (Do) துரிதமீட்டல் வகுப்பு எதிர்வரும் 22/12 பரீட்சைக்கான விசேட மீட்டல் வகுப்பு
  சனி -03.00pm -06.00pm
  ஞாயிறு 04.00pm - 06.00pm
- PMA - I,II,III
  சனி - 03.00pm - 06.00pm
  ஞாயிறு - 04.00pm - 06.00pm
- அதிபர் சேவைக்கான வகுப்பு
  சனி - 4.30pm - 07.00pm

**சிங்கள வகுப்புக்கள்**
புதிய பிரிவு ஆரம்பம் - 10.12.2016
Batch - I சனி - 02.00 pm - 04.00 pm
Batch - II - 04.00 pm - 06.00 pm
மேற்படி வகுப்புக்கள் எமது கல்வி நிலையத்தில் வடமராட்சி மாணவர்களின் நன்மை கருதி பிரபல ஆசிரியர்களினால் நடத்தப்படுகின்றன.

உயர்கல்லூரி - NSB மேல்மாடி கொடிகாமம் வீதி, நெல்லியடி.
உயர்கல்லூரி No.81, பருத்தித்துறை வீதி, நெல்லியடி. (HNB Assurance Building)

தொடர்பு :T.P.:-0778760992, 0773443962



**பட்டதாரி ஆசிரியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டல் கருத்தரங்கு**

எதிர்வரும் 18ஆம் திகதி நடைபெறவுள்ள மேற்படி பரீட்சைக்கு தோற்றும் பட்டதாரிகளிற்கான பொது உளச்சார்பு மற்றும் பொது அறிவுப் பரீட்சைக்கான வழிகாட்டல் கருத்தரங்கு எதிர்வரும் 10, 11, 12, 13ஆம் திகதிகளில் திரு இ.சர்வேஸ்வரா (SLAS தகைமையுடைய) ஆசிரியர் மூலம் நடைபெறும்.

**ஆரம்பம்:-10.12.2016 சனிக்கிழமை மாலை 2 மணி**

நிர்வாகி
**புதிய உயர் கலைக்கல்லூரி**
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

தொ.பே:-
021 222 8148,
0776071954 (சி-6620)



அன்று தொட்டு இன்றுவரை கல்வியின் சிகரம்
'நாளை ஆரம்பம்'

**விக்னா கல்வி நிறுவனம்**
52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 077 662 9137,

**புதிய கல்வியாண்டு 2017**
தரம் **6, 7, 8, 9, 10, O/L**
மாலை நேர வகுப்புக்கள்
- தீவக மாணவர்களுக்கான விசேட பிரிவு.
- அலகு ரீதியான மீட்டலும், மாதாந்தப் பரீட்சையும்.
- கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் இயங்கும் யாழின் தன்னிகரில்லா நிறுவனம்.
- அனுமதிகள் இன்று முதல்.

சுபநேரத்தில் ஆரம்பம்
**10 - 12 - 2016** 11 மணி சனி
(C-6657)



**அரச அபிவிருத்தி உத்தியோகஸ்தருக்கான தடைதாண்டல் பரீட்சைக்குரிய துரித வழிகாட்டல் கருத்தரங்கு**

அரச அபிவிருத்தி உத்தியோகஸ்தருக்கான தடை தாண்டல் பரீட்சைக்குரிய வழிகாட்டல் கருத்தரங்கு துறைசார் விரிவுரையாளர்களினால் நடாத்தப்படும்.

விரிவுரைகள் ஆரம்பம்:-10/12/2016 தொடக்கம் 6 நாட்கள் நடைபெறும்.

10, 11, 12, 13, 17, 18 திகதிகளில் 2PM-5PM நடைபெறும்.

021222 8148,
0776071954,
0778469721 (சி-6591)

**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.


## ஒன்றையாட்சி...

றையாட்சிக்குள் அதிகாரத்தை எவ்வாறு பகிர்வது என்பது தொடர்பில் சுதந்திரக் கட்சி சிந்திப்பதாகக் குறிப்பிட்டார்.

தேசியப் பிரச்சினையை தீர்ப்பதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பங்களிப்பு அவசியம் எனவும் அமைச்சர் வலியுறுத்தினார்.

அவர் மேலும் கூறுகையில்,

2000ஆம் ஆண்டு அரசியல் யாப்பிற்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட அனைவரும் கையுயர்த்தினர். அந்த யாப்பில் ஒற்றையாட்சி முறைமை தொடர்பிலா முன்மொழியப்பட்டுள்ளது என இன்று விமர்சனங்களை முன்வைப்பவர்களிடம கேட்க விரும்புகின்றேன்.

சந்திரிகா அரசாங்கம் கொண்டு வந்த அந்த யாப்பிற்கு அனைவரும் அங்கீகாரம் வழங்கினார்கள். ஐக்கிய தேசியக் கட்சியே அதற்கு தீமூட்டியது. ஆகவே அந்த யாப்பினை போல் அல்ல இது. ஒற்றையாட்சிக்குள் முழுந்தளவு அதிகாரத்தை பகிர்வது தொடர்பிலேயே நாம சிந்திக்கின்றோம். இந்த செயற்பாட்டில் சுதந்திரக் கட்சி என்ற வகையில் எமது பங்களிப்பு அவசியம். அதிலிருந்து விலகிச் செல்ல முடியாது. அதிலிருந்து விலகி நாம் செயற்படுவதால் இந்த பிரச்சினையை மேலும் மேலும் வளர்த்துவிட்ட பங்காளியாக நாம் மாறுவோம். ஆகவே அதுவல்ல எமது நோக்கம்.

இந்த பிரச்சினையை தீர்ப்பதற்கு எடுக்கப்பட்ட பல முயற்சிகள் தோல்வியடைந்தன. யுத்தம் நிறைவடைந்துள்ள இந்த நிலையில் இந்த பிரச்சினையை தீர்ப்பது தொடர்பில் தமிழ்த் தலைவர்களுடன் பேச வேண்டும் என அமைச்சர் தயாசிறி தெரிவித்தார். (செ-11)


**வட மாகாண ஆசிரியர் தெரிவுப் பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு**

வவுனியாவில்
**BCS International (Pvt) Ltd**
வைரவப் புளியங்குளம்
ஞாயிறு (11/12), செவ்வாய்க்கிழமை (13/12)
காலை 9.00-3.00 மணிவரை
யாழ்ப்பாணக் கல்லூரிபட்டப்படிப்புகள் பிரிவு விரிவுரையாளர்களினால் நடைபெறும்.
தொடர்புகளுக்கு:-
0787928900, 0766883394



**பிரத்தியேக வகுப்பு**

இணைந்த கணிதம்
(ஆங்கில மொழி மூலம்)
தொ.இலக்கம்:
0772166655
(6878)



**போட்டிப் பரீட்சை விசேட கருத்தரங்குகள்**

**வட மாகாண ஆசிரியர்**
சனி, ஞாயிறு, திங்கள்
காலை 9.00-3.00 மணிவரை

**கணக்காளர் சேவை**
சனி, ஞாயிறு, திங்கள், செவ்வாய்
காலை 9.00-4.00 மணிவரை

**D.O, G.S, EB Exam**
சனி, ஞாயிறு, திங்கள், செவ்வாய்
காலை 9.00-3.30 மணிவரை

**தொழில் அலுவலர்**
ஞாயிறு 2.00-5.00 மணிவரை

சகல போட்டிப் பரீட்சைகளுக்கு மாலை வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
0766883394, 021 222 3382
**யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு**
(யாழ்.ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கி அருகில்)
(சி-6527)



**புலமைப்பரிசில்-2017**

தரம் 5 மாதிரிப் பரீட்சையும் விசேட வகுப்பும்
ஆரம்பம்:-11.12.2016 (ஞாயிறு காலை 8 மணி)
- நாவலர் வெளியீடுகளான-புலமை அரும்பு, "புலமைச் சிட்டு"
- ஞாயிறு தோறும் பரீட்சை
- வெளி மாணவர்களின் வசதிக்காக விரும்பிய 6 நேரங்களில் பரீட்சை.
- அதிகூடிய புள்ளி பெறும் மாணவர்களுக்கு சிறப்புப் பரிசுகள்.

தொடர்புகளுக்கு
**நாவலர்**
ஆனைப்பந்தி சந்தி, யாழ்ப்பாணம்.
T.P:-0774598440
(சி-6626)



**கோலாகல திறப்பு விழா அழைப்பிதழ்**

**ஆஸ்பத்திரி பின் வீதி ஞானம்ஸ் ஹோட்டலுக்கு அருகில் இயங்கிய யாழ் புத்தகசாலை**

09.12.2016 நாளை காலை 7.30 மணியளவில் புதிய முகவரியில் திறந்து வைக்கப்படுகின்றது.

**திறப்புவிழாவை முன்னிட்டு விசேட விலைக்கழிவில் பொருட்களைப் பெற்றுக்கொள்ளலாம்**

புத்தகங்களுக்கு : 10% - 20 %, காகிதாதிகள், எழுதுபொருட்கள்,
அப்பியாசக் கொப்பிகள் : 10 % - 40 %

தொடர்புகளுக்கு :- யாழ் புத்தகசாலை
இல.22 A, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
(வண்ணார்பண்ணை சிவன் கோவிலுக்கு முன்பாக 25 யார் தூரத்தில்.)
021 221 7874 / 021 492 7568

கிளை - யாழ் புத்தகசாலை
கனகபுரம் வீதி, கிளிநொச்சி.
(கனகபுரம் விளையாட்டரங்குச் சந்தி)
021 492 7925
(C-6603)



**அனைத்து நாடுகளுக்குமான விரைவு பொதிகள் சேவை**

**விசேட விலை குறைப்பு**



UK-550*/=Kg
DELIVERY IN 3 - 5 DAYS

மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்.

தொடர்புகளுக்கு: 0768226243
- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- நெல்லியடி
- வல்வெட்டித்துறை

V2 TRAVELS
(C-6600)



**வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை**



பண்டிகைக்காலத்தில் உங்கள் உறவுகளுக்கு பெறுமதியான பொருட்களையும் கடிதங்களையும் விரைவாகவும் குறைந்த விலையிலும் அனுப்பிட
021 221 5656
070 330 5500

அண்ணா & கோ
976, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்
(C-6613)



சிவமயம்
"ஆற்றுவா ராற்றல் பசியாற்றல் அப்பசியை மாற்றுவா ராற்றலின் பின்"

**விற்பனைக்கு**

யாழ்.நல்லூர் முருகன் கோவிலுக்கு அண்மையில் கோவில் வீதி முகப்புடன் 10 பரப்பு காணியுடன் கூடிய வீடும் மற்றும் பிறவுண் வீதியில் 2 வீடும். யாழ்.நகரின் வர்த்தக மையப்பகுதியில் பஸ் தரிப்பிடத்திற்கு முன்பாக ஆஸ்பத்திரி வீதியில் 50 அடி அகலமும் 300 அடி நீளமும் கொண்ட காணித்துண்டும் யாழ். மானிப்பாய் வீதியில் 3 பரப்பில் அமைந்த வீடு வளவும் விற்பனைக்குண்டு. யாழ்.வைத்தியசாலை வீதியில் 2 கடைகள் 2 மாடி கட்டடத்துடன் உடன் விற்பனைக்குண்டு. திருநெல்வேலி பலாலி வீதியில் 6 பரப்புடன் கூடிய வீடும் பலாலி வீதி முகப்புடன் செலலங்கா முன்பாக 10 பரப்பு காணித்துண்டும். K.K.S வீதியில் தட்டாதெரு சந்திக்கு அண்மையில் பழைய வீட்டுடன் 10 பரப்பு காணியும் சுண்டுக்குளியில் A9 வீதியில் பஸ்ரியான் ஹோட்டல் முன்பாக 6 பரப்பு வெற்றுக்காணியும் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு முன்பாக காந்தி வீதியில் 10 பரப்பு காணியும் யாழ்ப்பாணம் விக்ரோறியா வீதியில் 22 பரப்பு வெற்றுக்காணியும் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் வின்சன் தியேட்டருக்கு அண்மையில் 10 பரப்பு காணியும்,

பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்திக்கு அண்மையில் 6 பரப்பு காணியும் கொழும்பு செட்டித் தெருவில் 4 பேர்ச் இல் அமைந்த கடையும் 6 பேர்ச் இல் அமைந்த கடையும், யாழ்ப்பாணம் கே.கே.எஸ் வீதியில் 5 பரப்பு காணித்துண்டும். பண்ணையில் கொழும்பு பஸ் தரிப்பிடத்துக்கு முன்பாக 10 பரப்பு காணித்துண்டும். சுண்டுக்குளி A9 வீதியில் வஸ்தியாம் ஹோட்டலுக்கு அருகில் 3 பரப்புடன் கூடிய வீடும் விற்பனைக்கு உண்டு. கஸ்தூரியார் வீதியில் 3 பரப்புக் காணி (அன்றா பதிப்பகத்திற்கு அண்மையில்)
(C-6563)

**தொடர்பு:-கனகசபை தர்மகுலசிங்கம், இல.189, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 077 723 2535**


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.12.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.